பதினாறு

# ஒப்பாரிக் கட்டடம்



சரஸ்வதி புத்தகசாலை,

175 செட்டியார் தெரு.

விலை] கொழும்பு. [ரூபா 1-25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கடவுள் துணை

பதிநூறு

# ஒப்பாரிக் கட்டம்



சரஸ்வதி புத்தகசாலை,

175, செட்டியார் தெரு,

விலை] கொழும்பு. [ரூபா 1-25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதிலடங்கிய ஒப்பாரிகள்

1. புதிய நவீன ஒப்பாரி
2. பரிமள ஒப்பாரி
3. சகுந்தலா ஒப்பாரி
4. சாவித்திரி ஒப்பாரி
5. பஞ்சகல்யாணி ஒப்பாரி
6. சாரதா ஒப்பாரி
7. சிங்கப்பூர் ஒப்பாரி
8. மரகத ஒப்பாரி
9. காந்தாமணி ஒப்பாரி
10. இன்பரச ஒப்பாரி
11. அமிர்த ஒப்பாரி
12. பஞ்சரத்தின ஒப்பாரி
13 எமலோக ஒப்பாரி
14. கனகரத்தின ஒப்பாரி
15. அற்புத ஒப்பாரி
16. அம்பிகாபதி ஒப்பாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

பார்புகழும் ஏ. டி. ஏகாம்பரடீச்சர் எழுதிய

# புதிய நவீன ஒப்பாரி

### வெண்பா

சீர்புகழும் சீமான் பேர்பெற்ற
நாடு கெம்பீரன் சத்தியநாதன்
சீஷன் அன்பன் ஏகாம்பரம் பாடுதற்கு
பெருமையாய் வாரும் சாஸ்வதியே.

1 சீட்டி புடவைகட்டி என்னைப்பெற்ற அம்மா
நான் பிறந்த சிந்தாதிரிப் பேட்டை வந்தால்
நான் சிருக்கு வாரேன் என்று இரண்டு
சேவகரை அண்ணி காவல்வைத்தாள்

2 பட்டு புடவைகட்டி என்னைப்பெற்ற அம்மா
நான் பிறந்த பட்டணம் வந்தால் இன்றைக்கு
பங்குக்குவாரேன் என்று அண்ணி இரண்டு
பரதேசியை காவல்வைத்தாள்

3 தாயார் இருந்தாக்கா தாலி அழுக்கொடுப்பாள் என்
தலைமயிரும் சிக்குடைப்பாள் என்
தாயாரிறந்துவிடவே தாலி அழுக்காச்சி
தலைமயிரும் சிக்காச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 கண்ணுசிறுத்தவள் என்சக்காளத்தி
கணுக்காலு பெருத்தவள் இன்றைக்கு
கட்டின கட்டாலே என் புருஷன்
கண்ணெடுத்து பார்க்கவில்லே

5 இடுப்புசிறுத்தவள் என்னைப்பெற்ற அம்மா
இருதுடையும் பெருத்தவள்
இட்டமருந்துகளை என் புருஷன்
என்னை ஏரெடுத்து பார்க்கலேயே

6 பாம்புக்கும் பக்ஷிக்கும் என்னைப்பெற்ற அம்மா
பறித்துதின்ன தோப்பு வைத்தேன் இந்த
பாப்பார செல்விக்கு எனக்கு
பக்கத் துணையாகவைத்தே

7 குருவிக்கும் பக்ஷிக்கும் என்னைப்பெற்ற அம்மா
குந்தி தின்ன தோப்பு வைத்தேன்
இந்த கூடார செல்விக்கு எனக்கு
கூடதுணை யாரைவைத்தே

8 முன்னே தெரியுதுபார் முருகரிட கோவிலது
முருகரை பார்ப்பதற்கு முந்தி வழிநடந்தேன்
முருகர்கொடுத்தவரம் என்னைப்பெற்ற அம்மா எனக்கு
முன்னம் தெரியலியே

9 வழியில் தெரியுதுபார் வடிவேலர் கோவிலது அந்த
வடிவேலே பார்ப்பதற்கு நான் வழியாய் வழிநடந்தேன்
வடிவேலர் கொடுத்தவரம் எனக்கு
வழியும் தெரியலியே

10 பக்ஷிவந்து ஊஞ்சலாடும் என்பத்தாவும் நானும்
படுத்து நித்திரை செய்கையிலே இன்றைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழான பால்நாகன் வந்து
என் பத்தாவை கடித்ததம்மா

11 அன்னம்வந்து ஊசலாடும் என் ஆளனும் நானுமாக
அரண்மனே தேடியல்லோ அலண்டுநித்திரை செய்கை
இந்த ஆகாத நாகன்வந்து [யிலே
என் ஆளனே கடித்ததம்மா

12 கோர்க்கும் பவழமணி என்னைப்பெற்ற அம்மா
கோபுரத்தில் அசையும்மணி எனக்கு
கோர்க்கத் தெரியாத
குருடனுக்கு தானம் பண்ணேன்

13 கட்டும் பவழமணி என்னைப்பெற்ற அம்மா
காத்தில் அசையும்மணி இன்றைக்கு
கட்டத் தெரியாத என்னே
கள்ளனுக்கு தானம்பண்ணுர்

14 தாலி சரடு உண்டு என்னைப்பெற்ற அம்மா
தலைநிறைந்த மல்லிஉண்டு எனக்கு
தாலி தரிக்கலியே என்னைப்பெற்ற அம்மா
தேவர் மகன் தேடலியே

15 மாலை சரடு உண்டு என்னைப்பெற்ற அம்மா
மாடிநிறைந்த ரோஜா உண்டு எனக்கு
மாலை தரிக்கலியே என்னைப்பெற்ற அம்மா
மணவாளனே தேடலியே

16 சிட்டுகுருவிகளாம் என்னைப்பெற்ற அம்மா
செடியில் குந்தும் பக்ஷிகளாம்
செல்வியும் புலம்புறது உங்கள்
ஜீவன்பரி போகுதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 மஞ்சா குருவிகளாம் என்னைப்பெற்ற அம்மா
மரத்தில் குந்தும் பக்ஷிகளாம்
மைந்தன் புலம்புறது உங்கள்
மாயன்பாதம் சேரலாமா

18 ஜாதி எலுமிச்சம் என்னைப்பெற்ற அம்மா
சமுத்திரத்து நெல்வாழை
ஜாதியிலும் காய்க்காத என்னைப்பெற்ற அம்மா
ஜாதிதப்பி காய்க்கலாமா

19 கொத்து எலுமிச்சம் என்னைப்பெற்ற அம்மா
கோத்திரத்து நெல்வாழை இன்றைக்கு
கொத்திலேயும் காய்க்காத என்னைப்பெற்ற அம்மா
கொத்துதப்பி காய்க்கலாமா

20 ஜாதியில்பெண்பிறந்து சாய்ந்தழுதாலும் ராணிஸ்தலம்
கோடிக்கும்ராமர்மலே ஓசையிடும்ராமர்மலேதேவடியாள்
தாளத்தை நிறுத்திடுவாள் என்னைப்பெற்ற அம்மா
தனிவோசை கேட்டழுவாள்

21 அத்தாங்களா ஓரத்தில் அக்னிதீபம்மூட்டி
ஆண்டவனே பூசைசெய்தேன் ஆகாயத்தில்போனஈசர்
அளித்தார் வரங்களங்கே வரத்தையும்வாங்கிகொண்டு
வாங்கி சேவித்தேனம்மா

22 கானகத்தில் குந்திநான் கட்டைவெட்டிதீபம்மூட்டி
கடவுளேயேபூசைசெய்தேன் கைலாயத்தில்போனஈசர்
காலன்வரம் தந்தாராம் வரத்தையும்வாங்கிகொண்டு
வணங்கி சேவித்தேனம்மா

23 ஜாதி திருவாழை சமுத்திரத்து நெல்வாழை
இது சாதி திருவாழைஎன்று என்னைப்பெற்ற அம்மா
என்னை சலியவைத்து போகலாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 பொன்னு கிலிகிலுப்பு என்னைப்பெற்ற அம்மா
பொக்கடிக்கும் கண்ணாடி எனக்கு
பொக்கை யொடிப்பாரில்லை
பெண்குறையை கேழ்ப்பாரில்லை

25 வாங்கும் கிலுகிலுப்பு என்னைப்பெற்ற அம்மா
வாக்கொடிக்கும் கண்ணடி
வாக்கை யொடிப்பாரில்லை என்னைப்பெற்ற அம்மா
வரிசையிட்டு பார்ப்பாரில்லை

26 பத்துரூபாய் செலவழித்து என்னைப்பெற்ற அம்மா
பாசஞ்சேரு ஏறிவந்தேன் எனக்கு
பாசஞ்சேரு தவறினதால்
ஏரோபிளான் ஏறிவந்தேன்

27 எட்டுரூபாய் செலவழித்து என்னைப்பெற்ற அம்மா
எக்ஸ்பிரஸ் ஏறிவந்தேன் எனக்கு
எக்ஸ்பிரஸ் தவறினதால்
ஏரோபிளேனைப்போல் பறந்தேன்.

புதிய நவீன ஒப்பாரி முற்றிற்று

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவீ நித்திய பாராயணஷ்டகம்

விலை அணு 10.

இதில் அடங்கியிருக்கும் விஷயங்களாவன:

ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டகம், லக்ஷ்மீ ஸ்தோத்ரம், லக்ஷ்மீ அஷ்டோத்தரம், 108 - அர்ச்சனை, ஸரஸ்வதி அஷ்டகம், துவாதஸநாம ஸ்தோத்ரம், ஸரஸ்வதி ஸ்தோத்ரம், அஷ்டோத்திரம், 108 - அர்ச்சனை, அன்னபூர்ணஷ்டகம், ராஜராஜேஸ்வரீ அஷ்டகம், பிரமராம்பாஷ்டகம், கங்காஷ்டகம், துளஸீ கவசம், துளஸீ ஸ்தோத்ரம், காமாக்ஷீ ஸ்தோத்ரம், மீனாக்ஷீ ஸ்தோத்ரம், மீனாக்ஷீ பஞ்சரத்னம், த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம், ஶ்யாமளா தண்டகம், ஶ்யாமளா நவரத்னமாலிகா, அம்பா பஞ்சரத்னம், இந்த 22-விஷயங்களும், இதற்கு தகுந்த ஐதீக பிம்பங்களையும் சேர்த்து அச்சிட்டிருக்கிறது.

## ஸ்ரீ விஷ்ணு நித்திய பாராயணஷ்டகம்

விலை அணு 8.

இதில் அடங்கியிருக்கும் விஷயங்களாவன:

ஸ்ரீ விஷ்ணு ஸ்தோத்ரம், ஷோடஶநாம ஸ்தோத்ரம், விஷ்ணோ ரஷ்டாவிம் ஶதநாம ஸ்தோத்ரம், ஸங்கட நாஶன விஷ்ணு ஸ்தோத்ரம், விஷ்ண்வஷ்டகம், விஷ்ணு அஷ்டோத்தர ஶத நாமாவளி:, நாரஸிம்ஹாஷ்டகம், ஸ்ரீ ரங்கநாத ஸ்தோத்ரம், ரங்கநாதாஷ்டகம், ஸ்ரீ வரதராஜ ஸ்தோத்ரம், தேவராஜாஷ்டகம், ஸ்ரீ வெங்கடேஶ்வர ஸ்தோத்ரம், வெங்கடேஶ்வர வஜ்ரகவச ஸ்தோத்ரம், வெங்கடேஶ்வராஷ்டோத்தர ஶதநாம ஶ்லோகா:, ஸ்ரீ வெங்கடேஶாஷ்டோத்தர ஶத நாமாவளி:, வெங்கடேஶப்ரபத்தி, ஸ்ரீ ராமசந்திராஷ்டகம், ராமாஷ்டோத்தர ஶதநாம ஸ்தோத்ர:, இன்னும் அநேக தோத்திரங்கள் அடங்கி யிருக்கின்றன.

கிடைக்குமிடம்:— சரஸ்வதி புத்தகசாலை,
175, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்து தாஸ் அவர்கள்

இயற்றிய

# பரிமள ஒப்பாரி

## வெண்பா

துலங்கும்செம் பொன்னிறமேனி
தூயசத்தின் புதல்வா
விரும்பிப் பரிமளஒப்பாரி விளம்பினேன்
கலங்கமிலா கஜமுகனே கருணைபுரி கழரிடவே
பழங்கிடைக்குமென பானைப்பணிந்தவனே.

## தகப்பனுருக்குப் புலம்பல்

ஆலம் விழுதுகொண்டு என்னைப்பெற்ற அப்பா
நான் பாவி ஐந்துவிதக் கால்கள்நட்டு
ஆகாயப் பந்தலிட்டு அரும்பு மலர்தொடுத்து
உனக்கு ஒரு அழகுரதம் செய்துவைத்து
அந்த அழகுரதத்திற்குள்ளே
என்னைப்பெற்ற அப்பா
நீபெற்ற செல்வி
அலரித்தவித்து அடித்துப் புலம்புவது
நீங்கள்போற அறனடிக்கே கேழ்க்கலையோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்க விழுதுகொண்டு என்னைப்பெற்ற அப்பா
நான் புதுவிதமாய் காலூநட்டு
பூவால் சரந்தொடுத்து பூலோக பந்தலிட்டு
உனக்கு ஒரு பொன்னூரதம் செய்துவைத்து
நீ பெற்ற செல்வி
நான் புகுந்து புலம்பி பொன்னுல் அழுகிறது
நீங்கள்போற புவனடிக்கே கேழ்க்கலையோ.

சிகப்புழைத்து கட்டின என்னைப்பெற்ற அப்பா
ஒரு சித்திரக்கல் மண்டபமே
அங்கே செல்வக் கிளிபறக்கும்
என்னைத்தேடிய சீமானின் கோபுரமே
அந்த சீமானின் கோபுரத்தில்
நான் செல்வி புலம்புறது
நீங்கள்போற சிவலோகம் கேழ்க்கலையோ.

பவுனுருக்கிக்கட்டின என்னைப்பெறற்ற அப்பா
வாழும் வாசலிலே ஒரு பாங்கான மண்டபமே
அங்கே பச்சைக் கிளி பறக்கும்
என்னைக்கொண்ட பாண்டியரின் கோபுரமே
அந்த பாண்டியரின் கோபுரத்தில்
நான் பாவி புலம்புறது
நீங்கள்போற பரமலோகம் கேழ்க்கலையோ.

## தாயாருக்குப் புலம்பல்

புன்னைமரச் சோலைகளும் நான்பிறந்த வாசலிலே
பொற்றுமரைக் குளமும் பொன்னும் படித்துரையும்
என்னைப் பெற்ற தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்ப சீமை போலீசு காவல்களும்
அந்த பொற்றாமரைக் குளத்தில்
நீ பெற்ற பெண்ணாள் தலைமுழுகி
பொழுப்பி மயிராத்தி உன்னுடன்
வாசபொழுதோடு நானும் வந்தால்
என்னைப் பெற்றவளை இழந்த
பெரும்பாவி வாரேன் என்று
இந்தப் பூலோகத்தார் சொல்லுகிறார்
என்னைப் பெற்ற தாயே
நீங்கள்போற பொன்னுலகு சம்மதமோ.

தென்னைமரச் சோலைகளும் நான்பிறந்த வாசலிலே
ஒருசெந்தாமரைக் குளமும் திருமதில் படித்துறையும்
நம்ம சீமை சிப்பாய்கள் காவல்களும் அந்த
செந்தாமரைக் குளத்தில்
நீ பெற்ற செல்வி தலைமுழுகி
சீவி மயிராத்தி உன்னுடைய வாசலுக்கு
சீக்கிரமாய் வந்தாலும்
என்னைப்பெற்ற தேவியைத் தோற்ற
சின்ன மகள் வாரேனென்று
இந்த தெருவிலுள்ளோர் சொல்லுகிறார்
என்னைப்பெற்ற தாயே நீங்கள் போகும்
தெய்வலோகம் சம்மதமோ.

தங்கம் உருக்கியல்லோ தனித்தங்கம் ஓடாறுத்து
என்னைப்பெற்ற தாயே
நீபெற்ற செல்வி நான் தங்கிவருவதற்கு
தாவாரம் பந்தலிட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கண்ணுமறைந்த உடனே
தாவாரப் பந்தலிலே தங்கி வருவமென்றால்
உன்னைக்கொண்ட தருமருக்கு வந்த
சதிகாரி சின்னயி அந்த தாவாரப் பந்தலிலே
தங்காதே யென்று சொல்லி
என்னைத் தலையில் அடிக்கிறாளே
என்னுடன் தருமப்பிறப்போடு
தன்மையுள்ள தம்பியோடு
என்னைப்பெற்ற தாயே
நான் தவித்து புலம்புகிறேன்.

பவுனை உருக்கியல்லோ பக்குவமாய் ஓடமுத்து
என்னைப்பெற்ற தாயே
நீ பெற்ற பாவி வருவதற்கு
பாதைவழி பந்தலிட்டே
உங்கள் கண்ணுமறைந்த உடனே
அந்த பாதைவழி பந்தலிலே
படுத்துறங்க வந்தாலும்
உன்னைக்கொண்ட பாண்டியர்க்கு வந்த
பழிகாரிசின்னயி அந்தப் பாதைவழிப் பந்தலிலே
படுக்காதே என்று என்னை பலஷிதமாய் பேசுறாளே
என்னைப்பெற்ற தாயே
நான் பாலப்பிறப்போட
என்னோட பதமறியா தம்பியோடு
நான் பாவி பதரிப் புலம்புறேனே.

## புருஷனுக்குப் புலம்பல்

மலைக்கு மலைநடுவே மயிலாடும் கானலிலே
நான் பிறந்த மகாராஜர் வாசலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை தேடியசாமி
நான் மாணிக்க வேலிகட்டி
மல்லிகைத் தோட்டம் வைத்து
மயிலாள் நான் காத்திருந்தேன்
அந்த மல்லிகைபூர்த்து மலர்ந்துவரும் வேளையிலே
நான் கடுகு நிறங்குலேந்தேன்
கஸ்தூரி வாசங்கெட்டேன்
மிளகு நிறங்குலேந்தேன்
முல்லேப்பூ வாசங்கொண்டேன்
என்னைக்கொண்ட மன்னவரைக் கொள்ளையிட்டேன்
நான் பாவி மனக்கவலே ரொம்பவல்லோ.

சிலேக்குச் சிலேநடுவே செண்டாடும் கானலிலே
நான் பிறந்த செல்வருட வாசலிலே
நான் செண்பகத் தோட்டம்வைத்து
என்னைத்தேடிய சாமி
செல்வியும் காத்திருந்தேன்
அந்த செண்பகம் பூர்த்து
செழித்துவரும் வேளையிலே
நான் பவுனு நிறங்குலேந்தேன்
பச்சை ஒளிவுகெட்டேன்
நான் பொன்னு நிறங்குலேந்தேன்
புஷ்பராகம் ஒளிவுகெட்டேன்
என்னைக்கொண்ட சீமானைக் கொள்ளையிட்டேன்
நான் பாவி எனக்கு சிந்தைகுறை ரொம்பவல்லோ.

தேன் மணக்கும் தென்னுடு
திருச்செந்தூர் வேலனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தேடிய
மானே மரகதமே மட்டில்லா சங்கீதமே
நான் தேவி தவமிருந்து
ஒரு செல்வன்வரம் கேழ்க்கையிலே
அந்தத் தென்னாட்டுப் பண்டாரம்
நான் தேவி முகம்பார்த்து
ஒரு செல்வனைக் கைகொடுத்தார்
அந்த செல்வனுட தோஷமல்லோ நான் பாவி
என்னைக்கொண்ட சீமானைக் கொள்ளையிட்டேன்.

பால் மணக்கும் தென்னாடு பழனிமலை வேலனிடம்
நான்பாவி தவமிருந்து ஒரு பாலன்வரங் கேழ்க்கையிலே
அந்த பண்டார சண்முகம்
இந்தபாவி முகம்பார்த்து
ஒருபாலகனைக் கைகொடுத்தார்
அந்த பாலனுட தோஷமல்லோ நான்பாவி
என்னைக்கொண்ட
பாண்டியரைக் கொள்ளையிட்டேன்.

## மகனுக்குப் புலம்பல்

வெள்ளைக் குதிரையிலே அடா
நான்பெற்ற செல்வமே நீ
வெள்யினால் ஜீனிவைத்து
விரலால் சவுக்கெடுத்து நீவேகமாய் தட்டிவிட்டால்
வேடர்கள்நாடாது வில்லியர்கள்ஓடாது
வெள்ளிமலைநாடு அடேநான்வளர்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே கருவிழியே கற்கண்டே தேன்மொழியே
அந்த வெள்ளிமலைநாடு விடியற்காலம் போனாலும்
அந்த வெள்ளிமலை குள்ளிருக்கும்
இரண்டு வேங்கை சரணமிடும்
என்னைக்கண்டு ரெண்டு வெள்ளானை தெண்டனிடும்.

கருப்பு குதிரையிலே அடே நான்பெற்ற செல்வமே
நீ கல்லிழைத்த ஜீனிவைத்து
கையில் சவுக்கெடுத்து நீ காலாலே தட்டிவிட்டால்
கருப்பு மலைச்சாடு அடேநான் வளர்த்த
மதுரமொழியே மணக்கும் நல்ல செண்பகமே
நான் பத்துமாதம் சுமந்த பாலகனே கற்பகமே
இன்று காலமே போயிறங்கும்
அந்த கருமலை நாடு காலமே போனாலும்
கருமலைக் குள்ளிருக்கும் கரடி சரணமிடும்
ரெண்டு காட்டானை தெண்டனிடும்.

## மர்மியாருக்குப் புலம்பல்

பாச விசுவாசமுள்ள பக்ஷமிகும் அத்தையரே
உன்னைடைய வாசலிலே பால்பசு ஐந்திருக்கும்
பானைதயிர் மோர் யிருக்கும்.
உன்னுடைய நாளையிலே
பாலை யெடுத்தரியேன்
பானை தயிர் தொட்டரியேன்
இந்தப் பாரிலுள்ள பெண்கள்
என்னை தேடிய அத்தையரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பாவியென்று சொல்வாரென்று
நான் பதரி அழுகவந்தேன்.

கம்மல் ஜதை மூன்றிருக்கும்
என்னைத் தேடிய அத்தையரே
கைக்கட்டயம் ரெண்டிருக்கும்
கல்லட்டிகை நான்கிருக்கும்
என்னுடைய கண்களிலே காட்டாமே
என்னைத்தேடிய படுபாவி அத்தையரே
நான் கன்னிப் பருவத்திலே
காய் காய்க்கும் நாளையிலே
என்னை கம்மனுட்டி போலே என்னைக்
கலக்கம்கொள்ள வைத்தாயே
இந்தக் காசினியோர்க்கு பயந்து
நான் பாவி இப்போ கதரி அழுகவந்தேன்..

முற்றிற்று.

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை–1. (1953.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் துணை

ஸ்ரீஜத் R. T. தங்கமுத்து தாஸ்

அவர்கள் இயற்றிய

# சகுந்தலா ஒப்பாரி

கல்லிழைத்துத் தூணிருத்தி கனகமணி பந்தலிட்டு
கனகமணி பந்தலிலே என்னைப்பெற்ற தாயே
நான் கன்னி படுத்திருந்தால்
உங்கள் கண்ணுள்ள நாளையிலே கானகத்து வேடர்
கடுங்காவல் மெத்த உண்டு
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு காவலிழந்தேன்
கடுங்காவல் நானிழந்தேன்
நீ பெற்ற பெண்ணுள் கண்கலங்கி நோகுறனே 1

பவுனுருக்கித் தூணிருத்தி பவளமணி பந்தலிட்டு
என்னைப்பெற்ற தாயே பாங்கி படுத்திருந்தால்
உங்கள் கண்ணுள்ள நாளையிலே
பட்டணத்து வேடர் பலகாவல் தானுமுண்டு
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு பட்டணத்து வேடர்
பலகாவல் நானிழந்து
நீ பெற்ற பெண்ணுள் பதறி மனம் வாடுறனே 2

மாயவரத்திலே மகாதேவன் கோவிலிலே
என்னைப்பெற்ற தாயே மஞ்சள் நீராடிவரும்
மாடுகள் ரொம்பவுண்டு மாடுகளைக் கண்டு
மண்டியிட்டு கும்பிடாது மாரியடித்தது
என்னைப் பெற்றதாயே நீபெற்ற மங்கைதலை சுற்றுதம்மா 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரத்திலே கடவுளுட சன்னதியில்
கலைந்து நீராடிவரும் என்னைப்பெற்ற அம்மா
காளைகள் மெத்த உண்டு
அந்த காளைகளைக் கண்டு கையெடுத்து கும்பிடாது
காலாலுதைத்தது என்னைப் பெற்ற தாயே
நீ பெற்ற கன்னிதலை சுற்றுதம்மா 4

சன்னக்கடுதாசி என்னைப்பெற்ற அப்பா ஜாதிக்காய்
மைக்கூடு
சங்கதி யெழுதி நான் பாவி தங்கைக்கனுப்பிவிட்டால்
சங்கதி கண்டவுடன் என்னைப்பெற்ற அப்பா
சலங்கைமணி வண்டிகட்டி
ஜனுதி பயணமின்னு சங்கு முழங்கும்
உங்கள் வாசல் ஜயசங்கு ஓசையிடும் 5

மஞ்சள் கடுதாசி என்னைப்பெற்ற அப்பா
மாச்சக்காய் மைக்கூடு
மருமம் எழுதி நீங்கள் பெற்ற மங்கைக்கனுப்பிவிட்டால்
மருமமறிந்தவுடன் மதிப்பாக வண்டிகட்டி
என்னைப் பெற்ற அப்பா நான் மதலை பயணமின்னு
மணியுமுழங்கும் மலைமணியும் ஓசையிடும் 6

பொன்னை உருக்கியல்லோ புது தினுசா ஒடறுத்து
என்னைப்பெற்ற அப்பா பூந்தோட்டம் உண்டு செய்து
அந்த பூந்தோட்டத்துள்ளார் புஷ்பராக தூணிருத்தி
போட்டுவைத்தீர் கூடாரம் உங்கள் கண் மறைந்தநாழிகைக்கு
பூர்தோட்டந்தானழிந்து புஷ்பராகத் தூணும் பூமிமேல்
சாய்ந்து நான் பெண்ணுள் கலங்குறனே 7

சிகப்பை இழைத்துமல்லோ தினுசுக்கொரு ஒடறுத்து
என்னைப்பெற்ற அப்பா உங்கள் கண்ணுள்ள நாளையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செண்பகப் பூந்தோட்டம் வைத்து
அந்த செண்பகப் பூந்தோட்டத்திலே சிங்காரத்தூணிருத்தி
சிறுகூடம் போட்டு வைத்தீர்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
செண்பகப் பூந்தோட்டம் சீருகெட்டு தானழிந்து
சிங்காரத்தூணும் திட்டென்று தான் சாய்ந்து
நான் செல்விமனம் வாடுறனே 8

கருப்பு இரும்புப் பெட்டி என்னைத் தேடியசாமி
நான் கழட்டும்நகை வைக்கும்பெட்டி நான் கன்னியில் அறுத்தவள்
கணவனைத் தோற்றவள்
பிஞ்சிலறுத்தவள் புண்ணியரைத் தோற்றவள்
கன்னி துயர் கேட்டு கருப்பு இரும்புப் பெட்டி கலங்கி அழுகலாச்சோ
நான் கழட்டும் நகை மங்கலாச்சோ 9

தகட்டு இரும்புப் பெட்டி நான் தாலி வைக்கும் ட்ராங்குப் பெட்டி
என்னைத் தேடிய சாமி வாழும்பிராயத்தில் வல்லவரைத் தோற்றவள்
பூர்க்கும் பிராயத்தில் புண்ணியரைத் தோற்றவள்
நான் தங்கைதுயர் கேட்டு தகட்டு இரும்புப் பெட்டி தயங்கி அழுகலாச்சோ
நான் பாவி தாலியும் மங்கலாச்சோ 10

சின்னநிலாஉறைக்க என்னைத்தேடியசாமி சீமைஒளியடிக்க
நீங்க சிந்தூரப் பொட்டுமிட்டு சீமை வழி போனாலும்
அந்த சீமையிலே உள்ளவர்கள் ஸ்ரீ ரங்கநாதர்
தெரு வீதி வாராரென்று சேவித்து கையெடுப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி வந்து கும்பிடுவார் உங்கள் சிந்தூரப்பொட்டு
சீமை வழிகாணுமல் தெருவு ஜனங்களெல்லாம்
தியங்கி அழுகிறுரே 11

பெரியநிலா உறைக்க பூமி ஒளிவடிக்க என்னைத்தேடியசாமி
பொட்டுமேல் பொட்டு வைத்து பூமி வழி போனலும்
அந்தப் பூமிதனிலுள்ளவர்கள் புலவர்பெருமாள் பூமி வழி
வாராரென்று
போற்றியே கையெடுப்பார் புத்தியென்று கும்பிடுவார்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு பொட்டுமேல் பொட்டு
பூமி வழி காணுமல் புழுங்கி மனம் வாடலாமோ 12

தங்க ரயிலேறி என் பிறவி அண்ணுவே தனுஷ்கோடி
போயிறங்கி
அந்த சாமியுட கோவிலிலே தவமிருக்கும் வேளையிலே
அந்தச் சதிகாரப் பாவி எமன் என் பிறவி அண்ணுவே
உங்களை தாவிப் பிடித்தானே தன் வசம் செய்தானே
உங்கள் தவமும் முடிவதெப்போ நான் பாவி உன்னுடன்
பிறந்த தங்கை குறை தீர்வதெப்போ 13

வெள்ளி ரயிலு வண்டி விராலிமலை போகும்வண்டி
வெள்ளி ரயிலேறி விராலிமலை போயிறங்கி
அந்த வேலனுட சன்னதியில் என்பிறவி அண்ணுவே
விரதமிருக்கையிலே
அந்த வேண்டாத பாவி எமன் விரட்டி அடித்தானே
வேடர் வசம் செய்தானே
உங்கள் விரதம் முடிவதெப்போ என் பிறவி அண்ணுவே
நான் பாவி உன்னுடன் பிறந்த விஜயா குறை
தீர்வதெப்போ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமேல் கொடிபறக்கும் என்னை கொண்டவரின்
பேர்விளங்கும்
கோடிஜனம் கூடிநிற்கும் கும்பிட்டுக் கையெடுக்கும்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு கொடியும்விழுகலாச்சோ
கோடிஜனமும் என்னைத்தேடியசாமி கூடியே
அழுகலாச்சோ 15

மதில்மேல் கொடி பறக்கும்
என்னைக்கொண்ட மன்னவரின் பேர்விளங்கும்
மகாஜனம் கூடிநிற்கும் மண்டியிட்டு கைதொழுவார்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு மதிலும் விழுகலாச்சோ
மகாஜனங்களெல்லாம் என்னைத் தேடியசாமி மயங்கி
அழுகலாச்சோ 16

கொறநாட்டுப் பொன் சரிகை கோர்த்து நெய்த சேலைமீது
குழந்தை மனம் நாட்டமென்றால்
கூட்டுப்பிறப்பு குணமுள்ள என்பிறப்பு
நாட்டுப்பிறப்பு நலமுள்ள என் பிறப்பு
கொறநாட்டுச்சேலை கொண்டுவருமென்வாசல்
கூட்டுப் பிறப்பிழந்தேன் கொறநாட்டை நானிழந்தேன் 17

காசிநகர் பொன் சரிகை கை நெசவு சேலை மீது
கன்னிமனம் வாட்டமென்றால்
ஆசைப்பிறப்பு அழகுள்ள என் பிறப்பு
வாசப்பிறப்பு வரிசையுள்ள என்பிறப்பு
காசிநகர் சேலையிலே கண்கலங்கி நோகுறனே 18

மாமதுரை வீதியிலே மாசித்தேரோடையிலே
மன்னவரும் நானும் மயில்போலமர்ந்திருந்தோம்
சண்டாளன் வாசலிலே சதிகாரன் சீமையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுலுருண்டை செய்து மன்னவரை நோகவைத்தாள்
நான் மங்கைதவிக்கிறேனே மன்னவரைகாண்பதெப்போ 19

தென்மதுரை வீதியிலே சித்திரத் தேரோடையிலே
சீமானும் செல்வியும் சேர்ந்தமர்ந்திருக்கையிலே
படுபாவி வாசலிலே பழிகாரன் சீமையிலே
சின்ன ஒரு அம்புபோட்டு என் சீமானை நோகவைத்தான்
செல்வி தவிக்கிறேனே சீமானை காண்பதெப்போ 20

பச்சை நீலக்கதவு பவள நிலக்கண்ணாடி
பார்த்து மகிழ்ந்து பந்தியிலே கார்த்திருக்க
பச்சை நீலக்கதவு பற்றி யெறிந்ததுவோ
பவள நிலக்கண்ணாடி பாழாய் உடைந்ததுவோ
நான் பாவியழுகிறது பரமலோகம் கேழ்க்கலையோ 21

பந்தடிக்கும் மேடையிலே படுத்துறங்கும் வேளையிலே
பக்ஷம்வைத்து பார்த்தாரோ பாசம் மறந்திட்டாரோ
பாசமுள்ள மருந்து பற்றினதோ உன் திரேகமெல்லாம்
பாசமறந்துவிட்டு நான்பாவி வாசல் பலவரிசை கொண்டு
பச்சைப்பட்டு சீருகொண்டு பார்க்க வருவதெப்போ 22

அரும்பிழைத்த மேடையிலே அமர்ந்திருக்கும் வேளையிலே
ஆசைவைத்து பார்த்தாரோ அவர் வீடு சேர்ந்தீரோ
அவர் ஆசை மறந்து நான் பாவி வாசல் அன்புடனே
வாரதெப்போ 23

போட்டோ பிடித்து புதினுசா சட்டமிட்டு
பூவாலலங்கரித்து பூசை செய்யும் வேளையிலே
பூலோக வாழ்வு போதுமென்று நின்றீரோ
நான் பெண்ணாள் கலங்குறேனே 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை மயிலாடும் பறந்து விளையாடும்
பழனிமலை சன்னதிக்கு பாண்டியரும் நானும்
படிகடந்து போகையிலே பச்சம் வைத்து பார்த்தாரோ
பாண்டியரை காணுமல் பதரி புலம்புறேனே 25

அழகு மலைமேல் அன்னம் விளையாடையிலே
அர்ஜுனரும் நானும் அடிகடந்து நானும் அரும்பாவி
வேசியாலே
அர்ஜுனரை நானிழந்து அவதிப்பட நாளோச்சோ 26

சாமி மலையோரம் தவசிருக்கும் வேளையிலே
சதிகாரி தாசிமகள் தவத்தை கலைத்தாளோ
என்னைப்பெற்ற அப்பா தன்வச மாக்கினளோ
சதிகாரி வீடு விட்டு என்னைப்பெற்ற அப்பா
நான் பாவியுடவாசல் சந்தோஷமாய் வார தெப்போ 27

அம்மன் மலையோரம் என்னைப்பெற்ற அப்பா
அருந்தவசு செய்யும் வேளையிலே
ஆகாத வேசிமகள் உங்கள் அருந்தவத்தைக் களைத்து
ஆசை கொடுத்தாளோ என்னைப்பெற்ற அப்பா
அவள் ஆசைதனை நீக்கி நான் பாவிவாசலுக்கு ஆனந்த
மாய் வாரதெப்போ 28

சிகப்பு குதிரையிலே சிகப்பிழைத்து சீனிவைத்து
சீவிமயிர் முடித்து நான் பெற்ற செல்வமே
சீக்கிரமே குதிரைதனை சிமிட்டா கொடுத்துவிட்டால்
சிவகிரி போயிறங்கும் சிவகிரிக்குள்ளிருக்கும்
சிட்டு சரணமிடும் உன்னைக்கண்டு செந்நாயும்
தெண்டனிடும் 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை மலையோரம் பகவானுட சந்நிதியில்
பாவி தவமிருந்து பாலன் வரம் கேட்கையிலே
அந்த பகவான் மனமிறங்கி ஒரு பாலன் வரம்
தான்கொடுத்தார்
பாலன் நிலைக்கலையே என்னைப்பெற்ற அம்மா
நான் பாவி துயராறலையே
பாலன் வருவதெப்போ நான் பார்த்து மகிழ்வதெப்போ 30

கொச்சிமலையோரம் குமரனுட சந்நிதியில்
என்னைப்பெற்ற அம்மா நான் கூடி தவமிருந்து
ஒரு குழந்தை வரம் கேட்கையிலே
குமரன் மனமகிழ்ந்து குழந்தையைக் கைக் கொடுத்தான்
அந்த குழந்தை நிலைக்கலையே என்னைப்பெற்ற தாயே
நான் குயிலால் குறை ஆறலையே
நான் குழந்தையை காண்பதெப்போ குயிலால் குறை
தீர்வதெப்போ 31

சகுந்தலா ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலயம், சென்னை-1. (1953.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்து தாஸ்

அவர்களால் இயற்றியது

சத்தியவான்

# சாவித்திரி ஒப்பாரி

1 காதாலேபேர்கேட்டு என்னைத்தேடியசாமி
உன்னைக்கணவராக நெஞ்சில்வைத்து நான்
கன்னிசிறையிருந்தேன் இப்போ
கன்னிசிறைவீணாச்சோ நீங்கள்
காலனார் போகலாமோ

2 புண்ணியர்பேர்கேட்டமுதல் என்னைக்கொண்ட
மன்னவனே உன்னை புருஷனென்று
நான்நினைத்தேன் பூவைசிறையிருந்தேன்
பூவைசிறைவீணாச்சோ என்னைத்தேடியசாமி
நீங்கள்பொன்னுலகு போகலாமோ

3 மன்னவனார்இல்லாமல் இந்தச்சண்டாளன்
சீமைமஞ்சளிழந்தேன் மணமிழந்தேன் நான்
பூவிழந்தேன் என்னைக்கொண்டமன்னவனார்
வாரதெப்போ மங்கைகுறை தீர்வதெப்போ

4 கொண்டவனார் இல்லாமல் இந்தச்சதிகாரன்
சீமைகும்மம் தானிழந்தேன்
குடமல்லிகைபூவிழந்தேன் என்னைத்தேடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணவந்தர் வாரதெப்போ நான்
குயிலாள்குறை தீர்வதெப்போ

5 பத்துமலைதாண்டி அந்தபழனிமலை சந்திலே
பகவானிருக்குமிடம் பார்வதியாள் தூங்குமிடம்
அந்தபகவானிடத்திலே என்னைத்தேடியசாமி
நான்பாங்கிகுறை சொல்லிவிட்டால்
பாவைப்பழம்தின்னவந்த பத்துலக்ஷம்
பக்ஷிகளும் பாவைபழம் தின்னுமல்
பறந்தோடி போகுதிப்போ

6 எட்டுமலையொதுக்கி இடும்பன்மலைதானொதுக்கி
ஈசனிருக்குமிடம் ஈஸ்வரியாள் தூங்குமிடம்
அந்தஈசனிடத்திலே என்னைக்கொண்ட
மன்னவரேநான் இருசிகுறைச்சொல்லிவிட்டால்
இலந்தைப்பழம் தின்னவந்த எட்டுலக்ஷம்
பக்ஷிகளும் எழுந்தோடிப் போகுதிப்போ

7 கருப்புகுதிரையேறி என்னைத்தேடிய மன்னவரே
நீங்க காசிக்கேபோனல் கர்ணமகாராஜா
கடவுள் வாராரென்று அங்கே
கையெடுப்பார் கோடிஜனம்

8 சிகப்புகுதிரையேறி என்னைத்தேடியசாமி
நீங்கசீரங்கம்போனலும் செங்கல்வராயரோ
தெரிசனமென்றுசொல்லி என்னைக்கொண்ட
மன்னவரேஉங்களை சேவிப்பார்கோடிஜனம்

9 நான்கடலோரம் தொட்டிகட்டி
காசாம்பூமெத்தையிட்டு நான்கன்னிபடுத்து
காலனுடஓலை என்னைக்கொண்டசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுவில் விழுந்ததுவே நான்
கன்னி புலம்புறது நீங்கபோன
காலனூர் கேழ்க்கலேயோ

10 தாவாரம்தொட்டிகட்டி தாழம்பூமெத்தையிட்டு
நான் தங்கை படுத்திருந்தேன்
தருமருடஓலேவந்து என்னைத்தேடிய சாமி
என் தலேயில்விழுந்ததுவே நான் தங்கைபுலம்புறது
நீங்கபோற தருமலோகம் கேழ்க்கலேயோ

11 சத்திரத்தைக்கட்டிவைத்தீர் சகலதர்மம்செய்தீர்
இந்தசண்டாள சீமை சத்திரம்பாழாச்சு
சகலதர்மம் வீணுச்சு

12 கூடத்தைக்கட்டிவைத்தீர் கோடிதர்மம்செய்தீர்
இந்தப்பாவியுடசீமை கூடமும்வீணுச்சு
கோடிதர்மம் பாழாச்சு

13 குதிரையின்மீதேறி என்னைக்கொண்ட மன்னவரே
கோட்டைக்கடந்தாலும் கொற்றவனுர் வந்தாரென்று
கும்பிடுவார் கோடிஜனம்

14 ஆனையின்மீதேறி அக்கினிகடந்தாலும்
என்னைத்தேடிய சாமி
ஆண்டவனுர் வாராரென்று
அடிபணிவார் கோடிஜனம்

15 சப்பரத்துமீதேறி சாலேகடந்தாலும்
என்னைத்தேடிய சாமி
சாமியவர் வாராரென்று
சரணமிட்டு கைதொழுவார்

16 தேரின்மேல் ஏறியல்லோ
என்னைத்தேடியசாமி நீங்க தெருவழியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாலும் தெய்வம் வாராதென்று
தெண்டனிட்டு கைதொழுவார்

17 நீபூஜைசெய்யும் மண்டபத்தே
பொன்விளக்கெரியும் என்னைத்தேடியசாமி
பொன்மணியும் ஓசையிடும்
உங்கள்கண் மறைந்த நாழிகைக்கு
என்னைத்தேடியசாமி பொன்னுலகில்
பொன்னு விளக்கணைந்து பூஜைமணி
ஓசையின்றி புலம்பி யழுகுதிப்போ

18 நீ தவமிருக்கும் மண்டபத்தே
என்னைத்தேடியசாமி தங்கவிளக்கெரியும்
தங்கமணியும் ஓசையிடும் உங்கள்
கண்மறைந்த நாழிகைக்கு தங்கவிளக்கணைந்து
தங்கமணியும் ஓசையின்றி தவித்துப்புலம்பு திப்போ

19 சந்தனக்கல்மேடையிலே நாமிருபேரும்
சதுரங்கமாடையிலே எந்தச்சண்டாளர்
பார்த்தாரோ சாபம் கொடுத்தாரோ
சந்தனக்கல்மேடை சதுரங்க மாடாமல்
தயக்கமாய் நிற்குதிப்போ

20 குங்குமக் கல்மேடை நம்ப கூடிவிளையாடையிலே
கொடும்பாவி பார்த்தாரோ
கொடுச்சாபம் தந்தாரோ
என்னைக்கொண்ட மன்னவரே
குங்குமகல்மேடை நாம் கூடிவிளையாடாமல்
இப்ப தர்க்கமாய் நிற்குதப்பா

21 படைமுகத்தில் நின்றாலும்
என்னைக்கொண்ட மன்னவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர்களுக்கு பதுங்கி ஒளிந்திடுவார்
ஏறெடுத்துப் பார்த்தாலும் என்னை தேடியசாமி
எதிரி நடுங்கி ஏங்கிப் பதுங்கிடுவார்

22 தங்க நிலாவெறிக்க என்னைக்கொண்ட மன்னவரே
நம்மவாச தாளம்பூ மெத்தையிருக்க
உனக்குவச்ச சதிகாரி காத்திருந்தாங்க
தாளம்பூ மெத்தைவிட்டு இந்தச் சதிகாரியை
கையமர்த்தி நீதருமராஜா பள்ளிக்கொண்ட
நான் தங்கைகுறை என்ன ஆகும்

23 பொன் நிலாவெறிக்க என்னைத்தேடிய ராஜாவே
உனக்கு பூபோட்ட மெத்தையிருக்க
நீங்க பூபோட்ட மெத்தைவிட்டு
பூவையை கையமர்த்தி என்னைத்தேடிய
புண்ணியனுர் பள்ளிகொண்டால்
பெண்குறையும் என்னுகும்

24 நாலு கடல்தாண்டி என்னைத் தேடியசாமி
உங்களை நாயகராய் வேணுமின்னே
நாட்டிலுள்ளோர் பொறுமை
என்னைக்கொண்ட நாயகரை நானிழந்தேன்

25 ஐந்து கடல்கடந்து என்னைத் தேடியசாமி
உங்களை அருச்சுனரை வேணுமின்னே
அடுத்தவர்கள் பொறுமை என்னைக்கொண்ட
அருச்சுனரை நானிழந்தேன்

26 சிகப்பு இரும்புபெட்டி
சிலைவைக்கும் டிரங்குபெட்டி
நான் சிறுசி லறுத்தவள் சீமானைத் தோற்றவள்
சிகப்பிரும்பு பெட்டியிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலைவைக்கும் டிரங்கினிடம்
செல்விகுறை சொல்லிவிட்டால்
சிலை யழுகலாச்சோ சிகப்பிரும்பு மங்கலாச்சோ

27 பச்சை இரும்புபெட்டி
பவுனு வைக்கும் டிரங்குபெட்டி
நான் பாதியி லறுத்தவள்
பாண்டியரைத் தோற்றவள்
பச்சை இரும்புப் பெட்டியிடம் பவுனுவைக்கும்
டிரங்கினிடம் பாவிகுறை சொல்லிவிட்டால்
பவுனும் அழுகலாச்சோ
பச்சைநிறம் மங்கலாச்சோ

28 வில்லெடுத்துக் கைபிடித்து வேகமுடன் தேரேறி
என்னைத் தேடியசாமி வீதிவழி போனாலும்
வில்லுக்கதிகாரி விஜயனென்று கைதொழுவார்

29 அம்பெடுத்துக் கைபிடித்து
என்னைத் தேடியமன்னர் அவசரமாய்த் தேரேறி
அன்புடன் வெளிபோனால்
அம்புக்கதிகாரி அர்ச்சுன ராஜனென்று
அனைவரும் கைதொழுவார்

30 மாலை தரிக்கையிலே என்னைத் தேடியசாமி
மாதவர்கள் பார்த்தாரோ
மனத்துயரம் கொண்டாரோ
மங்கையை தனியேவிட்டு
என்னைக்கொண்ட மன்னவரே
நீங்க மாண்டுவிட நீதியுண்டோ

31 தாலி தரிக்கையிலே என்னைத் தேடியசாமி
அந்த தானவர்கள் பார்த்தாரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மனது நொந்தாரோ
நான் தையலை தனியேவிட்டு
என்னைத் தேடியசாமி நீங்க சவமாக நீதியுண்டோ

32 பழனிமலைச் சந்நிதியில் பால்பசுவு கோடியுண்டு
பால்பசுவைக் காணாமல் பரமலோகம் போகலாமோ
பாவை புலம்புறது என்னைக்கொண்ட
பர்த்தாவே சம்மதமோ

33 கழுகுமலைச் சந்நிதியில் கறவைப்பசு கோடியுண்டு
கறவைப்பசு காணாமல் காலனூர் போகலாமோ
நான் கன்னி புலம்புறது
நீங்கபோற காலனூர் சம்மதமோ

34 சின்ன வயதிலே சிறுவயது நாளையிலே
நாங்க சிட்டுவிளை யாடையிலே
இந்தச் சிரமிவான் சீமையிலே
என்னைத்தேடிய சீமானைக் கொள்ளையிட்டேன்

35 ஐந்து வயதிலே அறியாத நாளையிலே
நாங்கள் அன்பாய் விளையாடையிலே
இந்த அரசழிவான் சீமையிலே
என்னைக்கொண்ட அருச்சுனனை நானிழந்தேன்

36 பட்டுடுத்தி குடைபிடித்து
பட்டணத்து வீதிவழி பக்கமாய் போனாலும்
பட்டணத்து வீதியெல்லாம் என்னைக்கொண்ட
மகுடமணியே பாண்டியனார் வாராரென்று
பார்த்த ஜனம் கையெடுக்கும்

37 சிலுக்கு உடுத்தியல்லோ
நீங்க சின்ன குடைபிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீரங்கத்து வீதி தெருவழியே போனாலும்
ஸ்ரீரங்கத்து வீதியெல்லாம் என்னைக்கொண்ட
மகுடமணியே சித்தஜனர் வாராரென்று
தெருவு ஜனம் கையெடுக்கும்

38 நான் உயிரையிழந்திடுவேன் என்னைத் தேடியசாமி
உன்னோடு உடன்கட்டை ஏறிடுவேன்
உத்தமரில்லாமல் இந்தப் படுபாவி வாசலிலே
நான் உருவம் குலையிறேனே

39 நான் மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தம்
சேர்ந்திடுவேன் என்னைத் தேடியசாமி
சிமைநான் மங்கையு மங்குறேனே

40 ஆத்தோரம் மண்டபத்தே அரவிப்பூ மேடையிலே
என்னைத் தேடியசாமி அன்னம்வந்துமே தின்னும்
ஆனந்தமா யிருந்தேன் அன்னம் உருமாறி
என்னைக்கொண்ட மன்னு அரவமாய் மாறினதோ

41 குளத்தோரம் மண்டபத்தே
குடமல்லிகை மேடையிலே
என்னைக்கொண்ட மன்னவரே
குயிலுவந்து மேயுதென்று
குணமாக நானிருந்தேன் குயிலு உருமாறி
என்னைத் தேடியசாமி கொடும்பாம்பாய் உண்டாச்சு

சத்தியவான் சாவித்திரி ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1953.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்துதாஸ் அவர்கள்

இயற்றிய

# பஞ்சகல்யாணி ஒப்பாரி

இன்றைக்கு தங்க சைக்கில் வண்டி என் கண்ணே
நீ பள்ளிக்கூடம் போகும் வண்டி
நீ பள்ளிக்கூடம் போயி அங்கு படிக்கிறீரென்றிருந்தேன்
உன் படிப்பும் முடிந்ததுவோ நீ பரமலோகம் சேர்ந்தாயடா
நான் பதறி அழுகுறேண்டா 1

சின்னஞ் சிறுவயதில் நான்பெற்ற என்மகனே
உன்னை சீராட்டி தொட்டிலிலே நான் வளர்த்து
அந்த எமனுக்கா பலி கொடுப்பேன்
தவமாய் தவமிருந்து நான்பெற்ற என்மகனே
உன்னை தாங்கிவளர்த்தேனே தாரணியில் உள்ளவர்கள் 2

சூரிய அம்சமென்பார் சுத்தவீர வம்சமென்பார்
சந்திர வடிவமென்பார் சந்தகுணாளனென்பார்
உன் கண்ணுக்கு மையுமிட்டு உன்னை கடைத்தெருவு
கூட்டிப்போனால்
அந்த கடைத்தெருவிலுள்ளவர்கள் கட்டி அணைத்திடுவார்
கனிவாயில் முத்தம் தந்திடுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கல்லான தூணுக்கு கனமோசம் வந்ததென்று
நான் கதறி அழகுறேனே 3

சந்தைக்கலர் வேஷ்டிகட்டி என் அருமையுள்ள
தம்பியரே நீ சரிகைதுண்டு மேல்போட்டு
தைமாதம் நம்மவீட்டுக்கு நீ சாய்ந்து வழிநடந்தால்
என் தன்மையுள்ள தம்பி வாராரென்று
சந்தோஷமாய் மனங்களிப்பேன், உன்கண்ணு
மறைந்தவுடன் கவலையும் ஆரலேயே 4

தங்கதம்பி வேஷ்டிகட்டி தாளாம்புசில்க்கு மேல்போட்டு
என் தன்மையுள்ள தம்பி நம்ப தாசிவீடுபோனல்
அந்த தன்மையுள்ள தாசிமார்கள் உங்களை தருமதுரை
வாராரென்று
தாங்கி அழைத்திடுவார் உனக்கு தாம்பூலம் தந்திடுவார் 5

மல்லிகைப்பூ மாலேக்கட்டி உங்களுக்கு மாயவரம்வேஷ்டி
கொண்டு மதிப்பான பட்டெடுத்து என் தம்பி
உனக்கு மங்கைநான் வருவதற்குள் என் அருமை தம்பி
நீமாயமாய் போய் சேர்ந்தீரோ
சேலத்து வேட்டிக்கொண்டு, சிதம்பரத்து மேளம்கொண்டு
நான் சீக்கிரமாய் வருவதற்குள் தம்பிநீ
சிவலோகம் சேர்ந்தாயே 6

மாயவரம் வேஷ்டிகொண்டு
மன்னார்குடி மேளம்கொண்டு
மங்கைநான் வருவதற்குள் தம்பிநீ
மாயமாய் போனதென்ன
கும்பகோணம் வேஷ்டிகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூர் மேளம்கொண்டு தங்கா வருவதற்குள்
நீ தம்பி தெய்வலோகம் சேர்ந்தாயோ
நான் தேம்பி அழுகிறது தம்பி நீ போர சிவலோகம்
கேழ்க்கலேயோ

சந்தணக்கல் மேடையிலே என்னைப்பெற்ற அப்பா
என்னைக்கொண்ட தருமரும்நானும் சதுரங்கம் ஆடையிலே
சாயந்தர மூன்றுமணி தந்திவந்து சேர்ந்ததுவே
தந்தியைக் கண்டவுடன் நீ பெற்ற பெண்ணுள்
சந்தோஷமாயிருந்தேன் என்னைக்கொண்ட தருமர்
படித்துமல்லோ சங்கதியைச் சொன்னவுடன்
என்னைப்பெற்ற அப்பா தங்கமணி பச்சரிசி
தலையை முழுகி தங்கநிற பட்டுடுத்தி
தஞ்சாவூருமேளம் தங்கரலிப் பூகொண்டு
என்னைக்கொண்ட தருமரை முன்னேவிட்டு
தம்பிகளை பின்னேவிட்டு தனிக்காரு வைத்து
என்னைப்பெற்ற அப்பா தங்காளும் ஓடிவந்தாள்
சவமும் கிடைக்கலியே சவம் கிடந்த மூலையிலே
நீபெற்ற பெண்ணுள் எனக்கு
ஒரு சங்கதியும் கேழ்க்கலியே 7

பஞ்சவர்ண மேடையிலே என்னைப்பெற்ற அப்பா
என்னைக்கொண்ட பாண்டியரும் நானும் பந்தாடும்
வேளையிலே பகல் நேரம் மூன்றுமணி
நான் பாவியுட வாசலுக்கு பறந்து தந்தி வந்ததுவே
நீ பெற்ற பெண்ணுள் நான் பக்ஷமுடனே
இருந்தேன் என்னைக்கொண்ட பாண்டியர் படித்துமல்லோ
நான் பாவிக்கு பக்குவமாய் சேதிசொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பெற்ற அப்பா பவுனுமணி பச்சரிசி
பவளச்சம்மா வாய்க்கரிசி நான் பாவிமுழுசி
பச்சைநிறப் பட்டுடுத்தி பட்டணத்து மேளம்
பணியரலிப்பூவுகொண்டு என்னைக்கொண்ட
பாண்டியனை முன்னேவிட்டு
என் பிறவி பாலர்களை பின்னேவிட்டு
என்னைப் பெற்ற அப்பா பறக்க ஓடிவந்தாலும்
எனக்கு பாலும் கிடைக்கலியே
என்னைப் பெற்ற அப்பா பால்தெளித்த மூலையிலே
ஒரு வார்த்தையும் கேழ்க்கலியே 8

பஞ்சவர்ண மேடையிலே என்னைப் பெற்ற அப்பா
என்னைக்கொண்ட பாண்டியரும் நானும் பந்தாடும்
வேளையிலே பகல் நேர மூன்றுமணி நான் பாவியுட
வாசலுக்கு பறந்து தந்தி வந்ததுவே பறந்து வந்த
தந்தி கண்டு நீ பெற்ற பெண்ணாள் நான் பக்ஷமுடனே
இருந்தேன் என்னைக்கொண்ட பாண்டியர் படித்துமல்லோ
நான் பாவிக்கு பக்குவமாய்ச் சேதிசொல்ல
என்னைப் பெற்ற அப்பா
பவுனுமணி பச்சரிசி பவள சம்பா வாய்க்கரிசி
நான் பாவி முழுகி பச்சைநிறப் பட்டுடுத்தி
பட்டணத்து மேளம் பணியரலிப்பூவுகொண்டு
என்னைக்கொண்ட பாண்டியரை முன்னேவிட்டு
என் பிறவி பாலர்களை பின்னேவிட்டு
என்னைப் பெற்ற அப்பா பறக்க ஓடி வந்தாலும்
எனக்கு பாசம் கிடைக்கலியே என்னைப்பெற்ற அப்பா
பால்தெளித்த மூலையிலே ஒரு வார்த்தைகளும்
கேழ்க்கலையே 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்க்கா முருங்கை வெட்டி என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் கல்லிழைத்து மாடிகட்டி
உங்க கண்ணுள்ள நாளையிலே என்னைக்கொண்ட
கருணரும் நானும் காலமே வந்தாலும்
என்னைப்பெற்ற அப்பா நீங்க கைகொடுத்து உள்ளழைப்பீர்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு என்னைக்கொண்ட
கருணரும்நானும் காரேறி வந்தாலும் காலுவைக்க நீதியில்லை
கல்லிழைத்த மாடியிலே கன்னி புலம்புறது என்னைப்
பெற்ற அப்பா நீங்கபோற கருமலைக் கேழ்க்கலையோ 10

பூவாமுருங்கை வெட்டி என்னைப் பெற்ற அப்பா
நீங்கள் புஷ்பராக மாடிகட்டி உங்கள் கண்ணுள்ள
நாளையிலே என்னைக்கொண்ட புண்ணியரும் நானும்
பொழுதிருக்க வந்தாலும் என்னைப் பெற்ற அப்பா
என்னைக்கொண்ட புண்ணியர்க்கே கைகொடுத்து
பூரிப்பாய் உள்ளழைப்பீர் உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
என்னைக்கொண்ட புண்ணியரும் நானும் மோட்டாரில்
வந்தாலும் போய்புகுத நீதியில்லை அந்த புஷ்பராக
மாடியிலே பெண்ணுள் புலம்புறது என்னைப் பெற்ற அப்பா
நீங்கள்போன பொதியமலை கேழ்க்கலையோ 11

ஆற்றுப் புடலங்காய் என்னைப் பெற்ற அம்மா
அப்புறத்து கத்திரிக்காய் உங்கள் ஆவிபுரியுமுன்னே
நீங்கள் பெற்றபெண்ணுள் எனக்கு ஆளுவிட்டால்
ஆகாதா 12

சீமைப் புடலங்காய் என்னைப் பெற்ற அம்மா
நான் சித்திரத்துக் கத்திரிக்காய்
உங்கள் சிவன் பிரியுமுன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பெற்ற பெண்ணாள் எனக்கு
சீட்டு விட்டா லாகாதோ 13

மன்னவரும் தேவியரும் என்னைப் பெற்ற அம்மா
மதிப்பா வழிநடந்தால்
மரத்திலிருக்கும் மயிலிறங்கி தெண்டனிடும்
மல்லிகைப்பூ தோட்டம் என்னைப் பெற்ற தாயே
நீ வாடகைக்கு வாங்கிவைப்பீர் 14

கொண்டவரும் தேவியரும் என்னைப் பெற்ற அம்மா
கூடி வழி நடந்தால்
கொம்பிலிருக்கும் குயிலிறங்கி தெண்டனிடும்
கொத்தரலி தோட்டம் என்னைப் பெற்ற அம்மா
நீ குத்தகைக்கு வாங்கிவைப்பீர் 15

போகுந்தடத்திலே என்னைப் பெற்ற தாயே
போலீசுக் கச்சேரியாம் போகவரச் சன்னதியாம்
போயி நுழைஞ்சமின்னா என்னைப் பெற்ற அம்மா
பூருனெழுதிடுவாள் பொன்னும் பாய்தான் விரிப்பாள் 16

காசிசர விளக்கு என்னைப் பெற்ற அம்மா
கைலாச நெய்விளக்கு கல்லிழைத்த பொன்விளக்கு
எனக்குக் காணக்கிடைத்தாலும் என்னைப் பெற்ற
கண்ணகியாள்சீர்பாதம் காணக்கிடைக்கலையே
எனக்கு கவலைகளும் ரொம்ப வல்லோ 17

பழனிச் சரவிளக்கு என்னைப்பெற்ற அம்மா
பரமரோட நெய் விளக்கு பவுனிழைத்த பொன் விளக்கு
எனக்குப் பார்க்கக் கிடைத்தாலும் என்னைப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியாள் சீர்பாதம் பார்க்கக் கிடைக்கலேயே
எனக்கு படுந்துயரம் ரொம்பவல்லோ 18

தலையை வலிக்குதென்று என்னைப் பெற்ற ஆச்சி
தங்க மெத்தைக் கட்டிலிலே சரங்கோர்த்த மேஜையிலே
என்னைப் பெற்ற ஆச்சி நீங்கள் சாய்ந்து படுத்தாலும்
என்னைக்கொண்ட தருமரும் நானும் சாரட்டு வண்டிகட்டி
சம்மதித்த மாடு பூட்டி தஞ்சாவூரு போயிறங்கி
என்னைப் பெற்ற ஆச்சி தஞ்சவூருத் தைலம் தனித் தைலம்
கொண்டுவந்தோம் தனித் தைலம் வேண்டாமென்று
என்னைப் பெற்ற ஆச்சி தங்க ரதம் பள்ளிகொண்டாய் 19

பிடரி வலிக்குதென்று என்னை பெற்ற ஆச்சி
பொன்னு மெத்தை கட்டிலிலே பூப்போட்ட மேஜையிலே
நீங்கள் போத்திப் படுத்தாலும் என்னைக்கொண்ட
புண்ணியரும் பொட்டிவண்டி கட்டியல்லோ
புதுமாடு ரெண்டும் பூட்டி புதுக்கோட்டை போயிறங்கி
என்னைப் பெற்ற ஆச்சி புதுக்கோட்டை தைலம்
புதுத்தைலம் கொண்டு வந்தோம்
புதுத்தைலம் வேண்டாமென்று என்னைப் பெற்ற ஆச்சி
பொன்னு ரதம் பள்ளிக்கொண்டாய் 20

மஞ்சள் சரடிருக்க மடிநிறைய பூவிருக்க
என்னைத் தேடியசாமி நம்மவாச மாதளம் தோப்பிருக்க
என்னைக்கொண்ட மன்னவர்க்கு முன்னாலே
மடியவரம் வாங்கிவந்தே நான் மங்கை மடியாமல்
மன்னவரைக் கொள்ளையிட்டு நான் மஞ்சள் சரடிழந்து
மடிநிறையும் பூவிழந்து மங்கி மனம் வாடலாமோ 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலி சரடிருக்க என் தலைநிறைய பூவிருக்க
என்னைத் தேடியசாமி நம்வாசல் சந்தனத் தோப்பிருக்க
என்னைக் கொண்ட தருமருக்கு முன்னாலே நான்
சாகவரம் வாங்கிவந்தேன்
நான் தங்கை மடியால் தருமரைக் கொள்ளையிட்டு
நான் சரடிழந்து தலைநிறையப் பூவிழந்து
நான் பாவி தவித்து மனம் வாடலாமோ 22

பாக்குமரக் கானலிலே என்னைத் தேடியசாமி
நம்ம இருபேரும் பந்தாடும் வேளையிலே
பரமனுட தங்கரதம் பக்கமாய் வந்ததுவோ
பரமனுட வாசலுக்கு பக்ஷமுடன் போனீர்களோ 23

தேக்குமரக் கானலிலே என்னைத் தேடியசாமி
நம்ப இருபேரும் செண்டாடும் வேளையிலே
சிவனாரின் தங்கரதம் சீக்கிரமாய் வந்ததுவோ
சிவனாரின் வாசலுக்கு என்னைக் கொண்டசாமி
நீங்கள் தேட்டமுடன் போனீர்களோ. 24

பஞ்சகல்யாணி ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1953.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருசிரபுரம்

## ஸ்ரீஜத் R. T. தங்கமுத்து தாஸ்

அவர்கள் இயற்றிய

# சாரதா ஒப்பாரி

கூண்டுவண்டி கட்டியல்லோ என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் கோட்டைக்கே போனாலும்
கும்பாவிலக்கி நீபெற்றபெண்ணாள் குணமறிந்து
சோறிடுவேன்
கும்பா நிழலாடும் உங்கள் வாசல் குயிலுவந்து வாதாடும்
அந்த குயிலைப்பிடித்தடைத்து உங்கள் கண்மறைந்த
நாழிகைக்கு நீங்கள் பெற்ற செல்வி
என்னுடைய குறைதீர்க்க யாருமில்லை. 1

மாட்டுவண்டி கட்டியல்லோ என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் மதுரைக்கே போனாலும் வட்டி விலக்கிடுவேன்
நீ பெற்றபெண்ணாள் உங்களுட மனமறிந்து சோறிடுவேன்
வட்டி நிழலாடும் உங்கள் வாசல் மயில்வந்து வாதாடும்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு மயிலைப்பிடித்தடைத்து
உங்கள் பெற்றசெல்வி என்னுடமனதறிய யாருமில்லை. 2

ஈக்கி இளம்வேட்டி என்னைப்பெற்ற அப்பா
ஈரிலை கெண்டவேட்டி நீங்கள் இருதாமடித்துடுத்தி
ஈரோட்டு வக்கீலோடு இருந்துநாயம் பேசிவிட்டால்
ஈரோட்டு தேவடியாள் என்னைப்பெற்ற அப்பா
உங்களுக்கு இருந்து வழிதிறப்பாள்
உதிர்க்கவந்து கையெடுப்பாள். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பான் இளம்வேட்டி என்னைப்பெற்ற அப்பா
பட்டுக்கெண்ட மேல்வேட்டி நீங்கள் பாங்காமடித்தடுத்தி
பட்டணத்து வக்கிலோடு நீங்கள் பகுந்து ஞாயம்
பேசையிலே
பட்டணத்துத் தேவடியாள் பார்த்து வழிதிறப்பாள்
என்னைப்பெற்றஅப்பாஉங்கள்பக்கம்வந்துகையெடுப்பாள். 4

ஈக்கி சிறுவீக்கி என்னைப்பெற்ற அப்பா
நீங்கள்பெற்ற இந்திரனும் கைகுழந்தை
ஈக்கி முத்திதோப்பாக்கி இந்திரனை ஆளாக்கி
இந்திரரேசந்திரரே எமலோகம் போனவரே. 5

நீங்கள் இறந்திட்டா குற்றமில்லை
பாக்கு சிறுபாக்கு என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் பெற்ற பாண்டியனும் கைக்குழந்தை
பாக்கு முத்தித்தோப்பாக்கி பாண்டியனை ஆளாக்கி
கள்ளரே கருணரே கைலாசம் போனவரே. 6

பயணம்வச்சா குற்றமில்லை
பத்துவண்டி பொட்டிரதம் என்னைப்பெற்ற அம்மா
பரமரோட தங்கரதம் பார்வதியாள் வாராளென்று
இன்னைக்கி பச்சைகிளிகளெல்லாம் என்னைப்பெற்ற அம்மா
உங்கள் பக்கம்வந்து கையெடுக்கும். 7

எட்டுவண்டி பொட்டிரதம் என்னைப்பெற்ற தாயே
எமலோகதங்கரதம் ஈஸ்வரியாள் வாராளென்று இன்னக்கி
இளமைக்கிளிகளெல்லாம் என்னைப்பெற்ற அம்மா
உங்க எதிரே வந்து கையெடுக்கும். 8

கோட்டை சிகப்பு வாங்கி என்னைப்பெற்ற அம்மா
குருட்டுக்கே கல்லிழைத்து நீங்கள் பெற்ற பெண்ணுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக்கொடுக்க இடமில்லாமல் கொள்ளிடமே
தள்ளினீர்கள் கொள்ளிடத்தே நீந்தியல்லோ
என்னைப்பெற்றதாயே நீ பெற்ற குயிலாள்
வரத் தாமதந்தான். 9

மதுரை சிகப்பு வாங்கி என்னைப்பெற்ற அம்மா
மாட்டலுக்கே கல்லிழைத்து நீங்கள் பெற்ற பெண்ணாள்
என்னை மதிக்க இடமில்லாமல் வைகையிலே தள்ளினீர்கள்
வைகையை நீந்தியல்லோ என்னைப்பெற்ற தாயே
நீ பெற்ற மயிலாள் வரத்தாமதந்தான். 10

சிறுமணலுக்குள்ளாரே என்னைப்பெற்ற அம்மா
நீ பெற்ற பெண்ணாள் இண்ணைக்கு நான்
சீதைராமரும் தேரேரி வந்தாலும்
தேரை நிறுத்தியல்லோ என்னைப்பெற்ற தாயே
தேரைவிட்டு கீழிறங்கி நீ பெற்றபெண்ணாள் எனக்கு
திருஷ்டி சுற்றி உள்ளழைப்பாய். 11

நாட்டு மணற்குள்ளாக என்னைப்பெற்ற அம்மா
எனக்கு வாச்ச ராமரும் சீதையும் ரதமேறி வந்தாலும்
ரதத்தை நிறுத்தியல்லோ என்னைப்பெற்ற தாயே
ரதத்தை விட்டு கீழிறங்கி நீ பெண்ணாள் எனக்கு
நலுங்குசுற்றி உள்ளழைப்பாய். 12

நல்லது துளசியின்னு என்னைப்பெற்ற அம்மா நீங்கள்
நடுக்கிணறு பாத்திவிட்டீர் நந்தி விஸ்வநாதருக்கு
என்னைப்பெற்றதாயே நான்பாவி நல்லமலராகலியே. 13

உயர்ந்த துளசியின்னு என்னை பெற்ற அம்மா நீங்கள்
உரைக்கிணரே பாத்திவிட்டீர் உமாபதி நாதருக்கு
என்னைப்பெற்ற தாயே நான் பாவி உகந்தமலராகலியே. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை முல்லையரும்பு என்னைத்தேடிய சாமி
மலராபனியரும்பு மலரவைத்து பார்க்காமல்
என்னைத்தேடிய மன்னு மங்கவைத்து பார்க்கலாமா. 15

செண்பக முல்லையரும்பு என்னைக்கொண்ட மன்னவரே
சிதராபனியரும்பு சிதரவைத்து பார்க்காமல்
என்னைத்தேடிய மன்னவரே நான் பாவி
என்னை சிதரவைத்து பார்க்கலாமா. 16

வாழை எழுநூறு என்னைத்தேடியசாமி நம்ம
வாசவாங்கினது முன்னூறு இந்த சண்டாளன் வாசல்
வாழைச்சுற்றி பூ வெடிக்க வாய்த்த கணவனில்லை
வாதாட ஞாயமில்லை. 17

தென்னை எழுநூறு என்னைத்தேடியசாமி நீங்கள்
தேடியது முன்னூறு தென்னைச்சுற்றி பூவெடுக்க
இந்தச்சதிகாரன் சீமை தேர்ந்த கணவனில்லை
சீராட ஞாயமில்லை. 18

செண்பகப்பூ பொந்தியிலே என்னைக்கொண்ட மன்னவரே
செல்வனுமே உண்டானல் சீமையிலே பாதியுண்டு
சீராட ஞாயமுண்டு என்னைத்தேடிய மன்னவரே
செல்வனுமே இல்லாமல் சீமையிலே பாதியில்லை
சீராட ஞாயமில்லை. 19

மல்லிகை பொந்தியிலே என்னைக்கொண்ட மன்னவரே
மைந்தனுமே உண்டானல் மண்ணிலே பாதியுண்டு
வழக்காட ஞாயமுண்டு என்னைத்தேடியசாமி
மைந்தனுமே இல்லாமல் மண்ணிலே பாதியில்லை
வழக்காட நீதியில்லை. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமுள்ள கல்கோட்டை என்னைத்தேடியசாமி
ஜனம் பெருத்த நந்நாடு நான் சங்கை ஒதிக்கிவைத்து
ஜனத்தாரை தள்ளிவைத்து சந்திரரேகை பிடித்தேன்
சங்கமுள்ளு குத்துகிறது ஜனத்தாரு பேசுகிறது
என்னை தேடியசாமி சகிக்கமனம் கூடலியே. 21

இண்டமுள்ளு கல்கோட்டை என்னைத் தேடியசாமி
இனம் பெருத்த நந்நாடு இண்டை ஒதிக்கிவைத்து
இனத்தாரை தள்ளிவைத்து இந்திரரை கைப்பிடித்தேன்
இண்டமுள்ளு குத்துகிறது என்னைத்தேடிய மன்னு
எனத்தாரு பேசுறது இருக்கமனம் கூடலியே. 22

அந்திச் சிவந்திப்பூ என்னைத்தேடியசாமி
இந்தச்சண்டாளன் சீமை அரைச்சேர் மல்லிகைப்பூ
அல்லி முடியுமுன்னே இந்தப் பாவியுடவாசல்
நான் அருச்சுனரை கொள்ளேயின்னே. 23

காலைச்சிவந்தியப்பூ என்னைத் தேடியசாமி இந்தச்
சண்டாளன் சீமை கால்சேரு மல்லிகைப்பூ
கலந்து முடியுமுன்னே இந்தப்பாவியுடவாசல்
நான் கருணரை கொள்ளேயிட்டேன். 24

உச்சி சிவந்தியப்பூ என்னைத்தேடியசாமி
இந்தச் சண்டாளன் சீமை ஒருசேரு மல்லிகைப்பூ
உவந்து முடிக்குமுன்னே இந்தப்பாவியுடவாசல் நான்பாவி
என்னைக்கொண்ட உத்தமரை கொள்ளேயிட்டேன். 25

ஐந்து வயதிலே என்சாமிதுரை ராஜாவே
நான் அறியாத நாளையிலே ஒரு
ஆரமதை கையில் கொடுத்து அரசாணி முன்பாக
அனைவோரும் தாமரிய அடியாளை மாலையிட்டீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அவனிதனில் என்னை விட்டு அயன்பதிக்கு
போரீங்களே ஆரை சதமென்பேன் அய்யோ
என்னைக்கொண்ட மன்னவரே அலறுதல்லோ என்வயது. 26

பத்து வயதினிலே என்சாமி துரை ராஜாவே
எனக்கு பரிசமது தான்போட்டு பலபேரும் தாமறிய
பாங்காய் மணந்துகொண்டு பட்சமுடன் வாழ்ந்திருந்து
ஒரு பாலனை பெற்றெடுத்து பரிவாய் வளர்த்துவந்தோம்
அந்த பாலகனை யிங்கேவிட்டு பரன்பதி போனீங்களோ
நான் பாப்பாத்தி பெற்ற பெண்ணுள்
நான் பாதையிலே நின்று பதறி அழுகிறேனே. 27

தங்கத்தால் ஊஞ்சலிட்டு என் தருமரும் நானும்
சாய்ந்து விளையாடையிலே அந்த தஞ்சாவூர் தேவடியாள்
உங்களை தனியாய் அழைத்தாளோ
ஒரு தனி லெட்டர் கொடுத்தாளோ
நீங்கள் லெட்டர் கண்டவுடன் தங்கரயிலேறி தஞ்சாவூர்
போயிறங்கி அந்த தேவடியாளை
ஒரு சாரையிருந்து தீண்டாதோ
அவள் சாமிபாதம் சேராளோ. 28

அந்தபவளமணி மண்டபத்தில் நாம் பாசிவிளையாடையிலே
அந்த பட்டணத்து தேவடியாள் உங்களை பார்த்து
அழைத்தாளோ அவள் பதில் லெட்டர் தந்தாளோ
நீங்கள் பக்குவமாய் சென்றீரோ அந்த தேவடியாளை
ஒரு பாம்பு இருந்து தீண்டாதோ
நம்ம வீடு நீங்கள் வந்து சேர்வதெப்போ. 29

இன்றைக்கு தங்கத்தால் ஏரோப்பிளேன்
என்னைக்கொண்ட மன்னவரே .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சந்தோஷமாய் போகும் பிளான்
நீங்கள் ஏரோப்பிளேன் மீதேறி தாசிவீடு போரீரென்று
எனக்கு தயங்குதல்லோ என்மனது. 30

வெள்ளி ஏரோப்பிளேன் ஏறிவேகமாய் போரீரென்று
எனக்கு வேகுதே கும்பி ஐயோ
அந்த பொல்லா வேசியாளை ஒரு பூநாகம் தீண்டாதோ
அவள் போகாளோ பரமலோகம். 31

முத்தாலே பந்தலிட்டு நாம் இருபேரும்
காசு விளையாடையிலே அந்த கருவூரு தேவடியாள்
கண்ணை அடித்தாளோ ஒருகடின சேதி சொன்னளோ
அவள் பின் கால்கடுக்க நடந்தீரோ
கருகுதல்லோ என் மனது. 32

நம்ம பழனிமலை போனதுண்டு பரமனையும் கண்டதுண்டு
அந்த பழனி ஆண்டவனை நான் ஒரு பாலன்வரம்
கேட்டதுண்டு பாலன் பிறந்து நம்ம இருபேரும்
மகிழ்ந்து விளையாடையிலே அந்த பொல்லாத எமன்வந்து
தங்களை வாவென்று அழைத்தாரோ
உன்னை எமலோகம் சேர்த்தாரோ
இந்த மங்கை புலம்புறதும் நீங்கள் போகும்
எமலோகம் கேழ்க்கலையோ. 33

நாங்கள் ஸ்ரீரங்கம் போயி அந்த ஸ்ரீரங்கத்தாரை
சீர்பாதம் தெண்டனிட்டு ஒரு சிசுவரம் கேட்டதற்கு
சிசுவை கொடுத்தாரே சீராக வாழ்ந்தோமே
சிசுவை கையில் எடுத்து நம்மயிருபேரும் ஸ்ரீரங்கம்
சித்திரை தேர் பார்க்க போவதற்குள் நீங்கள் சிவலோகம்
சேர்ந்தீரோ திருவடியும் ரொம்ப வல்லோ. 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் சைக்கிலேறி நான் பெற்ற என்மகனே
நீங்கள் நம் சந்துவழி வந்தாயானுல்
நம்ம சந்தினில் உள்ளவர்கள் தருமர் மகன் வாரானென்று
உன்னே தாங்கி அழைப்பார்கள் தங்கமென்று தாங்குவார்கள்
தங்க சைக்கிலேரி தனிவழியாய் போகையிலே
அந்த பொல்லாத எமன் வந்து வாவென்றழைத்தாரோ
உன்னே வழிபார்த்து நின்ருரோ நீங்கள் வைகுந்தம்
சேர்ந்தாயோ. 35

முற்றிற்று.

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்து தாஸ் அவர்கள்

இயற்றிய

சீமாட்டிகள் சொல்லும்

# சிங்கப்பூர் ஒப்பாரி

## தகப்பனுருக்குப் புலம்பல்

வண்ணமணி தந்திமரம்
என்னைபெற்ற அப்பா
வார்த்தைதமிக பேசுமரம்
என்னை ஈன்றவர் துரை
மாண்டீர் என்று
எனக்கு வார்த்தைவந்து கேட்டவுடன்
என்னைக்கொண்ட வல்லவரை முன்னேவிட்டு
வந்துசேரும் முன்னாலே
நீங்கள்பெற்ற பெரியமகள் நின்றழுதால்
பேசாது வன்னிமரம்
நடுமகள் நின்றழுதால்
நடுங்காது வன்னிமரம்
கடமகள் நின்றழுதால்
கலங்காது வன்னிமரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பெற்றசெல்வி நான்
வாய்க்கரிசி கொண்டு
வலபுறம் எண்ணைகொண்டு
சீயக்காயரப்புக் கொண்டு
சீயாளிமேளம் சிதம்பரத்து மாலைகொண்டு
சிசப்புநிற பட்டுக்கொண்டு
நான் தாங்கி அடியைவைத்து
தலைமீது கையைவைத்து
ஓங்கியழுது வந்தால்
உங்கள் வாசல் உயர்ந்தமரம் ஓசையிடும்.

பவளமணித் தந்திமரம்
என்னைப்பெற்ற அப்பா
நம்பவாசல் பலசேதி பேசுமரம்
என்னைபெற்ற பார்த்திபரும் மாண்டீரென்று
எனக்குபலசேதி வந்தவுடன்
என்னைக்கொண்ட பாண்டியரை
முன்னேவிட்டு பாலர்களைபின்னேவிட்டு
நான்பாவி வருவதற்குள்
நீங்கள்பெற்ற பெரியமகள் தொட்டபின்
போகாது பூந்தேரு
நடுமகள் தொட்டால்
நகராது பூந்தேரு
இளையமகள் தொட்டால்
எழும்பாது பூந்தேரு
நீபெற்றசெல்விநான் பல்லுவிளக்காமல்
பாலும்பழம் தின்னுமல்
எண்ணைத் தலையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்பல்லு காவியோடு
மாமதுரை மேளங்கொண்டு
மதிப்பான பட்டுக்கொண்டு
மங்கி அடியைவைத்து
மார்மேலே கையைவைத்து
நான் ஏங்கியழுதுவந்து
என்னைப்பெற்ற அப்பாநான்
ஏலேலம் என்றுசொன்னால்
இன்னைக்கு ஏலப்பொடிமணக்கும்
என்னைப்பெற்ற அப்பா
உங்கள்வாசல் எழுந்திருக்கும் பூந்தேரு.

தெற்குக் கலகோடி
தென்னாட்டு கப்பலேரி
என்னைப்பெற்ற அப்பா
நீங்க சிங்கப்பூர் போயிறங்கி
உங்கள் செல்விக்கி ஏற்றதொரு
சிறுநகை அனுப்பிவைத்தீர்
சிறுநகையு மிங்கிருக்க
உங்களுக்குவந்து சீமாட்டி காத்திருக்க
சிங்கப்பூர் போனவர்கள்
திரும்பிவரக் காணலையே
என்னைப்பெற்ற அப்பா நீபெற்ற
செல்விகுறை ஆறலையே.

வடக்குகடலோடி வடக்குகப்பலேரி
என்னைப்பெற்ற அப்பா நீங்கள்
வங்காளம் போனவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வயதாளுக்கு ஏற்றதொரு
வயிரநகை செய்து தந்தீர்
அந்த வயிரநகை இங்கிருக்க
என்னைப்பெற்ற அப்பா உங்களுக்கு
வாய்ந்தவல்லவனும் காத்திருக்க
வங்காளம் போனவர்கள்
வாசல்வந்து சேரலையே
என்னைப்பெற்ற அப்பா நீபெற்ற
வயதால்குறை ஆறலையே.

## தாயாருக்குப் புலம்பல்

மலைமேலே தோட்டம்வைத்து
என்னைப்பெற்ற அம்மா நீபெற்ற
மங்கைமயிலாட மனதுக்கு
ஏற்றதொரு மலைவாழை உண்டுபண்ணி
மண்ணால் சுவரெடுத்து
மனிதரையும் காவல்வைத்து
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
மலையும் சரியலாச்சோ மலைவாழை வீணாச்சோ
என்னைப் பெற்றதாயே
நீபெற்ற மங்கைமனம் புண்ணாச்சோ.

சிலைமேலே தோட்டம்வைத்து
என்னைப்பெற்ற அம்மா நீபெற்ற
செல்விசிந்தைக்கு ஏற்றதொரு
சிறுவாழை உண்டுபண்ணி
செங்கல் சுவருவைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகரை காவல்வைத்து
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
சிலையும் சருக்கிடுச்சோ சிறுவாழை வீணுச்சோ
என்னைப்பெற்ற தாயே
நீ பெற்றசெல்வி மனம் புண்ணுச்சோ.

இரண்டு இடியிடிக்க என்னைபெற்ற தாயே
நம்பவாச பெருவெள்ளம் ஓடிவர
அந்த பெருவெள்ளந் தண்ணியிலே
நீங்கள் பெற்றபெண்ணுள் நனைந்துவந்தால்
நீ புதுச்சேரி துண்டெடுத்து
உன்னுடைய பிடரி துவட்டினுலும்
நான் பெண்குறையும் ஆறிடுமோ.

கலந்து இடிஇடிக்க நம்பவாசல்
கனவெள்ளம் ஓடிவர
அந்த கனவெள்ளத் தண்ணீரிலே
நீங்கள் பெற்றகன்னி நனைந்துவந்தால்
நீ காரைக்கால் துண்டெடுத்து
என்னுடைய கண்ணை துவட்டினுலும்
நான் கன்னிகுறை ஆறிடுமோ.

## புருஷனுக்குப் புலம்பல்

புதுக்கோட்டைச் சாலையிலே
என்னைத்தேடியசாமி உங்கள் கண்ணுள்ள நாளையிலே
பூமரங்கள் உண்டுபண்ணி போரவர்கள் வாரவர்கள்
பூமரங்கள் ஆருதென்றல்
என்னைக்கொண்ட புண்ணியனும் வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமரச்சோலை என்பார்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
அந்த பூமரச்சோலையிலே
நான் புலம்பி யழுதேனென்ருல்
இன்னைக்கு பூவும் விலையாகும்
என்னைத்தேடிய புண்ணியஞர் பேர்விளங்கும்.

மாமதுரைச் சோலையிலே
என்னைத் தேடியசாமி
உங்கள் கண்ணுள்ள நாளையிலே
மாமரங்கள் உண்டுபண்ணி
மதுரைவழி போரவர்கள்
மாமரங்கள் ஆருதென்ருல்
என்னைக்கொண்ட மன்னவர்வைத்த
மாமரச் சோலை யென்பார்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு
அந்த மாமரச் சோலையிலே
நான் மங்கை அழுது நின்ருல்
இன்னைக்கு மாங்கா விலையாகும்
என்னைத்தேடிய மன்னவஞர் பேர்விளங்கும்.

ஏழுபசுவு இளம்பசுவு தானமிட்டு
என்னைத் தேடியசாமி
என்னைப்பெற்ற ஈஸ்வரியும் ஈஸ்வரரும்
இந்திரைத் தேடிவைத்தார்
நீங்கள் என்னை மறந்துவிட்டு
எமலோக வாழ்வுக்கு
இச்சைவைக்க நீதியுண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஏங்கி அழுகிறது
நீங்கள்போன எமலோகம் சம்மதமோ.

பத்துபசுவு பால்பசுவுபால் தானமிட்டு
என்னைத்தேடியசாமி என்னைப்பெற்ற
பரமசிவனும் பார்வதியும்
உங்களை பாண்டியரைத் தேடிவைத்தார்
என்னுடைய பக்ஷமறந்திட்டு
பரமலோக வாழ்வுக்கு
பாசம்வைக்க நீதியுண்டோ
பதறியழுகிறது என்னைத்தேடியசாமி
நீங்கள்போன பரமலோகம் சம்மதமோ.

## மாமியாருக்குப் புலம்பல்

அத்தையடி அத்தை என்னைக்கொண்ட
அருச்சுனரைப் பெற்ற ஆசாரமுள்ள அத்தை
உன் கண்ணுள்ள நாளையிலே
அடுக்குமல்லி நானறியேன்
அதைச்சூடி பார்த்தறியேன்
அழகான சேலை ஒன்று
அறையில்கட்டி நானறியேன்
அலுத்துச் சற்று அறையில் படுத்தறியேன்
இப்போ அலுப்புக்கு ஆத்தாமல்
என்னைத்தேடிய படுபாவி அத்தையரே
நான் அடித்து அழுகவந்தேன்.

மாமியாரே மாமியாரே என்னைக்கொண்ட
மன்னவரைப்பெற்ற மதிப்பான மாமியாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கண்ணுள்ள நாளையிலே
மல்லிகை நானறியேன்
மலர்சூடிபார்த்தறியேன்
மதிப்பான பட்டொன்று
மடிச்சுடுத்தி நானறியேன்
என்மனது சலித்துச்சற்று
மாடியில் படுத்தறியேன்
இப்போ மனது சகியாமல்
என்னைத் தேடிய மாமியாரே
மாரடிக்க ஓடிவந்தேன்.

கோயிலுக்கு போயறியேன்
கும்பிட்டு நானறியேன்
என்னைத்தேடிய அத்தையரே
ஒருதிருநாளுக்கு போயறியேன்
தெருவிலே நடந்தறியேன்
தாம்பூலம் பார்த்தறியேன்
மோருபாலு நானறியேன்
என்னைக்கொண்ட மாமியாரே
இப்போ முட்டி யழுகவந்தேன்.

சிங்கப்பூர் ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

புவி எங்கும் புகழ்பெற்ற சோகரச திலகம்

திருசிறபுரம் டி. எஸ். சுடலைமுத்து தாஸ்

அவர்கள் இயற்றிய

மாதர்கள் புலம்பும்

# மரகத ஒப்பாரி

## விருத்தம்

மாகத ஒப்பாரி மானிலத்தில் யான்பாட
காம்கூப்பி தெண்டனிட்டேன் கவிபுகழ்
வரந்தருவாய் கரிமுகனே இது சமயம்
சிரம்வணங்கினேன் இந்த சிறுவனுக்கருள் தாதா.

## தகப்பனுருக்குப் புலம்பல்

கோடை இடியிடிக்க என்னைப்பெற்ற அப்பா
நான்பாவி வாழும் வாசலிலே
கோடை மழை பொழியும் நாடு
குளிர்ந்த தென்றல் வீசும் நாடு
இஞ்சி விளையும் நாடு
இருவாட்சி மலரும் நாடு
இருவாட்சி மலரெடுத்து இருதினுசு மாலைகட்டி
ஈரோடு மேளங்கொண்டு இஞ்சிவர்ண பட்டுகொண்டு
சேலத்து மேளங்கொண்டு சிகப்புவர்ண பட்டுகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சாவூரு மேளங்கொண்டு தங்கநிற பட்டுகொண்டு
அரந்தாங்கி மேளங்கொண்டு ஐந்துவர்ண பட்டுகொண்டு
என்னைக்கொண்ட அர்ச்சுனரை முன்னேவிட்டு
அருமை பிள்ளைகளை பின்னேவிட்டு
நான்பாவி அல்லி வழிநடந்து அப்பாலே வந்தாலும்
உன்னுடை அங்கம் பார்க்கக் கிட்டலையே
நான்பாவி உனக்கு கொண்டுவந்த ஐந்துவர்ண பட்டு
உன்னுடைய அங்கத்துக்கு போத்தலையே. 1

மானம் இடியிடிக்க என்னைப்பெற்ற அப்பா
நான்பாவி வாழும் வாசலிலே
மாரிமழை பொழியும் நாடு
மழைக்காற்று வீசும் நாடு
மஞ்சள் விளையும் நாடு
மல்லிகைப்பூ பூக்கும் நாடு
அந்த மல்லிகை பூவெடுத்து மயிலணையாள் மாலைகட்டி
மாமதுரை மேளங்கொண்டு பஞ்சவர்ண பட்டுகொண்டு
கும்பகோண மேளங்கொண்டு குரிப்பான பட்டுகொண்டு
புதுக்கோட்டை மேளங்கொண்டு பூபோட்டபட்டுகொண்டு
என்னைக்கொண்ட புண்ணியரை முன்னேவிட்டு
பிள்ளைகளை பின்னேவிட்டு
நான்பாவி பொன்னு வழிநடந்து
பொழுதோட வந்தாலும்
உன்னுடைய பொன்னுத்திருமேனி பார்க்கக் கிட்டலையே
உனக்கு கொண்டுவந்த பூப்போட்ட பட்டு
உன்னுடைய பொன்னுத் திரேகத்தில் போத்தலையே. 2

சித்திரை மாதத்திலே என்னைப்பெற்ற அப்பா
நம்ம சீமை சீரங்கம் சித்திரத்தேர் ஓடயிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக்கொண்ட சீமானை முன்னேவிட்டு
சிறுவர்களை பின்னே விட்டு
நான் பாவி சீதை வழிநடந்தேன்
எனக்கு சித்திரத்தேர் கிட்டாதென்று
நீங்க பத்தடி சிங்கம்போல பாதை மறைத்தீர்களோ
எட்டடி சிங்கம்போலே இடத்தை மறைத்தீர்களோ
என்னைப்பெற்ற அப்பா நீங்கள்
போகும் எமலோகம் சம்மதமோ. 3

பங்குனி மாதத்திலே என்னைப்பெற்ற அப்பா
நம்ம சீமை பழனி பங்குனித்தேர் ஓடயிலே
யென்னைக்கொண்ட பாண்டியரை முன்னே விட்டு
பாலகர்களை பின்னே விட்டு
நான்பாவி வழிநடந்தேன்
யெனக்கு பங்குனித்தேர் கிட்டாதென்று
யெட்டடி யானைபோல இடத்தை மறைத்தீர்களே
பத்தடி யானைபோல பாதை மறைத்தீர்களே
என்னைப்பெற்ற அப்பா நீங்கள்
போகும் பரமலோகம் சம்மதமோ. 4

## தாயாருக்குப் புலம்பல்

கொச்சி மலைதாண்டி குடகுமலை சந்திலே
அங்கே குமரனிருக்குமிடம்
குறத்தியும் தூங்குமிடம்
ஒரு கோவை யழுகுமிடம்
அந்த குமரனிடத்திலே என்னைப்பெற்ற தாயே
என் குறைகளை சொல்லிவிட்டால்
கோவப்பழம் தின்னவந்த
கோடி குயில்களும் யென்பாவி குறைகேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவப்பழம் தின்னாமல் யென்னை பெற்றதாயே
இப்போ குதிச்சோடி போனதம்மா. 5

பவளமலை தாண்டி பழனிமலை சந்திலே
அங்கே பரமனிருக்குமிடம்
பார்வதியாள் தூங்குமிடம்
ஒரு பரங்கி பழுக்குமிடம்
அந்த பரமனிடத்திலே
யென்னைப் பெற்றதாயே நான்
பாவி குறை சொல்லிவிட்டால்
பரங்கி பழம் தின்னவந்த
பத்துகோடி பக்ஷிகளும்
யென்பாவி குறை கேட்டு
பரங்கி பழம் தின்னாமல்
யென்னை பெற்ற தாயே இப்போ
பறந்தோடி போனதம்மா. 6

பவுனை உருக்கியல்லோ பத்தடுக்கு மெத்தை கட்டி
பத்தடுக்கு மெத்தையிலே
என்னைப் பெற்ற தாயே
நீ பெற்ற செல்வி நான்
படுத்து உறங்க ஒரு பவளமணி ஊஞ்சலிட்ட
உங்க கண்ணு மறைந்த உடனே
அந்த பவளமணி ஊஞ்சலிலே
படுத்துறங்க வந்தாலும்
என்னை பெற்ற பாண்டியற்கு
வந்த பழிகாரி சின்னாயி
அந்த பவளமணி ஊஞ்சலிலே
படுக்காதே யென்று சொல்லி
பலவிதமாய் திட்டுறாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப்பெற்ற தாயே நான்
பாலப் பிறப்போட
பதமறியா தம்பியோட
நான் பாவி பதறிவிட்டேன் கண்ணீரை. 7

தங்கம் உருக்கியல்லோ தனித்தங்கம் மெத்தைகட்டி
அந்த தனித்தங்கம் மெத்தையிலே
என்னை பெற்ற தாயே
நீபெற்ற செல்வி நான்
தங்கி விளையாட தருமருக்கு வந்த சண்டாளி சின்னுயி
அந்த தனித்தங்கம் ஊஞ்சலிலே
தங்காதே யென்று சொல்லி
என்னை தலையிலடிக்கிறளே
என்னைப்பெற்ற தாயே நான்
தருமப் பிறப்போட
தன்மையுள்ள தம்பியோட
நான் பாவி தவித்து அழுகிறேனே. 8

## புருஷனுக்குப் புலம்பல்

சிகப்பு சைக்கில் வண்டி
என்னைக்கொண்ட சீமானும் ஏறும் வண்டி
நீங்க சிகப்பு சைக்கலேறி சிதம்பரம் போயிறங்கி
அந்த சிதம்பர நடராஜரை
சேவித்து நின்றீர்களோ
அந்த சிதம்பர நடராஜரும்
உங்களை தீர்க்கமுள்ள பிள்ளை என்று
தன் திருவடிக்கே ஆளாக்கி
என்னை திகிலடைய செய்தார்களோ
உங்களுக்கு வந்த ஆகாத பாவிக்கு
ஒரு சேதி சொல்ல வாரதெப்போ. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை சைக்கில் வண்டி
என்னைக்கொண்ட பாண்டியரும் ஏறும் வண்டி
நீங்க பச்சை சைக்கலேறி பழனிமலை போயிறங்கி
அந்த பழனிமலை வேலவரை
பாதந் தொழுதீர்களோ
அந்த பழனிமலை வேலவரும்
பக்தியுள்ள பிள்ளை யென்று
தன்பாதத்திற்கு ஆளாக்கி
என்னை பரதவிக்க செய்தார்களோ
உங்களுக்கு வந்த ஆகாத பாவி வாசலுக்கு
படுத்துறங்க வாரதெப்போ. 10

தெற்கே வெகுதூரம் என்னைத்தேடிய ராஜாவே
நீங்கள் திருநெல்வேலி போறேனென்று
ஒரு சீட்டு எழுதிவிட்டார்
ஒரு சேதிசொல்ல ஆளுவிட்டார்
உங்க சீட்டையும் கண்டவுடன்
சீரகச்சம்பா அரிசி
சீக்கிரமாய் நான் சமைத்து
சீனி அவரக்காய்
கொத்தவரக்காய்
முருங்கக்காய்
கத்தரிக்காய் வாழக்காய்
புடலங்காய் வகையுள்ள பீர்க்கங்காய்
வர்ணமுள்ள பாவக்காய்
இத்தனை காய்கறியும் உங்களுக்கு வந்த
ஆகாதபாவி எடுத்து பரிமாறி எதிர்பார்த்து நானிருக்க
நீங்க என்னை மறந்திட்டு எமலோக சோறுகறி
எடுத்து உண்க சம்மதமோ. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கே வெகுதூரம் என்னைத்தேடிய ராஜாவே
வடமதுரை போறேனென்று
வகையுடன் சீட்டெழுதி
வார்த்தை சொல்ல ஆளுவிட்டார்
உங்க வார்த்தைகளை கேட்டவுடன்
வகையாக நான் சமைத்து
வடதோசை பாயாசம்
வகைவகையாய் செய்துவைத்து
வாழையிலையிலே வகைவகையாய் பரிமாரி
வருவீரென்று எதிர்பார்த்தேன்
வடதோசை பாயாசம் தின்னுமல்
வானுலகம் போரேனென்று
உங்களுக்குவந்த ஆகாத பாவிக்கு
ஒரு ஒயர் கொடுத்தால் ஆகாதா. 12

## மாமியாருக்குப் புலம்பல்

என் தகப்பன் சொல்லைக்கேளாமல்
தாயார் சொல்லை தட்டிவிட்டு
என்னைதேடிய படுபாவி அத்தையரே
தந்தை தாய் நீயென்று
உந்தன் மகனை மாலையிட்டு
உங்கள் வாசல்வந்த நாள்முதலாய்
மஞ்சள் குளித்தறியேன்
மல்லிகை முடித்தறியேன்
உச்சிக்கு எண்ணையறியேன்
உளுந்துவடை தின்னறியேன்
இந்த ஊரார் சிரிப்பாரென்று
என்னை தேடிய அத்தையரே
நான் ஒப்புக்கு அழுகவந்தேன். 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாடு மூன்னூறு பால்பசுவு நானூறு
என்னை தேடிய அத்தையரே
உன்னுடைய வாசலிலே பாங்காக கட்டிருக்கும்
உன்னுடைய நாளையிலே
பாலைக்குடித்தறியேன் பால்பானை நானறியேன்
மோரைக்குடித்தறியேன் மோர்பானை நானறியேன்
தயிரைக்குடித்தறியேன் தயிர்பானை நானறியேன்
அந்த தரணியிலுள்ளவர் சிரிப்பாரென்று
நான் தவித்து அழுகவந்தேன். 14

காசுமாலை மூன்றிருக்கும் கம்மல்தோடு நாலிருக்கும்
கழுத்தட்டிகை ஐந்திருக்கும் கைகாப்பு ஆறிருக்கும்
நான் கன்னி பிராயத்திலே
காய் காய்க்கும் நாளையிலே
அறியாப்பிராயத்திலே என் அங்கத்திலே போட்டு
என் அழகை பார்க்காமல் யென்னை
அறுத்த சிரிக்கி போலே
அலங்கோலமா செய்தீர்களே
இந்த அகிலத்திலுள்ளவர்கள் சிரிப்பாரென்று
உங்கள் வாசலில் அலரிப்புலம்ப வந்தேன். 15

மரகத ஒப்பாரி முற்றிற்று.

வாகீஸ்வரி அச்சு நிலயம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்து தாஸ்

அவர்கள் இயற்றிய

# காந்தாமணி ஒப்பாரி

ஆலம் பலகையிலே அரளிப்பூ மெத்தையிலே
அருச்சுனரும் தேவியுமாய் என்னைத்தேடிய சாமி
நம்ம அருகிருந்து பேசையிலே
ஆலம் பலகை விட்டேன் அரளிப்பூ மெத்தை விட்டேன்
அருச்சுனரை தப்பவிட்டேன் அல்லி புலம்புறது
என்னைத் தேடியசாமி நீங்கபோன
அரனடிக்கே கேழ்க்கலையோ 1

சிவம் பலகையிலே சிவந்திப்பூ மெத்தையிலே
சீமானும் தேவியுமாய் என்னைத் தேடியசாமி
நம்ம சேர்ந்திருந்து பேசையிலே சிவு பலகை விட்டேன்
சிவந்திப்பூ மெத்தை விட்டேன் சீமானை தப்பவிட்டேன்
நான் செல்வி புலம்புறது என்னைத் தேடியசாமி
நீங்கள் போன சிவனடிக்கே கேழ்க்கலையோ 2

வேப்பமரத்தடியே நான் பிறந்த அய்யா
வீமன்போல் சாய்ந்திருக்க வேம்பு வெட்ட வந்தரொரு
வேடுவனும் சண்டாளன் வீமனென்று பாராமல்
நான் பிறந்த தம்பி வேம்பு என
உன்னை எண்ணி வெட்டியே சாய்த்தானே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவை மரத்தடியே நான் பிறந்த அய்யா
கருணன்போல் சாய்ந்திருக்க கரும்புவெட்ட வந்தொரு
கள்ளனும் சண்டாளன் கர்ணரென்று பாராமல்
நான் பிறந்த தம்பி கரும்பு என உன்னை எண்ணி
கட்டி வெட்டி சாய்த்தானே 4

ஜாதி எலுமிச்சை என்னைப்பெற்ற அம்மா
சமுத்திரத்து நீர்வாழை
தாரோடி காய்த்ததென்றால் சமுத்திரம் கொள்ளாது 5

கொடியும் எலுமிச்சை கோத்திரத்து நீர்வாழை
கொடியோடி காய்த்ததென்றால் என்னைப்பெற்ற அம்மா
கோத்திரமும் கொள்ளாது 6

செடியும் எலுமிச்சை என்னைப்பெற்ற தாயே
சித்திரத்து நீர்வாழை செடியோடு காய்த்ததென்றால்
என்னைப் பெற்ற தாயே சித்திரமும் கொள்ளாது 7

திங்கள் பிறக்குதென்று திருநோன்பு ஆகுதென்று
உங்கள் செல்ல மருமகனும் நீங்கள்பெற்ற
சீரோடும் தன் மகளும் திரும்பிவர சத்தமென்ன
திண்ணை நிழலோடும் தென்மதுரை ஜோதி மின்னும்
தெற்கத்தி சந்தனமும் திருவாரூர் பன்னீரும்
திண்ணைமேல் சேராடும் என்னைப்பெற்ற அப்பா
தெற்கு வழி திறந்து தென்னிலைக்கு ஆளுவிட்டு
தென்னிலையைச் சுற்றியல்லோ என்னைப்பெற்ற அப்பா
நீ பெற்ற பெண்ணாள் திட்டிப்பே றாறுகறி 8

வருஷம் பிறக்குதென்று மறுநோன்பு ஆகுதென்று
உங்கள் வரிசை மருமகனும் நீங்கள் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாடும் தன் மகளும் வருகிற சத்தமின்னு
நம்ம வாச நிழலோடும் வட மதுரை ஜோதி மின்னும்
வடக்கத்தி சந்தனமும் வங்காள பன்னீரும்
என்னைப்பெற்ற அப்பா உங்கள் வாசலிலே சேராடும்
இன்றைக்கு வடக்கே வழி திறந்து
நீங்கள் பெற்ற பெண்ணுக்கு வாழை இலைக்காளுவிட்டு
வாழையிலை சுற்றியல்லோ என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் வன்னிப்பீர் நூறுகறி 9

வெள்ளித் தகட்டுவண்டி என்னைப்பெற்ற வீமராஜா ஏறும்
வீமராஜா ஏறிவிட்டால் வீதி நெறு நெறுங்கும் [வண்டி
வீதிமணல் தூள்பறக்கும் வேசிவீடு போய் இறங்கும்
வேசிவீட்டுத் திண்ணையிலே என்னைப்பெற்ற அப்பா
நீங்க வெள்ளிமுத்து ஆடையிலே
வேசிகண்ணுபட்டதுவோ நீங்க வீமர்முடிசாய்ந்ததுவோ 10

தங்கத் தகட்டுவண்டி என்னைப்பெற்ற
தருமராஜா ஏறும்வண்டி இன்றைக்கு தருமராஜா ஏறிவிட்
சாலை நெறுநெறுங்கும் சாலைமண்ணு தூள்பறக்கும் [டால்
தாசிவீடு போய் இறங்கும்
அந்தத் தாசிவீட்டுத் திண்ணையிலே என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் தங்கமுத்து ஆடையிலே
அந்தத் தாசிகண்ணு பட்டதுவோ உங்கள் தருமர்முடி
சாய்ந்ததுவோ 11

நீலப் புடலங்காய் என்னைப்பெற்ற அப்பா
நெய்சேர்ந்த மிட்டாயி
நேசமும் பாசமும் நான் பாவிவாசல் நெய்க்கிணறும்
சத்திரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நேசம் மறக்கடிக்க என்னைப்பெற்ற அப்பா
இந்தப்படுபாவி சீமை நினைத்தான் பரமசிவம் 12

பச்சைப் புடலங்காய் என்னைப்பெற்ற அப்பா
பால்சேர்ந்த மிட்டாயி
பாசமும் நேசமும் உங்கள்வாசல் பால்கிணறும் சத்திரமும்
பாசம் மறக்கடிக்க என்னைப்பெற்ற அப்பா
இந்தப் படுபாவி சீமை பார்த்தான் பரமசிவம் 13

பச்சைக் கல்லு பொன்மேனி என்னைப்பெற்ற அப்பா
பவுனிழைத்த தங்க ரதம் பாண்டியனார் உள்ளமட்டும்
பாலா முழங்கிச்சு பாக்கியமாய் பொங்கிச்சு
பாலை ஒழுகவிட்டு என்னைப்பெற்ற அப்பா
பாக்கியத்தை சிந்தவிட்டு நீங்கள் பெற்ற பெண்ணுக்கு
ஆதரவு ரொம்பவல்லோ 14

சிகப்புக்கல் பொன்மேனி என்னைப்பெற்ற அப்பா
சிங்கமுகத் தங்கரதம் என்னைபெற்ற சீமானார் உள்ளமட்டும்
தேனு முழங்கிச்சு திரவியமாய் பொங்கிச்சு
இந்தச் சண்டாள சீமை சதிகாரன் வாசல் என்னைப்
பெற்ற அப்பா
தேனை ஒழுகவிட்டு திரவியத்தை சிந்தவிட்டு
நீங்கள் பெற்ற பெண்ணுக்கு சீறழிவு ரொம்பவல்லோ 15

மடியிலரிசி கொண்டு என்னைப் பெற்ற அம்மா
நான் பிறந்த மனை வழியே வந்தாலும்
ஆனாலும் பாவி அரும்பாவி வாசல் பேசாத பாவி
பெரும்பாவி வாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடியரிசி வாங்கியல்லோ என்னைப் பெற்ற அம்மா
என்னுடன் மனக்கவலை நீக்க இந்த மாநிலத்தில்
யாருமில்லை 16

படியரிசி கொண்டல்லவோ என்னைப்பெற்ற தாயே
நான் பாவி பிறந்திடத்தே வந்தாலும்.
சண்டாளன் வாசல் சதிகாரன் சீமை
கொடும்பாவி வாசல் கூடாதான் சீமை
படியரிசி வாங்கியல்லோ என்னைப்பெற்ற தாயே
என்னுட பொந்தி கவலை நீக்க இந்த பூவுலகில்
யாருமில்லை 17

மதியந் திரும்பு முன்னே என்னைப் பெற்ற தாயே
மறுகோழி கூவுமுன்னே
மண்டலத்தார் பணியும் மாமதுரை ராஜமன்னன்
நீ பெற்ற பெண்ணுளுக்கு மாலை கொண்டுவந்தார்கள்
மாலை பொருத்தம் மனவருத்த மாகுமின்னு
மாலை கொண்டு வந்தவர்க்கு வார்த்தைசொல் தட்டாமே
மயிலாளுக்கு பூமாலை மங்களமாய் சூடுமென்றீர்
மாலைமேல் குற்றமில்லை மன்னவர்மேல் தோஷமில்லை
என்னைப்பெற்ற தாயே மாலைபடும் சீரறிவு
நான் பாவி மங்கை தலைவிதியோ 18

பொழுது திரும்புமுன்னே என்னைப் பெற்ற தாயே
பொரிக்கோழி கூவுமுன்னே
இந்த பூவுலகோர் தான் பணியும் புதுக்கோட்டை
ராஜமன்னர்
நீ பெற்ற பெண்ணுளுக்கு பூவுகொண்டு வந்தார்கள்
பூவு பொருத்தம் பெரு வருத்தமாகுமின்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவு கொண்டுவந்தவர்க்கு புத்தி சொல்லி தட்டாமல்
என்னைப்பெற்ற அம்மா
பூவு வந்தால்போதுமென்று பெண்ணுளுக்கு சூடுமென்றீர்
பூவுமேல் குற்றமில்லை புண்ணியர்மேல் தோஷமில்லை
என்னைப்பெற்ற தாயே
பூவுபடும் சீரழிவு நான் பாவி பெண்ணுள் தலைவிதியோ 19

வெள்ளி விரதந்தான் என்னைத் தேடியசாமி
வேறே சமயமுந்தான் நம்மவாசல் வெகுஜன பூஜைதான்
வெகு ஜனம் கையமர்த்த வேருளும்
இல்லாமல் உங்கள் கண் மறைந்த நாழிகைக்கு
வெள்ளி விரதமில்லை வேறே சமயமில்லை
வெகு ஜனம் பூஜையில்லை உனக்கு வந்த பெண்ணுள்
நான் பாவிக்கு வெம்பி மனம் வாட்டமல்லோ 20

சனியும் விரதந்தான் என்னைத்தேடியசாமி தனியாய்
சமயமுந்தான் நம்மவாசல் சகல ஜன பூஜைதான்
சகல ஜனம் கையமர்த்த சமர்த்தாளி இல்லாமல்
உங்கள் கண்மறைந்த நாழிகைக்கு சனியும் விரதமில்லை
தனியாய் சமயமில்லை சகலஜன பூஜையில்லை
உனக்கு வாச்சபெண்ணுள் நான் பாவிக்கு
சங்கடங்கள் ரொம்பவல்லோ 21

மூனுபவுன் சில்லரையாம் என்னைத்தேடியசாமி
முத்திழைத்த அட்டிகையாம் முத்து அழுந்து தென்று
முடிமன்னர் இல்லாமல் என்னைக்கொண்ட மன்னவரே
பூவிழந்த பாவி பொட்டிழந்த சண்டாளி ஆளிழந்தபாவி
அழகிழந்த சண்டாளி முடிந்து வைக்க சம்மதித்தேன் 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபவுன் சில்லரையாம் என்னைத்தேடியசாமி
அறும்பிழைத்த அட்டிகையாம் அறும்பு அழுந்து தென்று
என்னைக்கொண்ட அருச்சுனரில்லாமல்
என்னைத்தேடியசாமி மஞ்சளற்றபாவி மணியிழந்த
சண்டாளி கொஞ்சளற்ற பாவி குருவிழந்த சண்டாளி
அவிழ்த்துவைக்க சம்மதித்தேன் 23

மருவுபடர்ந்திருக்கும் மருமல்லி பூர்த்திருக்கும் மருமல்லி
பூவுக்கு என்னைத்தேடியசாமி நீங்கள் பெற்ற மைந்தனுமே
கைநீட்ட மைந்தனையும் கீழிறக்கி என்னைக்கொண்ட
மன்னவரே நான் மாது மடிகோலி
மருமல்லி பூவெடுத்தேன் வையகத்திலுள்ளவவர்கள்
என்னை மன்னவரிழந்தவள் மாபாவம் செய்தவள்
மருமல்லி பூவெடுத்தால் மற்றும் கலையாதென
நான் மாது மடியுதறி வடித்திட்டேன் கண்ணீரு 24

சிவந்தி படர்ந்திருக்கும் என்னைத் தேடியசாமி
செண்டுமல்லி பூத்திருக்கும் செண்டுமல்லி பூவுக்கு
என்னைக்கொண்ட மன்னவரே நீங்கள் பெற்ற செல்வனுமே
கைநீட்ட நான் செல்வனை கீழிறக்கி சின்னமடி கோலி
செண்டுமல்லி பூவெடுத்தேன் இந்த சீமையிலே
உள்ளவர்கள் சீமானைத் தோத்தவள் செண்டுமல்லி
பூவெடுத்தால் செடியும் கலையாதென்றார் சின்னமடி
யவிழ்த்து செண்டுமல்லி தானுதறி என்னைத் தேடியசாமி
நான் சிந்திவிட்டேன் கண்ணீரு 25

மாமரத்து பக்ஷியெல்லாம் என்னைப்பெற்ற அப்பா
மைந்தனென்று கொஞ்சயிலே மாவாலே பொம்மைசெய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பாவிக்கு மைந்தனென்று தந்தார்கள்
மாவுந்தான் பேசலியே என்னைப்பெற்ற அப்பா
எனக்கு மைந்தன்கலி தீரலியே 26

பூமரத்து பக்ஷியெல்லாம் என்னைப்பெற்ற அப்பா
பிள்ளைவைத்து கொஞ்சயிலே பூவாலே பொம்மை செய்து
நான் பாவிக்கு பிள்ளையென்று தந்தார்கள்
பூவுந்தான் பேசலியே என்னைப்பெற்ற அப்பா
எனக்கு பிள்ளைகலி தீரலியே. 27

காந்தாமணி ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெகமெங்கும் புகழ்பெற்ற இன்பகான கீதமணி

திருசிறபுரம் ஸ்ரீமான் R. T. தங்கமுத்துதாஸ் அவர்கள்

இயற்றிய

# இன்பரச ஒப்பாரி

### வெண்பா

அம்பிகையாள் மனமகிழும்
ஆதி புதல்வா இத்ததி
இன்பரச ஒப்பாரி இயம்புதற்கு
தும்பிமுகனே துணைபுரிவாய்
நின்பதமே நம்பினேன் எனதருள்புரிவாய்.

சாமிசங்குமுழங்கும் என்னைப்பெற்ற அப்பா
நான்வாழும்வாசலிலே சந்திரன்ஒளிவீசும்
அந்தசந்திரன் வெளிச்சத்திலே
இங்கேஜாதிமல்லி பூபூர்க்கும்
அந்தஜாதிமல்லி பூவெடுத்து நீபெற்றபெண்ணாள்
நான்சரந்தொடுத்து மாலைகட்டி
எனக்கு சாடுகம்மல் மாட்டவிட்டு
நான்ஜாதிவர்ணப் பட்டுடுத்தி
உனக்கு சந்தண நிறக்கோடி சாணமிட்டு நானெடுத்து
குங்கும நிறக்கோடி குளித்துகையில் நானெடுத்து
இஞ்சிவர்ணக்கோடி என்னைப்பெற்ற அப்பா
எடுத்துகையிலே பிடித்து
இன்னைக்கி ஜயகண்டி ஓசையிட சகலஜனம் கூடிவர
உன்னுடைய சவமிருக்கும் வாசலுக்கு
என்னைக்கொண்ட சந்திருரும்நானும்
சட்டெனவே வந்தாலும் உன்னுடைய சவம்
பார்க்க கிட்டலியே நான்பாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குக் கொண்டுவந்த சந்தணநிறக்கோடி
உன்னுடைய சவத்துக்கு போத்தலியே.

அம்மன்சங்குமுழங்க என்னைப்பெற்ற அப்பா
நான்வாழும் வாசலிலே ஆகாயம் ஒளிவீச
அந்த ஆகாய வெளிச்சத்திலே
ஒரு அடுக்குமல்லி பூபூர்க்கும்
நான் அடுக்குமல்லி பூவெடுத்து
அடியாளொரு மாலைகட்டி
ஐந்துவர்ணப்பட்டுடுத்தி நீபெற்றபெண்ணாள்
அரக்குவர்ணக்கோடி அன்பாக நானெடுத்து
மஞ்சள்வர்ணக்கோடி என்னைப்பெற்ற அப்பா
மதிப்பாக நானெடுத்து
பஞ்சவர்ணக்கோடி என்னைப்பெற்ற அப்பா
பக்குவமாய் நானெடுத்து
அலரிதம்பூர் ஓசையிட
அநேகஜனங்கூடிவர உன் அங்கமிருக்கும்வாசல்
என்னைக்கொண்ட அர்ச்சுனரும் நானும்
அவசரமாய் வந்தாலும்
உன்னுடைய அங்கம் பார்க்கக்கிட்டலியே
என்னை எடுத்துவளர்த்த இன்பமுள்ள அப்பா
நான்பாவி கொண்டுவந்த
அரக்குவர்ணக்கோடி என் அருமை அப்பா
உன் அங்கத்துக்கு போத்தலியே.

கள்ளர்மலை தாண்டி கழுகுமலை சந்திலே
கந்தனிருக்குமிடம் கானவள்ளி தூங்குமிடம்
கதம்பம் மலருமிடம் என்னைப்பெற்ற அப்பா
ஒருகதலி பழுத்திருக்கும்
கந்தனிடத்திலே நீங்கள் கைலாயம்போன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தைச்சொல்லி நீபெற்றசெல்வி
நான்கதறி அழுதேனென்றால் இன்னக்கி
கதலிபழம் தின்னவரும் கருங்குருவி பட்சியெல்லாம்
நான்கதரும் குறைகேட்டு
கதலிபழம் தின்னாமல் என்னைப்பெற்ற அப்பா
இப்போ கண்ணீர் விடுகுதையா.

ஆனைமலைதாண்டி அழகுமலைசந்திலே
ஐவரிக்குமிடம் அம்பா ஞறங்குமிடம்
அரும்பு மலருமிடம் ஒருஅத்தி பழுக்குமிடம்
அந்த ஐவரிடத்திலே என்னைப்பெற்ற அப்பா
நீங்கள் அறனுலகுபோற அவதிதனைச் சொல்லிவிட்டால்
அத்திபழம் தின்னவந்த அன்னப்புறு பட்சியெல்லாம்
நான் அலரும் குறைகேட்டு
அத்திபழம் தின்னாமல் என்னைப்பெற்ற அப்பா
இப்போ அழுது புலம்புதையா.

## தாயாருக்குப் புலம்பல்

நாலுகடலிலே நடுக்கடலின் மத்தியிலே
அங்கே நன்றாய் விளைந்திருக்கும்
என்னைப்பெற்ற தாயே
நான் நல்லமுத்து வேண்டுமென்றால்
நம்ம நாட்டிலுள்ள காவலரால் நல்ல முத்துதேடி
நீபெற்றநங்கைக் கனுப்பிடுவாய்
உங்கள்கண்ணு மறைந்தவுடனே
என்னைப்பெற்ற அம்மா நல்லமுத்து கிட்டலியே
நான்பாவி நங்கை புலம்புறது
நீபோகும் நமனுலகு சம்மதமோ.

ஐந்துகடலிலே அலைகடலின் மத்தியிலே
என்னைப்பெற்ற தாயே அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாய் விளைந்திருக்கும்
ஆணிமுத்து வேண்டுமென்றால்
நீ ஆளை அனுப்பி ஆணிமுத்ததேடி
நீ பெற்ற அல்லிக் கனுப்பிடுவாய்
உங்கள் கண்ணு மறைந்தவுடனே
என்னைப் பெற்றதாயே
எனக்கு ஆணிமுத்து கிட்டலியே
நான் அழுதுபுலம்புறது நீபோகும்
அறனுலகு சம்மதமோ.

சித்திரை மாதத்தில் என்னைப்பெற்ற தாயே
நான் உங்க வாசல்வந்து
சீறுவேண்டு மென்று சொன்னால்
சிங்கப்பூர் சீட்டியிலே சில தினுசு வந்திறங்கும்
வங்காளம் சீட்டி என்னைப்பெற்ற அம்மா
வகைவகையாய் வந்திறங்கும்
பம்பாய்பட்டு சீட்டியிலே பலதினுசு வந்திறங்கும்
உங்கள் கண்ணு மறைந்தவுடனே
சீறுகளை நானிழந்தேன் சீட்டிகளை நான்மறந்தேன்
உங்கள்வாசல் வந்துநின்று
என்னைப்பெற்றதாயே நான்சிதறி மயங்குறேனே.

வைகாசிமாதத்தில் என்னைப்பெற்ற தாயே
நான் உன்னுடைய வாசல்வந்து
நான் வரிசைவேண்டு மென்றுசொன்னால்
வடகாசிபட்டு வகைவகையாய் வந்திறங்கும்
தென்காசிபட்டு தினுசுக்கொன்றாய் வந்திறங்கும்
கல்கத்தாபட்டு கணக்காக வந்திறங்கும்
உங்கள் கண்ணு மறைந்தவுடனே
தென்காசிபட்டு சீறுகளை நான்மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடகாசிபட்டு வரிசைகளை நானிழந்து
நான் பாவி இப்போ வயிறெரிந்து நிற்கிறேனே.

## புருஷனுக்குப் புலம்பல்

பத்துசுத்து கல்கோட்டை என்னைத்தேடியசாமி
ஒருபவளமணி மண்டபமே
அந்த பவளமணி மண்டபத்தில்
ஒருபவுனிழைத்த ஊஞ்சலிட்டு நம்பயிருபேரும்
பக்குவமாய்குந்தி பாசிவிளையாடையிலே
அந்தப் பட்டணத்து தேவடியாள்
என்னைத் தேடிய மன்னவரே
பார்த்து அழைத்தாளோ பதில் லட்டர் தந்தாளோ
பதில் லட்டர் கண்டவுடன்
பட்டணத்து தாசிவீடு பக்குவமாய் போனீர்களோ
அந்தப்பட்டணத்து தாசியோடே என்னைத்தேடிய சாமி
நீங்கள் படுத்துறங்கும் வேளையிலே
அந்தப் படுபாவி வேசியரை
ஒருபாம்பு யிருந்து தீண்டாதோ
அவள் பரலோகம் சேராளோ
என்னைக்கொண்ட மன்னவரே
நான்பாவி வாசலுக்கு நீங்கள்
படுத்துறங்க வாரதெப்போ.

ஐந்துசுத்து கல்கோட்டை நம்வாசலிலே
என்னைத் தேடியசாமி ஒரு அழகுமணி மண்டபமே
அந்த அழகுமணி மண்டபத்தில்
ஒரு அரும்பவுன் ஊஞ்சலிட்டு நம்பயிருபேரும்
அழகான சொக்கட்டான் ஆடி விளையாடையிலே
உங்களை அரந்தாங்கி தேவடியாள்
அன்போடழைத்தாளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அட்ரஸைம் தந்தாளோ
அந்த அட்ரஸைக் கண்டவுடன்
அரந்தாங்கி தாசிவீடு அவசரமாய் போனீர்களோ
அந்த அரந்தாங்கி தாசியோடு
ஆடி விளையாடையிலே அந்த ஆகாதவேசியரை
ஒரு அரவமங்கே தீண்டாதோ
அவள் அரனுலகம் போகாளோ
நான் பாவிவாசல் நீங்கள் அன்னம்போல வாரதெப்போ.

சன்னசுத்துக் கல்கோட்டை
என்னைத்தேடிய மன்னவரே நம்மவாசல்
ஒரு சலங்கைமணி மண்டபமே
அந்த சலங்கைமணி மண்டபத்தில்
ஒரு ஜாதிமல்லி ஊஞ்சலிட்டு
நம்மிருபேரும் சதுரங்க மாடையிலே
உங்களை சமயபுரம் தேவடியாள்
ஜாடையாய் அழைத்தாளோ சரச லட்டர் தந்தாளோ
அந்த சரச லட்டர் கண்டவுடன்
சமயபுரம் தாசிவீடு நீங்கள் சைக்கிலில் போயிறங்கி
நீங்களிருபேரும் ஜலத்தில் விளையாடையிலே
அந்தசதிகாரி வேசியரை
ஒரு சர்ப்பம் அங்கே தீண்டாதோ
அவள் சாமிபதம் சேராளோ
என்னைத் தேடியசாமி நான் பாவிவாசல்
நீங்கள் சந்தோஷமாய் வாரதெப்போ.

சின்னசுத்துக் கல்கோட்டை
ஒரு சிகப்பிழைத்த மண்டபத்தில்
அந்தச் சிகப்பிழைத்த மண்டபத்தில்
என்னைத்தேடியசாமி ஒரு சிவந்தியப்பூ ஊஞ்சலிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இருபேரும் சிரித்து விளையாடையிலே
சிரங்கம் தேவடியாள்
உங்களை சிமிட்டி அழைத்தாளோ
சேதிலட்டர் தந்தாளோ
அந்த சேதிலட்டர் கண்டவுடன்
சிரங்கம் தாசிவீடு சீக்கிரமாய் போனீர்களோ
அந்த ஜெகஜால தாசியோடு
நீங்கள் சீட்டு விளையாடையிலே
அந்த சிரங்கம் வேசியரை
ஒரு சிறுநாகம் தீண்டாதோ
அவள் சிவன்பதம் சேராளோ நான்பாவிவாசல்
நீங்கள் சீக்கிரமாய் வாரதெப்போ.

சிகப்பு யிரும்புபெட்டி நான்பாவி
சீலைவைக்கும் ட்ரங்குபெட்டி
நான் சிறுவயதில் அறுத்தவள் சீமானைத் தோற்றவள்
வயதில் அறுத்தவள் என்னைக்கொண்ட
வல்லவரை தோற்றவள்
சிகப்புயிரும்பு பெட்டியிடம்
சேலைவைக்கும் ட்ரங்கினிடம்
நான்பாவி செல்லிகுறை சொல்லிவிட்டால்
இன்றைக்கு சேலை அழுகலாச்சே
இப்போ சிகப்புயிரும்பு மங்கலாச்சே.

பச்சை யிரும்புபெட்டி என்னைத் தேடியசாமி
நான்பாவி பவுனுவைக்கும் ட்ரங்குபெட்டி
நான்பாவி யறுத்தவள் என்னைக்கொண்ட
பாண்டியரை தோற்றவள் தாலியறுத்தவள்
என்னுடைய தருமரைத் தோற்றவள்
பச்சையிரும்பு பெட்டியிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுனுவைக்கும் ட்ரங்கினிடம்
நான்பாவிகுறை சொல்லிவிட்டால்
இப்போபவுனு அழுகலாச்சே
பச்சையிரும்பு மங்கலாச்சே.

## சகோதரனுக்குப் புலம்பல்

தங்கக்குடைபிடித்து தருந்தகம்பிவேஷ்டிகட்டி
நான்பாவிவாசல்நீ தைமாதம் வந்தாலும்
என்னுடையதம்பி வாரானென்று
தாவியழைத்திடுவேன் என்னைக்கொண்ட
தருமருக்குச் சொல்லிடுவேன்
இப்போ தம்பியைக் காணுமல்
தவித்து புலம்பலாச்சே
என்னுடைய தருமர்மனம் நோகலாச்சே.

பொன்னாலும் குடைபிடித்து என்னுடன்பிறந்த தம்பி
நீபுதுக்கம்பிவேஷ்டிகட்டி நான்பாவிவாசல்
புரட்டாசிமாதம் வந்தால்
என்னுடையபிறப்பு வாருனென்று
நான்போற்றி யழைத்திடுவேன்
என்னுடைய புண்ணியற்கே சொல்லிடுவேன்
என்னுடைய பிறப்பையிப்போ காணுமல்
நான்புலம்பி யழுகலாச்சே
என்னுடைய புண்ணியரும் நோகலாச்சே.

முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலயம், சென்னை-1. (1954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

திருசிறபுரம் டி. எஸ். சுடலைமுத்து தாஸ்

அவர்கள் இயற்றிய

அரிவையர் புலம்பும்

# அமிர்த ஒப்பாரி

## விருத்தம்

அரிவையர்கள் புலம்பும் அமிர்த ஒப்பாரி
பரிமளித்து ஓங்கவென்று
சிறியவன் தெண்டனிட்டேன்
கரிமுகனின் கழலே காப்பு.

## தகப்பனுருக்கு

1 பச்சை கடுதாசி என்னைப்பெற்ற அப்பா
உனக்கு பட்டணத்து மைக்கூடு
நீங்கள் பரலோகம் போரேனென்று
நீபெற்ற பாவிக்கு பாங்குடனே எழுதிவிட்டால்
உங்க கடுதாசி கண்டவுடன்
என்னைக்கொண்ட பாண்டியரும்
நான் பாங்குடனே வந்து
பவளத்தேர் செய்து
அந்த பவளத்தேர்க்குள்ளே நீபெற்ற
பாவிநான் பதறி அழுதுவிட்டால்
நீங்கள்போகும் ப்ரமலோகம் மோட்சியர்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 சிகப்பு கடுதாசி என்னைப்பெற்ற அப்பா
உனக்கு சீரங்கத்துக்கு மைக்கூடு
நீங்கள் சிவலோகம் போரேனென்று
நான் வாழும் சீமைக்கு
சீக்கிரம் எழுதிவிட்டால்
உங்க கடுதாசி கண்டவுடன்
சீரகச்சம்பா வாக்கரிசி
சீக்கிரமாய் நானெடுத்து
தென்னைமரமேறி தினுசுக்கொரு காயிறக்கி
செந்தாமரைப் பூதேர்கட்டி சீக்கிரமாய் வந்தாலும்
உன்னுடையதிரேகம் பார்க்கக்கிட்டலியே
நீங்கள் போகும் தெய்வலோகம் சம்மதமோ.

3 மதுரைக்கு நேர்கிழக்கே மாரியம்மன் கோவிலுக்கு
என்னைப்பெற்ற அப்பா
உங்கள் கண்ணுள்ள நாளையிலே
நீங்கள் ஒரு மணிவிளக்கு போட்டீர்களே
அந்த மணிவிளக்கு போட்டதோஷம்
உங்கள் கண்ணும் மறைந்தவுடன்
நீங்கள் பெற்ற மகள்மேலே சாய்ந்ததையா.

## தாயாருக்கு

4 சிகப்பு ரயிலுவண்டி என்னைப்பெற்ற தாயே
நான்பிறந்த சேலத்திற்கு போகும்வண்டி
சிகப்பு ரயிலேறி சேலத்திற்கு போயிறங்கி
நீபெற்ற செல்வக்கிளி வாய்திறந்து
சேலேவேணு மென்று சொன்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு சேலை எடுத்திடுவாய்
சிறுநகையும் செய்திடுவாய்
சீறு வகைகளையும் சிறப்பாக செய்திடுவாய்
நான் சீலையும் மடிச்சுடுத்தி
சிறுநகையும் மேல்பூட்டி
சீறுகளை முன்னடத்தி சேலத்து
வீதி சிறப்பாக வந்தாலும் அந்த
சேலத்திலே பெய்யும் மழை எனக்கு
சேலை நனையாது சிறுநகையும் மங்காது
சீறுகளும் நனையாது உங்கள் கண்ணும்
மறைந்தவுடனே சேலை நனைந்திடுச்சே
சிறுநகையும் மங்கிடுச்சே சீறுகளும் நனைந்திடுச்சே
என்னைப் பெற்றதாயே நீங்கள்போகும்
சிவலோகம் சம்மதமோ.

5 பச்சை ரயிலுவண்டி என்னைப்பெற்ற தாயே
நான் பிறந்தசீமை பட்டணம் போகும்வண்டி
பச்சை ரயிலேறி பட்டணம் போயிறங்கி
நீபெற்ற பச்சைக்கிளியாள் வாய்திறந்து
பாவிநான் பட்டுவேணும் என்று சொன்னால்
நீ பட்டு எடுத்திடுவாய் பவுன் நகையும் செய்திடுவாய்
நான் பட்டுமடிச்சுடுத்தி பவுன்நகையும் மேல்பூட்டி
பட்டணம் வீதியும் பலவீதி நான்வந்தால்
அந்த பட்டணத்தில் பெய்யும் மழை
எனக்கு பட்டுநனையாது பவுன் நகையும் மங்காது
உங்கள் கண்ணும் மறைந்தவுடன்
எனக்கு பட்டு நனைந்திடுச்சே
பவுன் நகையும் மங்கிடுச்சே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப்பெற்ற தாயே நீங்கள்
போகும் பரமலோகம் சம்மதமோ.

6 பொட்டி ரயிலுவண்டி என்னைப்பெற்ற தாயே
நான் பிறந்தசீமை புதுக்கோட்டை போகும்வண்டி
பொட்டி ரயிலேறி புதுக்கோட்டை போயிறங்கி
நீபெற்ற பொன்னுக்கிளி வாய்திறந்து
புடவைவேண்டு மென்று சொன்னால்
நீபுடவை எடுத்திடுவாய்
பொன்னுபரணம் செய்திடுவாய்
நான் புடவை மடுச்சுடுத்தி
பொன்னுபரணம் மேல்பூட்டி
அந்த புதுக்கோட்டை வீதியிலே
நான் பொன்னு வழிநடந்தால்
அந்த புதுக்கோட்டையில் பெய்யும்மழை
எனக்கு புடவை நனையாது
பொன்னுபரணம் மங்காது
உங்கள் கண்ணும் மறைந்தவுடனே
புடவை நனைந்திடுச்சே
பொன்னுபரணம் மங்கிடுச்சே
என்னைப்பெற்ற தாயே நீங்கள்
போகிற பொன்னுலகம் சம்மதமோ.

## பிள்ளை வரம்

7 கும்பகோணத்திலே மாமாங்ககுளத்திலே
என்னைக்கொண்ட கோமானும் நானும்
குளித்துத் தலைமுழுகி கும்பேசுவரம் கோவிலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருபேரும்
ஒரு குழந்தைவரம் கேழ்க்கையிலே
அந்த கும்பேசுர ஈஸ்வரரும்
இந்த கோதை முகம்பார்த்து
ஒரு குழந்தையைக் கைகொடுத்தார்
அந்தக் குழந்தையுட தோஷமல்லோ
என்னைக்கொண்ட கோமானைக் கொள்ளையிட்டேன்.

8 திருச்சிக்கு நேர்வடக்கே
திருவானக்காவலின்
ஜெம்புலிங்க நாதரிடம்
என்னைக்கொண்ட சீமானும் நானும்
ஒரு செல்வன் வரம் கேழ்க்கையிலே
அந்த ஜெம்புலிங்கநாதரும்
இந்த தேவி முகம்பார்த்து
ஒரு செல்வனைக் கைகொடுத்தார்
அந்த செல்வனுட தோஷமல்லோ
என்னைக்கொண்ட சீமானைக் கொள்ளையிட்டேன்.

## புருஷனுக்கு

9 சிகப்பிழைத்த மோட்டாராம்
என்னைக்கொண்ட சீமானும்
ஏறும்மோட்டார் நீங்கள்
சிகப்பிழைத்த மோட்டாரேறி
சீரங்கம் போயிறங்கி
அந்த சீரங்கத்து தாசியோடே
நீங்கள் சிட்டுவிளை யாடையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சிரங்கத்து தாசியை
ஒரு செந்தேளு கொட்டாதா
அவள் சிவலோகம் சேராளோ
என்பாவி வாசலுக்கு
நீங்கள் சீக்கிரமாய் வாரதெப்போ.

10 கல்லிழைத்த மோட்டாராம்
என்னைக்கொண்ட கருணைராஜா
ஏறும் மோட்டார்
நீங்கள் கல்லிழைத்த மோட்டார்ஏறி
காரைக்குடி போயிறங்கி
அந்த காரைக்குடி தாசியோடே
நீங்கள் கலந்து விளையாடையிலே
அந்த காரைக்குடி தாசியை
ஒரு கருநாகம் தீண்டாதோ
அவள் கைலாசம் சேராளோ
என்னைக்கொண்ட மன்னவரே
என்பாவி வாசலுக்கு
நீங்கள் காலமே வாரதெப்போ.

11 பவுன் இழைத்த மோட்டாராம்
என்னைக்கொண்ட பாண்டியர்
ஏறும் மோட்டார்
நீங்கள் பவுன்இழைத்த மோட்டார்ஏறி
பழனிமலை போயிறங்கி
அந்த பழனிமலை தாசியோடே
படுத்துறங்கும் வேளையிலே
அந்த பழனிமலை தாசியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாம்பிருந்து தீண்டாதா
அவள் பரமலோகம் சேராளோ
என்னைக்கொண்ட பாண்டியரே
என்பாவி வாசலுக்கு
நீங்கள் படுத்துறங்க வாரதெப்போ.

சகோதரனுக்கு

12 பூங்காவனச் சோலைகளும்
பொற்றாமரைக் குளமும்
என்கூடப் பிறந்ததம்பி
நான் வாழும்வாசலிலே
போலீசு காவல்களும்
அந்த பொற்றாமரைக்குளத்தில்
பொண்ணுத் தலைமுழுகி
போலீசை முன் அனுப்பி
பொண்ணு வழிநடந்து
நீவாழும் சீமை புதுக்கோட்டை
வாரேனென்று பொழுதோடே
தந்திசொல்லி விட்டால்
தந்தியைக் கண்டவுடன்
நான் காத வழிதூரம்
எக்காளம் ஊதிவர
எட்டௌனீர் கண்திறந்து
என் கூடப்பிறந்த தம்பி
எனைக் காப்பாற்ற வாரதெப்போ.

13 செண்பக சோலைகளும்
செந்தாமரைக் குளமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கூடப்பிறந்த தம்பி
நான் வாழும் வாசலிலே
சிப்பாய்கள் காவல்களும்
அந்த செந்தாமரைக் குளத்தில்
செல்வித் தலைமுழுகி
சிப்பாய்களை முன் அனுப்பி
செல்வி வழிநடந்து
நீவாழும்சீமை சேலத்திற்கு
வாரேனென்று சீக்கிரமாய்
தந்தி சொன்னால்
தந்தியைக் கண்டவுடன்
குதிரையின்மேல் மேளம்வைத்து
கோலாகால மேளமடிக்க
பட்டத்து யானையின்மேல் மேளம்வைத்து
பரப்பரப்பாய் அடித்துவர
பத்து இளநீர் கண்திறந்து
என் கூடப்பிறந்த தம்பி எனக்கு
நீ பசியாற்ற வாரதெப்போ.

அமிர்த ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பத்தினிமார் புலம்பும்

# பஞ்சரத்தின ஒப்பாரி

### வெண்பா

பத்தினிமார்கள் புலம்பும் பஞ்சரத்தின ஒப்பாரி
சித்திரமாய்ச் செப்பிவர செந்தமிழா—வித்தரையில்
பாடும் பதத்தைப் பதிப்பிக்க பார்தனிலே
தேடுங் கணேசா துயர் தீர்.

1 தங்கத்தால் புஸ்தகங்கள் ராஜாவே மந்திரியே
தாமரைப்பூ கூடாரம்
நீர் தனித்துக் கணக்கெழுத
நான் தருமமரையும் தேடுறேனே

2 பொன்னுன புஸ்தகங்கள் ராஜாவே மந்திரியே
புதுமையுள்ள கூடாரம்
மொத்தம் பிடித்து கணக்கெழுத
யான் புண்ணியனை தேடுறேனே

3 செங்கல்கட்டி வில்வமரம் பெத்தாளே அம்மாடி
சிவலோகம் தெப்பக்குளம்
சுவத்தால் மறைக்கல்லோ
என் சிந்தனையும் தீரலையே

4 கல்லுகட்டி வில்வமரம் பெத்தாளே அம்மாடி
கைலாசம் தெப்பகுளம் நான்
கண்டுவருவே னென்றால்
கதவால் மறைக்கிலேயே

5 பொன்னு கயரெடுத்து பெத்தாளே அம்மாடி
பூத்தமரம் ஊஞ்சலிட்டு நீர்
போகவனுப்பு மென்றால்
பிரியமனம் கூடலியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 தங்க கயறெடுத்து பெத்தாளே அம்மாடி
தனஞ்செயனூர் ஊஞ்சலிட்டு நான்
தனித்து வருவேனானல்
என் தாகத்தை தீர்த்திடுவாய்

7 ஆலஞ்சரவே யான் தேடிய ராஜாவே
ஆரைபடி மாவே நீர்
அணிந்த மாலை வாங்க நான்
அங்கே வருவேனையா

8 கிள்ளு கொசவனமே தேடிய ராஜாவே
கிளிமூக்கு வெத்திலையே யான்
இன்னொருவன் சாதமுண்ண
என்னைவைத்துப் போனீரா

9 செஞ்சியிலே வாழும் பெண்ணு பெத்தாளே அம்மாடி
சேன பணக்காரி யான்
சேற்றிலும் தண்ணியிலும்
சேரவர மாட்டேன்

10 பூந்தேரை கட்டியல்லோ என்னைப்பெத்த அம்மாடி
பொழுதே டெடுத்திடுங்கோ
பதினாறும் நாளைக்கு நான்
பழம்பாப்ப வந்திடுவேன்

11 பார்ப்பார் அரண்மனையாம் பெத்தாரே அப்பாவே
பாக்கு விற்கும் மண்டபமாம்
பாக்கு விலை மதித்து
பாங்கு செய்ய வாரதெப்போ

12 செட்டி அரண்மனையாம் பெத்தாரே அப்பாவே
சிப்பு விற்கும் மண்டபமாம் நீர்
சிப்பு விலை மதித்து
சீறு செய்ய வாரதெப்போ

13 காதத்தில் அரிசி வாங்கி பெத்தாளே அம்மாடி
கன்னாந்தவலை வாங்கி நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானகத்தில் பொங்கிதின்ன
கன்னடச்சி யானேனே

14 தூரத்தில் அரிசிவாங்கி பெத்தாளே அம்மாடி
தருந்த தவலைவாங்கி நான்
தூரத்தில் பொங்கிதின்ன
துக்கமுடன் நின்றழுதேன்

15 செஞ்சிக்குப் போனதுண்டு பெத்தாளே அம்மாடி
கைவிளக்கு தொட்டதுண்டு நான்
கைவிளக்கு தொட்டதோஷம்
கைகுழந்தை தானம் பண்ணேன்

16 நான்மதுரைக்கு போனதுண்டு பெத்தாளே அம்மாடி
மணிவிளக்கு தொட்டதுண்டு
மதுரையி லுள்ள சன்னுசி
எனக்கு மைந்தன்பல மில்லையென்றான்

17 எட்டடுக்கு மெத்தையிலே என்புரவி கண்ணளா
இருக்கிறயென் றெண்ணிருந்தேன் உன்
இருப்பு முடிந்தவுடன்
எமலோகம் சேர்ந்தீரா

18 பத்தடி கூடத்திலே என்புரவி கண்ணளா
படிக்கின்ற யென்றிருந்தேன் உன்
படிப்பு முடிந்தவுடன்
பரமலோகம் போனீரா

19 தாழ பிலாமரமே என் ராஜாவே மந்திரியே
தங்கிருந்த பட்சியாச்சே நான்
தங்கிருந்த பட்சியை
தனியே விட்டு போனீரா

20 ஒண்டி விளாமரமாம் என்சாமி என் துரையே
ஒண்டிருந்த பட்சியாச்சே
ஒண்டிருந்த பட்சியை
உருகவிட்டு போனீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 கச்சை வரிஞ்சிகட்டி என்னைப்பெத்த அப்பாவே
காயிதம் ஆடையிலே உன்
கச்சை தளர்ந்துதையா
நான் காயிதம் தோர்த்தேனையா

22 சோமன் வரிஞ்சிகட்டி என்னைப்பெத்த அப்பாவே
சொக்கட்டானடும்போது உன்
சோமன் தளர்ந்துதையா
யான் சொக்கட்டான் தோர்த்தேனையா

23 கும்பகோணம் சம்பாநெல்லு பெத்தாளே அம்மாடி
கொழுத்த நல்ல தாவிருக்க
மரமேறி தேனழிக்கும்
மரவனுக்கு தானம் பண்ணீர்

24 மஞ்சாகுப்பம் சம்பாநெல்லு பெத்தாளே அம்மாடி
மறைக்கநல்ல தாவுமுண்டு
கொம்பேறி தேனழிக்கும்
கொரவனுக்கு தானம் பண்ணீர்

25 காண வருவேனென்றால் பெத்தாளே அம்மாடி
கால்லாறு தண்ணீர்வரும்
கல்லாற்றை நீந்திவர
கட்டுமரம் போட்டனுப்பும்

26 பார்க்க வருவேனென்றால் பெத்தாரே அப்பாவே
பாலாறு தண்ணீர்வரும்
பாலாற்றை நீந்திவர
பாமரங்கள் போட்டனுப்பும்

27 மல்லிகை பூந்தோட்டம் பெத்தாளே அம்மாடி
மருக்கொழுந்து பூர்க்கும்வனம்
பூர்க்கும் வனந்தேடி
பொற்கொடியாள் வாரதெப்போ

28 போரையோ பூவுதிரோ பெத்தாளே அம்மாடி
தங்க ரதங் குலுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனஞ்செயனர் பெற்றபெண்ணு
தனித்துவரக் காணலியே

29 காசிகுளமுண்டு பெத்தாளே அம்மாடி
கப்பமஞ்சள் தோப்புமுண்டு
அரைத்து குளிக்கையிலே
அமங்கிளியாள் பார்த்தாளோ

30 மதுரையிலே கூடாரம் தேடிய ராஜாவே
மல்லிகைப்பூ வியாபாரம்
மங்கை வருவே னென்ருல்
மாத்துக்கொரு காவலுண்டு

31 செஞ்சியிலே கூடாரம் தேடிய ராஜாவே
செண்பகப்பூ வியாபாரம்
சீதை வருவேனுனல்
செடிக்கொரு காவலுண்டு

32 கும்பகோணம் சாலையிலே பெத்தாளே அம்மாடி
குறிப்பார்க்கப் போனிடத்தே
குண்ணுகளைப் போலே என்
கொற்றவரை நானிழந்தேன்

33 மண்ணு கிணறுவெட்டி தேடிய ராஜாவே
மருக்கொழுந்து தோப்புவைத்து
பூமுடிக்கும் பெண்ணரசி
புலப்புவதும் சம்மதமா

34 மேட்டு தெருவிலே மூதேவி அத்தையம்மா
முத்துரதம் போகுதென்று
ஓட்டமாய் வந்துபார்க்க
உன் ரதந்தான் போகுதம்மா

35 பள்ளத் தெருவிலே அத்தையம்மா நல்ல
பவழத்தேர் போகு தென்று
என் ஆளனைப் பெற்றெடுத்த
அத்தை ரதம் போகுதம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36 கல்லிழைத்த திண்ணையிலே பெத்தாளே அம்மாடி
பொன்னிழைத்த பாய்போட்டு
அக்காளும் தங்கையுமாய்
நாங்கள் உட்கார்ந்து ஆடையிலே

37 வந்தான் தபால்காரன் பெத்தாளே அம்மாடி
வாங்கிப் படிக்கையிலே
சீமை கடுதாசி
சீக்கிரமாய் வந்ததம்மா

38 கடுதாசி கண்டவுடன் பெத்தாளே அம்மாடி
கட்டாயம் ரயில்வண்டி
ஏறிப்புறப் பட்டவண்டி
இரங்குறது பொட்டிவண்டி

39 கட்டைவண்டி யகப்படாமல் பெத்தாளே அம்மாடி
கால்நடையாய் வந்தோமானால்
காசியிலே தண்ணிமொண்டு
காலுருவி வார்த்திடுவீர்

40 சேன மணிதருண்டு பெத்தாளே அம்மாடி
சிதம்பரத்து தேருமுண்டு
சிதம்பரத்து தேருடைய
சேன மணிதனையுந் தோத்துவிட்டேன்

41 வேண மணிதருண்டு பெத்தாளே அம்மாடி
வெங்கலத்து தேருமுண்டு
வெங்கலத்து தேருடைய
வேண மணிதனையுந் தோத்துவிட்டேன்

42 கொம்பு திருகாணி பெற்றாளே அம்மாடி
கொடிநிறைந்த பாவக்காய்
கொண்டணைப்பா ரில்லாத
கொடியோடே மக்குறேனே

43 செம்பு திருகாணி என்னைப்பெற்ற அப்பாவே
செடி நிறைந்த பாவக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்தணைப்பா — ரில்லாத
செடியோடே — மக்குறேனே

44 அச்சடி நால்சிவக்க — என்புறவி கண்ணுளா
யானைமுகம் — மூந்தாணி
அண்டிவந்து — கோடிபோட
அண்ணன் தம்பி — மெத்தவம்மா

45 குச்சடி — நால்சிவக்க
என்புறவி — கண்ணுளா
கொண்டுவந்து — கோடிபோட
குதிரைமுகம் — மூந்தாணி

46 சீமை புடலங்கா — பெத்தாளே அம்மாடி
சித்திரத்து — கத்திரிக்காய்
ஜீவன் — யிருக்கையிலே
சேதி சொன்ன — லாகாதா

47 ஆவா புடலங்கா — என்னைப்பெற்ற அம்மாவே
அஞ்சுவித — கத்திரிக்காய்
ஆவிக் — கிடைக்கையிலே
ஆளுவிட்டா — லாகாதா

48 ஆலஞ் சரகெடுத்து — தேடிய ராஜாவே
ஆடிகிணறு — நீரெடுத்து
ஆக்கிவெளியில் — வந்தால்
ஆளனில்லை — என்றுரைப்பார்

49 புங்கஞ் சரகெடுத்து — தேடிய ராஜாவே
புதுகிணறு — நீரெடுத்து
பொங்கி வெளியில் — வந்தால்
புருஷனில்லை — என்றுரைப்பார்

50 நஞ்சை விளஞ்சிவரும் — பெத்தாளே அம்மாடி
நாலுவாய்க்கால் — தண்ணீர்வரும்
நஞ்சையிலே — காலுவைக்க
நடுக்குதே — காலுரெண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51 புஞ்சை விளஞ்சிவரும் பெத்தாளே அம்மாடி
பிஞ்சிவாய்க்கால் தண்ணீர்வரும்
பிஞ்சியிலே காலுவைக்க
பின்னுதே காலுரெண்டும்

52 ஜாதி எலுமிச்சங்கா பெத்தாளே அம்மாடி
சமுத்திரத்து நல்பவழம்
ஜாதியிலும் பூர்க்காமல்
தனிவழியாய்ப் பூர்த்தாயா

53 கொத்து எலுமிச்சங்கா பெத்தாளே அம்மாடி
கோத்திரத்து நல்பவழம்
கொத்திலேயும் பூர்க்காமல்
கொடிவழியாய் பூர்த்தாயா

54 பாம்புக்கு ரெண்டுகண்ணு பெத்தாளே அம்மாடி
பார்வதியாள் பெற்றபெண்ணு
பாடைமேல் வைக்கையிலே
பாம்பாய் புரளுறேனே

55 தேளுக்கு ரெண்டுகண்ணு பெத்தாளே அம்மாடி
தேவேந்திரன் பெற்றபெண்ணு
தேருமேல் வைக்கையிலே
தேளாய் துடிக்கிறேனே

56 ஒத்தைக்கல் மேடையம்மா பெத்தாளே அம்மாடி
ஒதியமரஞ் சாலையம்மா
ஒருபெண்ணு நின்னழுக
உலகமெல்லாந் தானழுகும்

57 ரெட்டைக்கல் மேடையம்மா பெத்தாளே அம்மாடி
ரயில்போகும் பாதையம்மா
ராணிமகள் நின்னழுதால்
ராஜாங்கம் தானழுகும்

பஞ்சரத்தின ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத சக்தியே நமஃ

# இந்திய பெண்டுகள் புலம்பும்
# அதிநூதன அற்புத
# எமலோக ஒப்பாரி

## புருஷ ஓலம்பல்

பச்சைமயில் மேலே என்னைத்தேடிய ராஜாவே
பரமர் வாரார் என்றிருந்தேன இன்னைக்கு அந்த
பச்சைமயில் பறந்ததென்ன என்னைத்தேடிய ராஜாவே
பரமர் முடி சாய்ந்ததென்னு

தங்கமயில் மேலே என்னைத்தேடிய ராஜாவே
தருமர் வாரார் என்றிருந்தேன் இன்னைக்கு
தங்கமயில் பறந்ததென்னு என்னைத்தேடிய ராஜாவே
தருமர்முடி சாய்ந்ததென்னு

சந்தனமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
சாதுர்யமாய் தேருபண்ணேன் இன்னைக்கு அங்கே
சரிமாரி மழை பொழிய என்னைத்தேடிய ராஜாவே
சந்தேகம் வந்து நேர்ந்ததென்னு

வயிரமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
வருணமடம் கட்டிவைத்தேன் இன்னைக்கு
வருணமடஞ் சாய்ந்ததென்னு என்னைத்தேடிய ராஜாவே
வருத்தம் வந்து நேர்ந்ததென்னு

பச்சைமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
பர்னசாலை கட்டிவைத்தேன் இன்னைக்கு நான்
பர்னசாலை எறுமுன்னே என்னைத்தேடிய ராஜாவே
பரமரையும் தோர்த்துவிட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
வருணமணி பதியவைத்தேன் இன்னைக்கு
வரிசையுடன் வருவோமென்றால் என்னைத்தேடிய ராஜாவே
வகையுள்ள புருஷனில்லை

முருக்கமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
முத்துரதம் சொப்பனிட்டேன் இன்னைக்கு அந்த
முத்துரதம் ஏறுமுன்னே என்னைத்தேடிய ராஜாவே
முன்னமே எமன் சேர்ந்த தென்ன

பூரசமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
புஷ்பரதம் சொப்பனிட்டேன் இன்னைக்கு அந்த
புஷ்பரதம் ஏறுமுன்னே என்னைத்தேடிய ராஜாவே
பூலோகம்விட்டுப் போன தென்ன

வேப்பமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
வெள்ளிரதம் சொப்பனிட்டேன் இன்னைக்கு
வெள்ளிரதம் ஏறுமுன்னே என்னைத்தேடிய ராஜாவே
வேலரிடம் சேரலாமா

அரசமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
ஆளனுக்கு தேருபண்ணேன் இன்னைக்கு அந்த
அழகு தேரு வருகுமுன்னே என்னைத்தேடிய ராஜாவே
ஆயன் பாதம் சேரலாமா

தென்னைமரம் பிளந்து என்னைத்தேடிய ராஜாவே
தேவருக்கு தேருபண்ணேன் இன்னைக்கு அந்த
தேருவந்து சேருமுன்னே என்னைத்தேடிய ராஜாவே
தேவரிடம் சேரலாமா

## பிள்ளைக்குப் புலம்பல்

கல்லாலே கப்பல் செய்து அடாநான் பெற்ற மகனே
கடலிலே விட்டேனடா இன்னைக்கு அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில்விட்ட கப்பலது அடாநான் பெற்ற என்மகனே
கரையில் வந்து சேர்வதெப்போ

மரத்தாலே கப்பல்செய்து அடாநான் பெற்ற என்மகனே
மடுவிலே விட்டேனடா இன்னைக்கு அந்த
மடுவில்விட்ட கப்பலது அடாநான் பெற்ற என்மகனே
மறுபடியும் வாரதெப்போ

பத்தடுக்கு மெத்தையிலே அடாநான் பெற்ற என்மகனே
படிக்கிருய் யென்றிருந்தேன் இன்னைக்கு அந்த
படிப்பையும் மறந்துவிட்டு அடாநான் பெற்ற என்மகனே
பரமலோகம் சேரலாமோ

ஆலமரம் பிளந்து அடாநான் பெற்ற என்மகனே
அரைமரக்கால் சொப்பனிட்டேன் இன்னைக்கு
அள்ளிபொரி யிரைக்க அடாநான் பெற்ற என்மகனே
அருங்குழந்தை காணலியே

பாக்குமரம் பிளந்து அடாநான் பெற்ற என்மகனே
பதுமைவைத்து தேருபண்ணி இன்னைக்கு அந்த
பாலன்தேரு ஏறுமுன்னே அடாநான் பெற்ற என்மகனே
பழுதுவந்து நேர்ந்ததென்ன

எட்டிமரம் பிளந்து அடாநான் பெற்ற என்மகனே
எருதுரெண்டு சொப்பனிட்டேன் இன்னைக்கு அந்த
எருதுமுன்னே விளையாடாமல் நான்பெற்ற என்மகனே
எமலோகம் சேரலாமோ

வில்வமரம் பிளந்து அடாநான் பெற்ற என்மகனே
விளையாட தேருபண்ணேன் இன்னைக்கு அந்த
தேருஏறி விளையாடுமுன்னே அடாநான் பெற்ற என்மகனே
விசனம் வைத்து போனதென்ன

முத்தாலே தேருபண்ணி அடாநான் பெற்ற என்மகனே
மூணுபக்கம் கங்குவைத்து இன்னைக்கு அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தாரதம் வருகுமுன்னே
அடாநான் பெற்ற என்மகனே
முத்துதேரு மேலிருந்து
முறிந்து விழுந்த தென்னு

மருவாலே தேருபண்ணி
அடாநான் பெற்ற என்மகனே
மகனுக்கு என்று சொன்னேன்
இன்னைக்கு அந்த
மருவுதேரு வருகுமுன்னே
அடாநான் பெற்ற என்மகனே
மறைந்ததென்னு
மானிலத்தில்

பாலமுது சோறு செய்து
அடாநான் பெற்ற என்மகனே
பஞ்சத்துடனுனே வளர்த்து
இன்னைக்கு அந்த
பட்சமுள்ள பாலகனே
அடாநான் பெற்ற என்மகனே
பரமனுக்கு
ஒப்படைத்தேன்

## தாயாருக்குப் புலம்பல்

ஆனைமுகம் காப்பு
என்னைப்பெற்றாளே அம்மாடி
ஐகோர்ட்டு லாயராச்சே
இன்னைக்கு
அதட்டி அழைக்கையிலே
என்னைப்பெற்றாளே அம்மாடி
அங்கம்
துடிக்கிறதே

குளத்து நறுமணலாம்
என்னைப்பெற்றாளே அம்மாடி
குதிரை ஓட்டும் பொன் சவுக்காம
இன்னைக்கு அந்த
குதிரை சவுக்கெடுத்தால்
என்னைப்பெற்றாளே அம்மாடி
கோடி ஜனம்
கையெடுப்பார்

கொத்து மருடம்பூ
என்னைப்பெற்றாளே அம்மாடி
கொள்ளடத்து தாழம்பூ
இன்னைக்கு நீங்கள்
கோதி முடிக்கையிலே
என்னைப்பெற்றாளே அம்மாடி
கொலைக்கார
னெங்கிருந்தான்

சாய்ந்திருக்கும் மல்லியப்பூ
என்னைப்பெற்றாளே அம்மாடி
சரங்கோர்த்த ரோஜாப்பூ
இன்னைக்கு நீங்கள்
சரியாய் முடிக்குமுன்னே
என்னைப்பெற்றாளே அம்மாடி
சதிகார
னெங்கிருந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்து நறுமணலாம் என்னைப்பெற்றாளே அம்மாடி
ஆனை ஓட்டும் பொன்சவுக்காம் இன்னைக்கு நீங்கள்
ஆனை சவுக்கெடுத்தால் என்னைப்பெற்றாளே அம்மாடி
ஆயிரம்பேர் கையெடுப்பார்

கும்பகோணம் தாழம்பூ என்னைப்பெற்றாளே அம்மாடி
கூடலூரு மல்லியப்பூ இன்னைக்கு நீங்கள்
கூடி முடிக்கையிலே என்னைப்பெற்றாளே அம்மாடி
குலைக்கார னெங்கிருந்தான்

அஞ்சி சவரன் வாங்கி என்னைப்பெற்றாளே அம்மாடி
ஆனைமுகம் காப்புசெய்தேன் இன்னைக்கு
அந்த காப்புமேல் தோஷமில்லை என்னைப்பெற்றாளே அம்மாடி
ஆண்டவனின் சாபனையோ

வேல மரத்தடியிலே என்னைப்பெற்றாளே அம்மாடி
வெய்யலுக்கு போயிருந்தேன் இன்னைக்கு
வேலமரம் வெட்டவந்த என்னைப்பெற்றாளே அம்மாடி
வேடன் நம்மை வெட்டினானே

முத்து வளையலிட்டு என்னைப்பெற்றாளே அம்மாடி
முருங்கப்பூ மோப்புகட்ட இன்னைக்கு அந்த
மூதேவி வாசலிலே என்னைப்பெற்றாளே அம்மாடி
மூணுநாளும் வாழலியே

கல்லுமேல் சுத்தாழை என்னைப்பெற்றாளே அம்மாடி
கள்ளரெல்லாம் என்பிறப்பு இன்னைக்கு அந்த
கள்ளருக்கு வந்தபாவி என்னைப்பெற்றாளே அம்மாடி
கண்டால் மதிக்கலியே

## தகப்பனுருக்குப் புலம்பல்

பார்த்தால் அழகுடையார் என்னைப்பெற்றாரே அப்பாவே
பாப்பார பிள்ளையாச்சே எங்கள்

பாப்பார பிள்ளைக்கு என்னைப்பெற்ருரே அப்பாவே
பழுதுவந்து நேரலாமோ

கல்லுமேல் கணக்கெழுதும் என்கருத்துள்ள அப்பாவே
கணக்குபிள்ளை என்றிருந்தேன் இன்னைக்கு
கணக்கை மறந்துவிட்டு என்னைப்பெற்ருரே அப்பாவே
கைலங்கிரி போகலாமோ

தென்னமரஞ் சோலை என்னைப்பெற்ற அப்பாவே
தெருவெல்லாம் பூஞ்சோலை இன்னைக்கு நீங்கள்
தெருவை சுத்தி பார்க்காமல் என்னைப்பெற்ற அப்பாவே
தெய்வலோகம் போகலாமோ

எட்டுகட்டு மெத்தையிலே என்னைப்பெற்ற அப்பாவே
இருந்து உலவாமல் இன்னைக்கு நீங்கள்
மைந்தாகளை விட்டுவிட்டு என்னைப்பெற்ற அப்பாவே
மாயன்பதம் சேரலாமோ

பத்தடுக்கு மெத்தையிலே என்னைப்பெற்ற அப்பாவே
பகடைகளாடிருந்து இன்னைக்கு நீங்கள்
பகடையை விட்டுவிட்டு என்னைப்பெற்ற அப்பாவே
பரமபதம் சேரலாமோ

செண்பக வனத்திலே என்னைப்பெற்ற அப்பாவே
செண்டுகளாடிருந்து எங்களுக்கு
செண்பகமும் வரவில்லை என்னைப்பெற்ற அப்பாவே
சேதிவொன்றும் தெரியவில்லை

மல்லியப்பூ வனத்திலே என்னைப்பெற்ற அப்பாவே
மனமகிழ்ந்து குந்திருந்தீர் இன்னைக்கு உன்
மக்களை விட்டுவிட்டு என்னைப்பெற்ற அப்பாவே
மறையலாமோ கானகத்தில்

பூங்காவனத்தில் என்னைப்பெற்ற அப்பாவே
புள்ளிமான் மேயுதென்று இன்னைக்கு நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிமான் வேணுமென்றால் என்னைப்பெற்ற அப்பாவே
பிடித்துமே தந்திடுவீர்

தங்கம் நிறைந்திருக்கும் என்னைப்பெற்ற அப்பாவே
தாயாரும் இங்கிருக்க இன்னைக்கு நீங்கள்
தாயாரை விட்டுவிட்டு என்னைப்பெற்ற அப்பாவே
தங்க ரதம் ஏறலாமோ

வேலி சரும்பாச்சே என்னைப்பெற்ற அப்பாவே
பொன்போல் தகப்பனுச்சே இன்னைக்கு நான்
தகப்பனை விட்டுவிட்டு என்னைப்பெற்ற அப்பாவே
தரணியிலே வாழலாமா

## அத்தைக்குப் புலம்பல்

கப்பலரிசி அத்தை என் கடன்கார சின்ன அத்தை
கண்டார் சிரிப்பாரென்று என்னத்தை பொன்னத்தை
கப்பலிடம் வந்து மாரடித்தேன்

படகிலரிசி அத்தை பணக்கார சின்ன அத்தை
பார்த்தார் சிரிப்பாரென்று நான்
பரந்துவந்து மாரடித்தேன்

அடுப்பங்கரை பாழாச்சே என்னத்தை பொன்னத்தை
உனக்கு வாசலெல்லாம் இருட்டாச்சே இன்னைக்கு நீ
இருட்டையும் நீக்கிவிட்டு என்னத்தையம்மா
எமலோகம் சேரலாமோ

மேட்டு தெருவிலே என் மூதேவி அத்தையம்மா
முத்துரதம் போகுதென்று இன்னைக்கு நான்
முன்னேவந்து பார்க்கும்போது என்னத்தையம்மா
முழுமனது தோணலியே

பள்ளத் தெருவிலே என்னத்தையம்மா
பவழதேரு போகுதென்று இன்னைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சமுடன் பார்ப்பதற்கு எனக்கு
பாழ்மனது தோணலியே

முத்தாலே படிகட்டி என்னத்தை பொன்னத்தை
முகம்கழுவ போனதுண்டு இன்னைக்கு அந்த
முத்துபடி சரக்கி என்னத்தை பொன்னத்தை
முதலைவந்து உன்னை கௌவிடுச்சே

பாலெடுத்து போனாலும் அன்னைக்கு அந்த
பால்பானை கைதவறி பதரி உடைந்தாலும்
பால்போனால் போகுதென்று பறந்துவந்து மாரடித்தேன்

மோர்பானை கையில் கொண்டு என்னத்தையம்மா
முதலிதெரு போனாலும் இன்னைக்கு அந்த
மோர்பானை கைதவறி முன்னே உடைந்தாலும்
மோர்போனால் போகுதென்று முன்னே வந்து மாரடித்தேன்

ஆத்திலே வாழைவெட்டி என்பொன்னான அத்தையம்மா
அடிவாழை நாருரித்து இன்னைக்கு
அன்பில்லாத தாலி என் பொன்னான அத்தையம்மா
அழைத்துவந்து கட்டலாமா

நீச்சதண்ணீருந்த என்னத்தை பொன்னத்தை
நிர்மூளி அத்தையம்மா இன்றைக்கு
நின்றோர் சிரிப்பாரென்று நான்
நின்றுமே மாரடித்தேன்

எமலோக ஒப்பாரி முற்றிற்று.

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை—1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

அதிக அற்புத முள்ள

கற்புடைய மாதர்கள் பாடிய

# கனகரத்தின ஒப்பாரி

உரைப்பாட்டு சேர்ந்திருக்கிறது

## தாயாருக்கு சொல்லுகிற ஒப்பாரி

ஜாதிக்காய் பூபூக்கும் என்னைப்பெத்தாரே அம்மாடி
சரத்துக்கொரு பிஞ்சிறங்கும்
ஜனத்தார் சொல்லுறது என்னைப்பெத்தாரே அம்மாடி
ஜயிக்கமன மில்லையடி

ஏலக்காய் பூபூக்கும் என்னைப்பெத்தாரே அம்மாடி
இடைக்கிடை பிஞ்சிறங்கும்
எதிராளி சொல்லுறது என்னைப்பெத்தாரே அம்மாடி
எனக்கு இருக்கமனம் சகிக்கவில்லை

தங்கம் அடைக்கலம் என்னைப்பெத்தாரே அம்மாடி
தனிவயிரம் தூத்தும்களம்
தங்கமரக்கால் கொண்டு என்னைப்பெத்தாரே அம்மாடி
தள்ளியளக்கையிலே தங்கை பாரியென்பார்

ஆத்துக் கருமணலே என்னைப்பெத்தாரே அம்மாடி
அணைகட்டும் கல்தூணும்
ஆனைமுகஞ் சாய்ந்துவிட்டால் என்னைப்பெத்தாரே அம்மாடி
என்னை ஆதரிப்பார் யாருமில்லை

குளத்துக் கருமணலே என்னைப்பெத்தாரே அம்மாடி
குதிரைகட்டும் கல்தூணும் அந்த
குதிரைமுகஞ் சாய்ந்து என்னைப்பெத்தாரே அம்மாடி
என்னை கொண்டணைப்பார் யாருமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டேறு கும்பலிங்கம் என்னைப்பெத்தாரே அம்மாடி
இளநீரும் சந்தணமும்
எடுத்துதான் பூசைசெய்த என்னைப்பெத்தாரே அம்மாடி
எட்டி விலக்கிவிடும்

பத்தாரு கும்பலிங்கம் என்னைப்பெத்தாரே அம்மாடி
பார்த்துதான் பூசைசெய்ய
பன்னீரும் சந்தணமும் என்னைப்பெத்தாரே அம்மாடி
என்னைப் பார்த்து விலக்கிவிடும்

பாலூத்தி சாதங்கட்டி என்னைப்பெத்தாரே அம்மாடி.
படுக்கையிலே வாய் துடைத்து
பாங்காய் வளர்த்தமகள் என்னைப்பெத்தாரே அம்மாடி
பார்த்தவிடம் சோம்புகிறேன்

நெய்யூத்தி சாதம்கட்டி என்னைப்பெத்தாரே அம்மாடி
நித்திரையில் வாய்துடைத்து
நிற்கவிடமில்லை யென்று என்னைப்பெத்தாரே அம்மாடி
நின்றவிடம் சோம்புகிறேன்

பொன்னுங் குடமெடுத்து என்னைப்பெத்தாரே அம்மாடி
நான்போயிவரம் பார்த்திருந்து
உன் பொன்னுந்திருமேனி என்னைப்பெத்தாரே அம்மாடி
நீபோனவழி தெரியலியே

நான் யாரைச்சதமென்பேன் என்னைப்பெத்தாரே அம்மாடி
என்னை யாதரிப்பார் யாருமில்லை
நான் அறியாபருவமதில் என்னைப்பெத்தாரே அம்மாடி
என்னை யலயவிட்டு போனையடி

பொழுதோடிப் போச்சுதடி என்னைப்பெத்தாரே அம்மாடி
பொன்முகத்தைக் காண்பதெப்போ
நீ போனவழி தெரியலையே என்னைப்பெத்தாரே அம்மாடி
பின்னாலே வந்திடுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை பெற்ற அருமையென்ன என்னைப்பெத்தாரே அம்மாடி
எனக்கு பேருமிட்ட நேர்த்தியென்ன
என்பேரை மறந்துவிட்டு என்னைப்பெத்தாரே அம்மாடி
பெரியவூர் போனுயடி

ஒத்தைக்கால் மோடியம்மா என்னைப்பெத்தாரே அம்மாடி
ஒதியமரம் சாலையம்மா
ஒருபெண்ணு நின்றழுதால் என்னைப்பெத்தாரே அம்மாடி
உலகமெல்லாம் தானழுகும்

கொடியும் எலுமிச்சை என்னைப்பெத்தாரே அம்மாடி
கோத்திரமே நற்பவழம்
கொடியிலும் காய்க்காத என்னைப்பெத்தாரே அம்மாடி
கொடிய விலக்கி வச்சேன்

ஜாதியிலும் பச்சை என்னைப்பெத்தாரே அம்மாடி
சத்திரத்து நற்பவழம்
ஜாதியிலும் காய்க்காத என்னைப்பெத்தாரே அம்மாடி
கதிவிலக்கி வைத்தோமே.

---

## உரை பாட்டு

கண்ணனமாமாவே கைலாசம்போனீரோ
தங்கப்பொன் மாமாவே தருமபுறம் போனீரோ

இருபுறமும் நாமிருக்க எங்கொளித்தீர்மாமாவே
சுற்றிஜெனமிருக்க சொல்லாமல் போனதென்ன

அன்புடையாளிங்கிருக்க அரன்பதிக்கு போனதென்ன
பிரியமுள்ளாரிங்கிருக்க நீபிரமன்பதிபோனதென்ன

நீதிதப்பா மாமாவே நீரிருந்தாலாகாதோ
நன்னடக்கை இல்லாதாள் நான்போனாலாகாதோ

பொல்லாதாள் நானிருக்க உன்பொன்முடிபோனதென்ன
அத்தையடி அத்தையம்மா அன்புள்ள அத்தையரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலம் சென்றிடுமோ எப்போவந்து சேர்ந்திடுவாய்
சேனைநாள் சென்றிடுமோ திரும்பிவந்து சேராயோ

மெத்தநாள்செல்லுமோ சற்றுமுகங் காட்டாயோ
அஞ்சுகட்டுமாளிகையிலே உன்னழகுமுடி தேடுறோமே

பத்துகட்டுமாளிகையிலே உன்பரந்தமுகந்தேடுறோமே
எட்டுகட்டுமாளிகையிலே இருந்தால் ஆகாதோ

உன்தங்கமுகங்காணுமல் தயங்குறோமேநாங்கள்
உன்முகம்காணுமல் புலம்புகிறோம் நாங்களெல்லாம்

எத்திசையும் காவலெண்ணி யிருந்தோமே அத்தையம்மா
மக்களையும் காணுமல் மறந்துவிட்டாய் அத்தையம்மா

---

## பிதாவுக்கு

பவளம்மளிஞ்சிதென்று என்னைப்பெத்தாரே அப்பாவே
என்னைபக்கத்தில் குந்தவைத்தீர்
பவளம்விளைந்ததென்று என்னைப்பெத்தாரே அப்பாவே
என்னைபதரிவிலை கூறினீர்கள்

எனக்குமானம்பனிபேயும் என்னைப்பெத்தாரே அப்பாவே
எனக்குமறுகடலும் தண்ணிவரும்
மதிக்கவிடமில்லையென்று என்னைப்பெத்தாரே அப்பாவே
என்னை மடுவில்தள்ளி விட்டீரே

கோடைபனிபேயும் என்னைப்பெத்தாரே அப்பாவே
கொள்ளடத்தில்தண்ணிவரும்
கொடுக்கவிடமில்லையென்று என்னைப்பெத்தாரே அப்பாவே
கொள்ளடத்தில் தள்ளிவிட்டீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயகனுக்கு ஒப்பாரி

தங்கத்தால்புஸ்தகந்தான் ராசாவே மந்திரியே
தாமரைப்பூகூடாரம் தனித்து கணக்கெழுதும்
பொன்னுவிலங்கையே பொழுதிரங்காபட்டணமே
எண்ணுளுமிருக்க இச்சைக்கொண்டராஜாவே
தருமதுரைத் தேடுகிறேன்

பொன்னல்புஸ்தகங்கள் ராசாவே மந்திரியே
புதுமையுள்ளகூடாரம் பிடித்துகணக்கெழுதும்
பூசைநதியே பொய்சொல்லாவாசகமே
ஆசைக்கிசைந்தவரே அழகில்சிறந்தவரே
புண்ணியரைத் தேடுகிறேன்

குரிளிமகளம்புயென்னை தேடியராஜாவே
கொள்ளந்துதாழம்பூ
குளித்துமுழுகையிலே யென்னைத்தேடிய ராஜாவே
கொலைக்காரன் யெங்கிருந்தான்

## பிதாவுக்கு

நந்தவனம் பூந்தோட்டம் என்னைப்பெத்தாரே அப்பாவே
நடுகிணரும் சத்திரமா
நாயகியாள் தண்ணிமொள்ள என்னைப்பெத்தாரே அப்பாவே
உனக்கு நாயமில்லை யென்றூர்கள்

பூங்காவனம் பூந்தோட்டம் என்னைப்பெத்தாரே அப்பாவே
புதுகிணறுசத்திரமா
பெண்ணொருத்திதண்ணிமொள்ள என்னைப்பெத்தாரே அப்பாவே
பொழுதில்லை யென்றூர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டும் அலமாரி என்னைப்பெத்தாரே அப்பாவே
படிபவுனும் சங்கிலியும்
பூட்டிதிறக்காமல் என்னைப்பெத்தாரே அப்பாவே
பழுதில்லையென்றூர்கள்

சாத்தும் அலமாரி என்னைப்பெத்தாரே அப்பாவே
சரிபவுனும் சங்கிலிதான்
சாத்தி திறக்காமல் என்னைப்பெத்தாரே அப்பாவே
சமையமில்லையென்றூர்கள்

அன்டமதில்யெழுப்பி என்னைப்பெத்தாரே அப்பாவே
அகடமரம்தோப்பாக்கி இன்றைக்கி
அண்டமதில் இடிய என்னைப்பெத்தாரே அப்பாவே
அண்ணன் தம்பி தாங்குவாஞே

பக்கமதில் எழுப்பி என்னைப்பெத்தாரே அப்பாவே
பகடமரம் தோப்பாக்கி இன்றைக்கி
பக்கமதிலிடிய என்னைப்பெத்தாரே அப்பாவே
பங்காளி தாங்குவாஞே

சுத்திமதில்யெழுப்பி என்னைப்பெத்தாரே அப்பாவே
சுருளுமரம் தோப்பாக்கி இன்றைக்கி
சுத்திமதிலிடிய என்னைப்பெத்தாரே அப்பாவே
சித்தப்பன் தாங்குவாஞே

முத்துமலிர்ந்ததென்று என்னைப்பெத்தாரே அப்பாவே
என்னை மூலையிலே வைத்துவிட்டு
எனக்குமுத்துவிலைவந்ததென்று என்னைப்பெத்தாரே அப்பாவே
மூடிவிலை கூறினீர்கள்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரை சொல்லுகிறது

அண்ணுவே யென்பிறவி ஆகாசம்போனதென்ன
நந்தவனச்சோலைகளும் நலமுடனே யிங்கிருக்க
புஷ்பமரச்சோலையது புகழாகயிங்கிருக்க
வாசனைகள் போதாமல் வைகுந்தம் போனீரோ
பரிமளங்கள் போதாமல் பரமபதம் போனீரா
மனையாளும் பிள்ளைகளும் மற்றுமுள்ளா ரிங்கிருக்க
எங்களைநீ தனியேவிட்டு இனியவழி போவானேன்
அண்ணுவே அண்ணுவே

## உரை சொல்லுகிறது

உத்தமியே யென்பிறவி நீயிருந்தால்
பூமியிலே நீயிருக்கலாகாதோ
நீயிருந்து நான்போக நீதியுண்டோபூமியிலே
நானிருந்துநீபோக ஞாயமில்லைவையகத்தில்
செத்தவர்கள் தன்னுடனே சேதிசொல்லப்போனுயோ
மாண்டவர்கள் தன்னுடனே வார்த்தை சொல்லப்போனுயோ
என்பிறவி போனுயோ

---

## உரை சொல்லுகிறது

அருமையுள்ளதாத்தாவே அயன்பாதம் சேர்ந்தாயோ
கொம்பன்முடி போனவுடன் சீர்குலைந்தோம் தாத்தாவே
அருமைமுடி போனவுடன் ஆசைவிட்டோம் பாட்டியம்மா
தங்கமுடி போனவுடன் தங்குதற்கு யாருமில்லை
தாத்தாவே பாட்டியம்மா

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரை பாட்டு

என்னம்மாடி பெற்றவளே என் ஆச்சியடி தாயாரே
வீதியிலே நாங்களெல்லாம் விளையாடிவீடுவந்தால்
நீதியுடன் தான்பார்த்து நேர்த்தியுடன் சோறிடுவாய்
பலவீதி நான்திரிந்து பந்தடித்து வீடுவந்தால்
பக்ஷமுடன் நீ பார்த்து பரிந்துமல்லோ சோறிடுவாய்
சோறிட்டகைமருந்து சொக்கர்பதிசேர்ந்தாயோ
அன்னமிட்ட கைமருந்து அரன்பதிபோய் சேர்ந்தாயா
கர்த்தாவே என் துரையே கைலாசம் சேர்ந்தீரோ
உத்தமரே என் துரையே உம்பர்பதி சேர்ந்தீரோ
ஒருத்தியுமாய் யென்னைவிட்டு நீங்கள் ஓடவுந்தான் நீதியுண்டோ
தனியாக என்னைவிட்டு தாண்டவுந்தான் நீதியுண்டோ
ஒருநாளும்பிரியாத மனையாளை பிரிந்து விட்டீர்
அநேகநாள்பிரியாத அடியாளை ஏன்பிரிந்தீர்
என்னைத்தனியேவிட்டு எவ்விடமோ போய்நடந்தீர்
பொன்னத்தான் நீர்போயும் பூமியிலே நான் தங்குவேனோ
கட்டழகா உனைப்பிரிந்து கண்ணுண்டாய் வாழ்வேனு
மன்னவனே உனைப்பிரிந்து நான்மண்மேலே உலாவுவனோ
கர்த்தனே என் துரையே

கனகரத்தின ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

பூவிருந்தவல்லி

## உபாத்தியாயர் பூ. சே. தா. இராஜு நாயகர்

அவர்கள் பாடிய

# அற்புத ஒப்பாரி

## புருஷனுக்குப் புலம்பல்

மஞ்சாகுப்பம் கூடலூரு என்னைதேடிய ராஜாவே
மருவுவந்து விற்றுதானல் நான்
மன்னனைத் தோற்றபாவி நான் மருவைத் தொடுவேனே
மறுவிலை கூறுவேனே

குற்றாலங் குறநாடு என்னைதேடிய ராஜாவே
கொழுந்துவந்து விற்றுதானல் நான்
கொண்டவனை தோற்றபாவி கொழுந்தை தொடுவேனே
கொழுந்துவிலை கூறுவேனே

ஆளனும் தேவியுமாய் என்னைதேடிய ராஜாவே
நாங்கள் அசைந்துவழி நடந்தோமானல்
எனக்கு அழகுவனம்கச்சேரி என்னைதேடிய ராஜாவே
எனக்கு அருகேவந்து தான்சிரிக்கும்

கொற்றவனும் தேவியுமாய் என்னைதேடிய ராஜாவே
கூடநடந்தோமானல் எனக்கு
கும்பகோணம் கச்சேரி கூடவந்து தான்சிரிக்கும்

பத்தாருதட்டானும் என்னைதேடிய ராஜாவே
பழனிமலை ஆச்சாரி பட்டரையை முன்னேவைத்து
பண்ணினன் சிறுதாலி அந்த தாலிமேல்தோஷமில்லை
பாவிதட்டானுட கைராசி

கொப்புக்கு கல்புதைத்து என்னைதேடிய ராஜாவே
கூடாரங் கல்பரப்பி நாங்கள்
கொப்பு கழட்டணுமோ உனக்கு வந்தபெண்ணாள்
கோடிபிரா யத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சித்தாடை கட்டும்பெண்ணு | என்னைதேடிய ராஜாவே |
| சிறுசலங்கை போடும்பெண்ணு | இன்றைக்கி |
| சிறுசலங்கை யறுப்பது | உனக்குவந்தபெண்களுக்கு |
| சிவனுடைய | கட்டளையோ |
| | |
| பாவாடை கட்டும்பெண்ணு | என்னைதேடிய ராஜாவே |
| பாதரசம் போடும்பெண்ணு | நாங்கள் |
| பாதிலறுப்பது | என்துரையே |
| பரமசிவன் | கட்டளையோ |
| | |
| பொன்னாலே புத்தகமாம் | என்னைதேடிய ராஜாவே |
| பொற்பதுமைக் கூடாரம் | இப்போ |
| பிடித்துக் கணக்கெழுத | உங்கள் வாசலுக்கு நான் |
| ஒரு புண்ணியரைத் | தேடுறேனே |
| | |
| தங்கத்தால் புத்தகமாம் | என்னைதேடிய ராஜாவே |
| தணலுபடாக் கூடாரம் | நீங்கள் தணித்துக்கணக்கெழுத |
| இந்த சண்டாளன் சீமையிலே | ஒரு |
| தருமரையுந் | தேடுறேனே |
| | |
| தாசிமடிமேலே | என்னைதேடிய ராஜாவே |
| தங்கம்வைத்துச் | சூதாடி |
| தாசிகடை தோத்ததுவும் | எங்கள் |
| தருமர்கடை | ஜெயித்ததுவே |
| | |
| வேசிமடிமேலே | என்னைதேடிய ராஜாவே |
| வெள்ளிவைத்துச் | சூதாடி |
| வேசிகடை தோத்ததுவும் | எங்கள் |
| வீமர்கடை | ஜெயித்ததுவே |
| | |
| சங்கமரத்தடியே | என்னைதேடிய ராஜாவே |
| தங்கிகுறை சொன்னாக்கால் | எங்களுக்கு |
| சங்கஞ் சலசலங்கும் | ஒருதணிநாகம் ஓசையிடும் நான் |
| தங்கைவர நேரஞ்சென்றால் | என்தாயை எடுக்காதிங்க ஒரு |
| தனிவிளக்கு | ஏத்திடுங்கோ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்கமரத்தடியே என்னைதேடிய ராஜாவே
இந்தப்பெண்ணாள்குறை சொன்னாலே அந்தப்
புங்கஞ் சலசலங்கும் உங்கள்வாசல் புதுநாகம் ஓசையிடும்
பெண்ணாள்வர நேரஞ்சென்றால் மாதாவை எடுக்காதிங்க
ஒரு மணிவிளக்கு ஏத்திடுங்கோ

அரைத்தமஞ்சள் சட்டியிலே என்னைதேடிய ராஜாவே
ஆபரணம் பெட்டியிலே இந்த
ஆபரணம் போடவந்தாள் அல்லியரும் மூலையிலே
என்னுடைய அர்ஜுனரும் தேர்மேலே

பச்சைமஞ்சள் சட்டியிலே என்னைதேடிய ராஜாவே
பாதரசம் பெட்டியிலே அந்த
பாதரசம் போடவந்த இந்த பைங்கிளியாள் மூலையிலே
என் பர்த்தாவுந் தேர்மேலே

## அத்தைக்குப் புலம்பல்

வாக்குக்கு எண்ணையறியேன் அடியத்தே உன்வாசலிலே
வடகந்தாளித்த சாரறியேன் இன்றைக்கு
வந்தஜெனம் சிரிக்குமென்று உன் மருமகள்
வரிசைக் கழுகுரண்டி

உச்சிக்கு எண்ணையறியேன் உங்கள்வாசல் வந்தபெண்ணாள்
உளுத்தவடை தின்னறியேன் இன்றைக்கு
ஊரார் சிரிப்பாரென்று அடியத்தே நான்
ஒப்புக் கழுகுரண்டி

கடிச்சபிளவறியேன் என்னைவைத்து விட்டுபோற
வனவாசமாயியத்தே நான் கரிக்குழம்பு தின்னறியேன்
கண்டஜனம் சிரிக்குமென்று அடியத்தே நான்
கட்டியழுக வந்தேன்

பால்பானைக் கைதவறி அடியத்தே நான்
பதரிவுடைத்தாலும் இன்றைக்கு
பால்போனால் போகுதென்று என்னைவளர்த்த அத்தே
பக்ஷமுட னிருந்தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்பானை கைதவறி
நேரேவந்து உடைத்தாலும்
நெய்போனுல் போகுதென்று
நேசமாய்
கப்பலரிசியத்தே
நீபோற இடத்திலே பவளம்
இப்போ வாங்கிவந்துதந்தாலே
பட்டுகொசுவங்கட்டி
என்னைதேடிய அத்தே
இன்றைக்கு
அடியத்தே வெகு
எங்களப்பனுடன் பிறந்த
கடன்காரச் சின்ன அத்தே
முகக்கருப்பு சேலைவிற்கும்
என்னைதேடிய அத்தே நான்
பறந்தோடி மாரடிப்பேன்

## தாயாருக்குப் புலம்பல்

பத்தெட்டுநாளையிலே
எங்கள் வயிற்றில் கருவுத்தரித்தும்
என்னைபெற்றவளே அம்மாடி
இந்தகருவையுருவாக்கி அம்மாடி
வெள்ளிக்கிழமையிலே
விடியஜந்து நாழிகையில்
அந்தரமாய்க் குந்தவைத்து
வாழும்பிராயத்திலே அம்மாடி
பார்க்கவருவோமென்றுல்
பங்கும் பகையாளி
பாம்பை குறுக்கேவைத்து
காசிவிசிறிவரும்
கைலங்கிரி தீர்த்தம்வரும்
காசிமஹாராஜனோடு
கலந்தொருநாள்
குப்பைசுரக்காயும்
கொல்லிமலைத் தேங்காயும்
கூட்டிகுழம்புவைக்கும்
ஊமத்தை பூபூர்க்கும்
உள்ளே பலாபழுக்கும்
ஊருருதோட்டமென்று
என்னைப்பெற்றவளே அம்மாடி
பச்சை கற்பூரம்தின்று
இந்த கருவைக்கலைக்காமல்
கஷ்டமெடுக்க வைத்தாயே
என்னைபெற்ற அம்மாடி
என்னை
தந்திரமாய் தாலிகட்டி நான்
வருத்தமெத்த வைத்தாயே
என்னைபெற்ற அம்மாடி
பாதிநாள் தாயாதி அவன்
பாலாற்றை நீந்துவேனே
என்னைபெற்ற அம்மாடி
நீங்கள்
என்னைபெற்ற அம்மாடி நீங்கள்
வாழலியே
என்னைபெற்றவளே அம்மாடி
நீங்கள்
குணமுள்ள தாயிழந்தேன்
என்னைபெற்ற அம்மாடி
இப்போ நான்
நான் உள்ளேவர அஞ்சறனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலுகுலென்று காத்தடிக்கும் உங்களிட வாசலிலே
கொடமல்லி பூத்திருக்கும் இந்தக்
கொடமல்லி பூவெடுக்க என் அம்மாடி
கொலேக்காரன் எங்கிருந்தான்

கன்னிய பெண்களுடன் என்னைபெற்ற அம்மாடி
கடலாடப்போனலும் கன்னிகுளிக்கையிலே என்னைபெற்ற
அம்மாடி நீ கடக்கப்போய் நிற்கணுமா

தோழியப்பெண்களுடன் என்னைப்பெற்ற அம்மாடி
துரையாடப் போனலும் தோழி குளிக்கையிலே
என்னைப்பெற்ற அம்மாடி தூரப்போய் நிற்கணுமா

அஞ்சிமலே செஞ்சிமலே என்னைப்பெற்ற அம்மாடி உனக்கு
அதுநடுவே யிஞ்சிமலே அந்த செஞ்சிமலே தேனுடைக்கும்
என்னைப்பெற்ற அம்மாடி அந்த திருடனவ னெங்கிருந்தான்

## தகப்பனுருக்குப் புலம்பல்

அண்டம் மதிலெழுப்பி என்னைப்பெற்ற அப்பாவே
அகடமரம் தோப்பாக்கி இன்றைக்கு
அண்டமதிலிடிஞ்சா எனக்கு
அண்ணன் தம்பி தாங்குவாளு

சத்திரத்துவாழை என்னைப்பெற்ற அப்பாவே
சமுத்திரத்து நீர்வாழையடி என்னைப்பெற்ற அப்பாவே
நாங்கள் முகஞ்சோர்ந்து நிற்குரேமே

மந்தாரைப் பூபூர்க்கும் என்னைப்பெற்ற அப்பாவே
மகடம்பூ சாவடியில் இன்றைக்கு
செந்தாமரைப் பூர்க்கும் என்னைப்பெற்ற அப்பாவே
உங்கள் சித்திரைப்பூ சாவடியில்

தங்கத் தமுக்கடிக்க என்னைப்பெற்ற அப்பாவே
தாசிலு வந்திறங்கும் இன்றைக்கு
தாசிலே கையமர்த்த என்னைப்பெற்ற அப்பாவே
வொரு தாஷடீக ரில்லேயோதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துக்கட்டு மாளிகையில் என்னைப்பெற்ற அப்பாவே
நீங்கள் பாப்பாரைப் போலிருந்தீர்
இன்றைக்கு பார்ப்பார் முடி சாயவைக்க
அந்தப் பாவியெமன் எங்கிருந்தான்

கல்லிழைத்த பள்ளாங்குழி என்னைப்பெற்ற அப்பாவே
நீபெற்ற பெண்ணுக்கு
வேணுமென்றுகேட்டால் நீங்கள் காசு
பணம்போட்டு கடுகே வரவழைப்பீர்

## சகோதரனுக்குப் புலம்பல்

பட்டுதலக்காணி என்பிறவி தம்பிகளா
பாதையோரம் கச்சேரி என்பக்ஷமுள்ள
என்பிறப்பே உன்னை
பார்ப்பதுதான் எக்காலம்

கருப்புத்தலக்காணி நம்முடைய வாசலிலே
கட்டிலிலே மெத்தையது என் கண்மணியே
என்பிறப்பே உன்னைக் காண்பதுதான் எக்காலம்

வாழை ஐநூறு என்பிறவி தம்பிகளா
வாழைகன்று முன்னூறு அந்த வாழைகத்திப்
பூவெடுக்க என்பிறவி தம்பிகளா
வரிசை பிறப்பிழந்தேன்

தேரோ திருநாளோ என்பிறவி தம்பிகளா உனே
தேடிப்பிடிப்பேனோ இப்போ
கடையோ கடைதெருவோ என்பிறவி தம்பிகளா
நான் கண்டுப் பிடிப்பேனோ

தாழம்பூ வேஷ்டிகட்டி என்பிறவி தம்பிகளா
தாசிவீடு போனேயானல் அந்த
தாசிவீடு போனபணம் நம்ப
தாவுவந்து சேரலியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேஷ்டி வெளுத்துகட்டி — என்பிறவி தம்பிகளா
வேசிவீடு போனேயானல் — அந்த
வேசிவீடு போனபணம் — நம்ப
வீடுவந்து — சேரலியே

பவழாரதம் வேண்டுமென்ருல் — என்பிறவி தம்பிகளா
பட்சமுடன் — தான் கொடுப்பீர்
முத்தாரதம் வேண்டுமென்ருல் — என்பிறவி தம்பிகளா
மூவரிட வாசலிலே — முன்வந்தழுகிறதா

## பிள்ளைக்குப் புலம்பல்

மைந்தனில்லை யென்றுசொல்லி — நான்பெற்ற கண்மணியே
மகாதபசு செய்தேனடா — எனக்கு மைந்தர்கலி தீர்க்கவந்த
மகனென்று நானிருந்தேன் — இப்போ எங்களை
மாநிலத்தில் விட்டுவிட்டு — மகனே நீ எங்கொளித்தாய்

ஆலஞ்சரகெடுத்து — என்னைப்பெற்ற அம்மாடி
அடிகிணறு தீர்த்தங்கொண்டு — நாங்கள்
ஆணில்லாபாவிக்கி — வைத்தசாதங்கறி ஒரு
ஆண்காக்கை — தீண்டலியே

புங்கஞ்சரகெடுத்து — என்னைப்பெற்ற அம்மாடி
புதுகிணறு தீர்த்தங்கொண்டு — நாங்கள்
பெண்ணில்லாப் பாவிக்கி — பொங்கிவைத்த சாதங்கறி
ஒரு பெண்காக்கை — தீண்டலியே

பத்துபவுனிலே — என்னைப்பெற்ற அம்மாடி
பாலனுக்கு காப்படிக்க — அந்த
பஞ்சணைமெத்தையிலே — நான்வளர்த்த அய்யா
படிக்கிராயென்றிருந்தேன் — இப்போ
படிப்புங்குரைச்சலின்னோ — நான்பெற்ற அய்யா
பாலகனே — பயணமென்னும்

எட்டுபவுனிலே — என்னைப்பெற்ற அய்யா
இந்திரனுக்குக்காப்படிக்க — இப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்த மெத்தையிலே நான்வளர்த்த அய்யா
எழுதுகிறாய் என்றிருந்தேன் இப்போ
எழுத்துங் குறைச்சலின்னும் நான்பெற்ற ஐயா
இந்திரனும் பயணமென்னும்

கணுக்காலு தண்ணியிலே என்னைப்பெற்ற ஐயாவே
காசைபதியவைத்தோம் இப்போ
காசெடுக்கபிள்ளையுண்டு நம்முடைய வாசலிலே
கருமஞ்செய்ய பிள்ளையில்லை

குங்குமம் வில்வமரம் நான்வளர்த்த அய்யா
குலைசாய்ந்த வேங்கைமரம் இப்போ
கொடும்பாவி நின்றழுதால் எனக்கு
குங்குமத் தோப்பழுகும் இன்றைக்கு
கோரட்டுக்கச்சேரி கூடப்பிரண்டழுகும்

கருப்புசிறுபிளந்து நான்பெற்ற அய்யாவே
கைலாசம் தீவளர்த்தி இன்றைக்கு
கண்ணுளன் போடுங்கொள்ளி எங்களுக்கு
காடுகிடுகிடென்னும் இந்தபாவிபோகும்
கைலாசம் மோட்சங்கிட்டும்

சிகப்பு சிறுபிளந்து நான்பெற்ற செல்வமும்
சிவலோகம் தீவளர்த்தி இன்றைக்கு
சீமைகிடுகிடென்னும் இந்தபாவிபோகும்
சிவலோகம் மோட்சங்கிட்டும்

ஒருதாய்க் கொருமகனும் என்னைபெற்ற அம்மாடி
உத்தமியாள் பெற்றபிள்ளை அருமையாய்
உபாத்தியாயர் அன்புடனே இராஜிநாயகர்
அனைவோரும் பாடுதற்கு அற்புதமாய் பாடிவைத்தேன்

அற்புத ஒப்பாரி முற்றிற்று.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

## ஆறுபேருக்கு பாடிய

# அம்பிகாபதி ஒப்பாரி

### தாயாருக்குப் புலம்பல்

அந்தியிலே நான்புசிக்க என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபெண்ணுநான் அமர்ந்தேன் அரண்மனையில்
எனக்கு தந்திவந்து சொன்னதம்மா அடிஎன்யீடு
பெண்டுகளா என்னைபெற்றதாயார் இறந்தாளென்று

நான் பஞ்சணைமெத்தையிலே என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபெண்ணுநான் படுத்துறங்கும் வேளையிலே
எனக்கு சஞ்சலத்தையுண்டாக்கி என்னைப்பெற்ற அம்மா
என்னை இங்கு தயங்கவிட்டு போகலாமா

உனக்கு மல்லிகொண்டு மாலைகட்டி என்னைப்பெற்ற அம்மா
நீபெற்ற பெண்ணுநான் மருக்கொழுந்தால் பாடைகட்டி
அந்தபாடைக்கி முன்னாலே என்னைப்பெற்ற அம்மா
நீபெற்ற பார்வதியாள் மார்கொடுத்தால் அந்தபாடை
கிடுகிடென்னும் நீபோகுமந்த பரமலோகம் ஜோதியின்னும்

நான்முல்லை அரும்பெடுத்து என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபெண்ணு முத்திழைத்த தேருகட்டி அந்ததேருக்கு
முன்னால் என்னைப்பெற்ற அம்மாநீ பெற்ற தெய்வகன்னி
மார்கொடுத்தால் அந்ததேரும் கிடுகிடென்னும்
நீபோகுமந்த தெய்வலோகம் ஜோதியின்னும்

ஒருஅடிஅசைய பூவுதிற என்னைப்பெற்ற அம்மாநீ
போகுமந்த அன்னரதம் தான்குலுங்க அந்த அன்னரதம்
போகையிலே என்னைப்பெற்ற அம்மா
நீபெற்ற பெண்ணுநான் அலறி அழுகிறதா

ஒருபடியசைய பூவுதிற என்னைப்பெற்ற அம்மாநீ
பஞ்சவர்ண ரதம்குலுங்க அந்தபஞ்சரதம் போகையிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப்பெற்ற அம்மாநீ பெற்றபெண்ணு
நான் பாம்பாய்புரண்டு அழுகிறேனே

மூலைக்குமூலை என்னைப்பெற்ற அம்மாநீ பெற்றபிள்ளை
உனக்கு முத்துபாணம் விட்டாலும் நீபெற்ற
மூத்தபெண்ணில்லா பிணமென்று அந்தமூலை திரும்பியே
என்னைப்பெற்ற அம்மா எனக்கு
அந்தமுத்துபாணம் கேழ்க்கலியே

சந்துக்குச்சந்து என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபிள்ளை உனக்கு சதுாபாணம் விட்டாலும்
நீபெற்ற செல்லியில்லா பிணமென்று அந்தசந்தும்
திரும்பலியே என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்ற பெண்ணுக்கு அச்சதுர்பாணம் கேழ்க்கலியே

கல்லுகட்டி வில்வமரம் என்னைப்பெற்ற அம்மாநீ
போகுமந்த கைலாயம் தெப்பகுளம்
உன்னைநான் காணவருவேனென்னு என்னைபெற்ற அம்மாநீ
பெற்ற பெண்ணுக்குவந்த கடுஞ்சிறையும் தீரலியே

செங்கல்கட்டி வில்வமரம் என்னைப்பெற்ற அம்மாநீ
போகுமந்த சிவலோகம் தெப்பகுளம்
உன்னைநான் தேடிவருவேனென்னு என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்ற பெண்ணுக்குவந்த சிந்தையும் தீரலியே

அந்தகாஞ்சிபுரம் கல்கோட்டை என்னைப்பெற்ற அம்மா
எனக்கு கரிவரதர் கைபூமாலை அங்குகத்தி சுழன்றுதரும்
அந்த கரிவரதர் படை முன்னேவரும்
கரிவரதர் படையை கையமர்த்த என்னைப்பெற்ற அம்மா
எனக்கு ஒரு கருத்தாளி இல்லையம்மா

விரிஞ்சிபுரம் கல்கோட்டை என்னைப்பெற்ற அம்மா
எனக்கு அந்த வேலவர்கைபூமாலை அங்குவில்லு சுழன்று
வரும் அந்த வேலவர் படைமுன்னேவரும் இந்தவேலர்
படை கையமர்த்த என்னைப்பெற்ற அம்மா
எனக்குஒரு விரலளவும் பிள்ளையில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமல்லி பூத்திருக்கும் என்னைப்பெற்ற அம்மா
நமது கொத்தலத்து மேடையிலே நான்
பாவியந்த கொடிமல்லிநாண றுக்க என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபெண்ணு எனக்கு குன்னுதம்மா அங்கமெல்லாம்

பவழமல்லி பூத்திருக்கும் என்னைப்பெற்ற அம்மா
என்னைகொண்ட பார்த்தீபர் வாசலிலே
நான்பாவி அதைபறித்து முடிப்பேனென்னு என்னைப்பெற்ற
அம்மாநீ பெண்ணு எனக்கு பதருதம்மா திரேகமெல்லாம்

நான்கொண்டுவந்த புஷ்பமெல்லாம் என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபெண்ணுக்கு பெரிய குண்டுமல்லி செண்டு கட்டி
எனக்கு கோதிமுடித்தார்கள் என்னைப்பெற்ற அம்மா
எனக்கு குறைகள்மெத்த வைத்தார்கள்

நான்பறித்துவந்த புஷ்பமெல்லாம் என்னைப்பெற்ற அம்மாநீ
பெற்றபெண்ணுக்கு பெரிய பாரிஜாத செண்டுகட்டி
அன்றெனக்கு பார்த்து முடித்தார்கள் என்னைப்பெற்ற
அம்மாநீ பெற்றபிள்ளை இங்குபரதவிக்க விட்டார்கள்

நான் செஞ்சியிலே வாழும்பெண்ணு என்னைப்பெற்ற அம்மா
அந்த ஸ்ரீ ராமன் பெற்றகண்ணு உந்தன் சீவனிருக்கையிலே
என்னைப்பெற்ற அம்மாநீ பெற்றபெண்ணுக்கு
ஒருசேதிவிட்டா லாகாதா

நான் கஞ்சியிலே வாழும்பெண்ணு என்னைப்பெற்ற அம்மா
அந்த கரிவரதர் பெற்றகண்ணு நீகாலன்பதி
சேருமுன்னே என்னைப்பெற்ற அம்மா
நீபெற்றபெண்ணுக்கு ஒருகடிதம் விட்டாலாகாதா

என்குறையை சொன்னேனென்னு என்னைப்பெற்ற அம்மா
இன்று எழுந்தநிலா சாயாது இந்தபாவி யென்குறையை
சொல்வேனென்னு என்னைப்பெற்ற அம்மா அன்றுபோன
நிலா சாயாது எல்லோரும் தலையிலே ஓரெழுத்துஈரெழுத்து
இந்தபாவியுட தலையிலே என்னைப்பெற்ற அம்மா
பாவிபிரம்மன் பதங்கொலைய போட்டானம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தபோட்டவன் கைகொடிய எழுத்தாணி கூர்மயங்க
அவனுடைய பெண்ஜாதி என்னைப்பெற்ற அம்மா
அங்கு என்னைப்போல் நின்றழுக

## கதப்பனுக்குப் புலம்பல்

அப்பா நீசாற்றும் திருநீறு என்னைப்பெற்ற அப்பா
இங்குநீ தலைமுழுகும் பன்னீரு நீ தலைமுழுகி வெளியில்
வந்தால் என்னைப்பெற்ற அப்பா அங்கு தங்கமணியடிக்கும்
நீபோய் தங்குமிடம் பூமணக்கும்

நீபூசும் திருநீறு என்னைப்பெற்ற அப்பாநீ இங்குபூசை
செய்யும் பன்னீரு. உந்தன்பூசை முடித்துவந்தால்
என்னைபெற்ற அப்பா அங்குபொன்னுமணியடிக்கும்
நீபோகுமிடம் பூமணக்கும்

தங்கச்சிலைபோலே என்னைப்பெற்ற அப்பா என்தாயாரு
மிங்கிருக்க என்தாயாரை இங்குவிட்டு என்னைப்பெற்ற அப்பாநீ
அந்த தங்கரதம் ஏறலாமா

பொன்னுச்சிலைபோலே என்னைப்பெற்ற அப்பா நீ பெற்ற
பிள்ளைகளும் இங்கிருக்க உன்பிள்ளைகளை இங்குவிட்டு
என்னைப்பெற்ற அப்பாநீ போகலாமா பிர்மலோகம்

சீமந்தம்செய்கையை என்னைப்பெற்ற அப்பாயெனக்கு
அன்று சீறுகொண்டு வாரேனென்றாய்
எனக்குசீரும்நடத்தாமல் என்னைப்பெற்ற அப்பாநீ
பெற்றபெண்ணை விட்டு நீ சிவலோகம் சேர்ந்தாயோ

மருவுநடத்தையிலே என்னைப்பெற்ற அப்பாயெனக்கு
அன்று வரிசை கொண்டுவாரேனென்றாய் எனக்கு
வரிசை நடத்தாமல் என்னைப்பெற்ற அப்பா நீ
பெற்றபெண்ணைவிட்டு வைகுந்தம் சேர்ந்தாயோ

உனக்கு செஞ்சியிலேகூடாரம் என்னைப்பெற்ற அப்பா
உனக்குஅங்கு செண்பகப்பூ வியாபாரம் அந்த செண்பகத்தை
விலைமதித்து என்னைப்பெற்ற அப்பா நீபெற்ற
பெண்ணுக்கு இன்றுசீறுசெய்ய வாரதெப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தபழனிமலைகூடாரம் என்னைப்பெற்ற அப்பாவுனக்கு
அங்கு பாரிஜாதம் வியாபாரம் அந்தபாரிஜாதம் விலைமதித்து
என்னைப்பெற்ற அப்பா நீபெற்றபெண்ணுக்கு
இன்றுபாங்குசெய்ய வாரதெப்போ

## அத்தைக்குப் புலம்பல்

ஆத்திலேவாழைவெட்டி என்தகப்பனுடன்பிறந்த
அத்தையரே அந்த அடிவாழைநாருரித்து எனக்கு
அன்பில்லாத தாலி என்னைக்கொண்டமாமியரே
என்னைஇங்கு அழைத்துவந்து கட்டலாமா

சேத்திலேவாழைவெட்டி என்னைகொண்டசித்திராங்கி
அத்தையரே அந்த செவ்வாழைநாருரித்து எனக்கு
தெம்பில்லாத தாலி என்தகப்பனுடன்பிறந்த அத்தையரே
என்னைஇங்கு தேடிவந்து கட்டலாமா

பாலுதயிரிருக்கும் என்னைகொண்ட பழிகார அத்தையரே
உன்வாசலிலே பத்தெருமைகட்டிருக்கும் கொஞ்சம்
பாலெடுத்துநான்குடித்தால் என்னைக்கொண்ட மாமியாரே
என்னைப்பார்த்து மிரட்டிடுவாய்

எடுதயிரிருக்கும் என்னைக்கொண்ட வுதாரிமூண்டை
அத்தையரே உன்வாசலிலே எட்டெருமை கட்டிருக்கும்
கொஞ்சம் எடெடுத்து நான்குடித்தால் என்னைக்கொண்ட
கொடும்பாவி அத்தையரே அதைஎடுத்துவைப்பாய் கட்டுறியில்

நான்வுளுத்தவடையறியேன் என்னைக்கொண்ட வுதாரிமூண்டை
அத்தையரே உன்வாசலிலே நான் ஒருகரண்டி செய்யறியேன்
இந்தஊரூர்மதிப்பாரென்று என்தகப்பனுடன்பிறந்த
அத்தையரே நான் ஒப்புக்கு மாரடித்தேன்

நான்மஞ்சள் குளித்தறியேன் என்னைக்கொண்டமகாபாவி
அத்தையரே உன்வாசலிலே ஒருமருக்கொழுந்து மணமறியேன்
இங்குவந்தஜெனந் தான்மதிக்க என்வாயாடி அத்தையரே
நான்வோடிவந்து மாரடித்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணனுக்குப் புலம்பல்

வெள்ளைக்கடுதாசி என்பிறவி அண்ணாவே வுனக்கு அந்த
வடமதுரை மைகூடு நீ வைகுந்தம்போறேனென்று
என்பிறவிகண்ணாளா வுன்னுடன் பிறந்த தங்கைக்கு
ஒருசீட்டெழுதக் கூடாதா

சிகப்புகடுதாசி என்னுடன்பிறந்த அண்ணாவே
உனக்கு ஸ்ரீ ரங்கத்துமைக்கூடு நீசிவலோகம் போறேனென்று
என்பிறவிகண்ணாளா உன்னுடன்பிறந்த தங்கைக்கு
ஒருசீட்டெழுதக் கூடாதா

என்னைக்கட்டிகொடுத்தாயே என்பிறவிகண்ணாளா என்னை
ஒருகனத்தவீடுதேடியல்லோ நாங்கள் ஒத்துவாழும்நாளையிலே
என்பிறவி அண்ணாவே ஒருதரமும் வந்து பார்க்கலியே

எனக்குசீரும்சிறப்புகளும் அடாஎன்பிறவி அண்ணாவே
எனக்கு சிறந்தநல்ல பட்டுகளும் நான்கோரும்
நகைகளெல்லாம் என்பிறவி கண்ணாளா
எனக்கு கூசாமல் வாங்கிடுவாய்

நான்வாழ்ந்துவருவேனென்று என்னுடன்பிறந்த அண்ணாவே
அங்குநீவழிபார்த்து நீயிருப்பாய் இப்போ நீதாழ்ந்துமடிந்த
என்பிறவிகண்ணாளா உன்னுடன்பிறந்த தங்கையை
இங்குதேடுபவர் யாருமில்லை

உன்தங்கைசலித்துயென்பிறவி அண்ணாவே என்தாய்வீடு
தேடிவந்தால் என்னைதயவுடனே ஆதரிப்பாய் எனக்கு
தகுந்தஉபசாரம் செய்வாய் இந்தமங்கை சலித்தழுதால்
அடாஎன்பிறவிகண்ணாளா இந்தமாபாவி வாசலிலே என்னை
மதித்திடுவார் யாருமில்லை

## புருஷனுக்குப் புலம்பல்

ஜாதிமல்லிகைபூபூர்க்கும் என்னைத்தேடியராஜாவே நமது
சந்தணக்கல் மேடையிலே அங்குநான்சாய்ந்து அழுதேனென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ராசாவே மந்திரியே அந்தசிரங்கம் தான்கேழ்க்கும்
அந்தசாமிமலை ஓசையிடும் அந்தசாமிமலைதேவடியாள் சதுரை
நிறுத்திடுவாள் யெந்தன்செல்விகுறை கேட்டழுவாள்

கொடிமல்லிபூபூர்க்கும் என்னைத்தேடியராஜாவே நமது
கொத்தளத்துமேடையிலே அங்குநான்கூவி அழுதேனென்று
என்னைமாலையிட்டமன்மதரே அங்குகோவில் குளங்கேழ்க்கும்
திருக்கழுக்குன்றமலை ஓசையிடும் அந்தகுன்றமலை தேவடியாள்
கொலுவைநிறுத்திடுவாள் எந்தன் குரலோசை கேட்டழுவாள்

நான்பூர்க்கும் பிராயத்திலே என்னைத்தேடியராஜாவே
நான் ஒருபிஞ்சிவிடும் நாளையிலே உன்னைப்பார்த்து
அழைத்தானோ என்னைமாலையிட்ட மன்மதரே அந்தபழிகார
பிரம்மதேவன் என்னை இங்குபரதவிக்கவிட்டானோ

நான்காய்க்கும்பிராயத்திலே என்னைத்தேடியராஜாவே நானொரு
கனிபழுக்கும்நாளையிலே உம்மைதாக்கிவுயிர்விடவும் என்னை
மாலையிட்ட மன்மதரே அந்தசதிகார பிர்ம்மதேவன் உன்தலையில்
[விதித்தானோ

எனக்கு அண்ணன் இருந்தாலென்ன என்னைத்தேடிய
ராஜாவே அவன்யானைகட்டி வாழ்ந்தாலென்ன
என் அண்ணனிட மாளிகையில் என்ராஜாவே மந்திரியே
எனக்கு அங்கு அள்ளிதின்ன சொந்தமில்லை

எனக்கு தம்பியிருந்தாலென்ன என்ராஜாவே மந்திரியே
அவன் தனவந்தனாய் வாழ்ந்தாலென்ன என்தம்பியினிட
மாளிகையில் என்னைத்தேடிய ராஜாவே
எனக்கு அங்கு தங்கியிருக்க சொந்தமில்லை

என்கணவன் இருந்தாலும் அடியென்வீடுபெண்டுகளா
எனக்கு கட்டுமுண்டு திட்டமுண்டு நான்
கட்டியாள பட்டமுண்டு நான்களைத்து வருவேனென்று
எனக்குகளைதீர அன்னமுதுண்டு அன்னத்தை நான்புசித்து
அயர்ந்து படுத்தேனென்று எனக்கு ஆயிரம்பேர் தாதியுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைக்குப் புலம்பல்

அரும்பெடுத்துசெண்டுகட்டி அடாநான் பெற்றகண்ணுளா
அந்தஆண்டவனை பூசைசெய்தேன் அந்த ஆண்டவன்
வரத்தாலே அடாநான்பெற்றசெல்வமே நீ அருமைபிள்ளையாய்
[பிறந்தாயோடா
தும்பமலர் எடுத்து அடாநான்பெற்றசெல்வமே நூற்றிஎட்டு
சிவாலிங்கம் பூசைசெய்தேன் அந்தசிவனுர்வரத்தாலே
அடாநான் பெற்றயென்மகனே என்வயிற்றில் நீ சுதனுய்
[பிறந்தாயோடா
உன்னைவாசலிலே போட்டேனென்று அடாநான்பெற்ற
ரத்தினமே இங்குஉன்னை வெளவாலடிக்குமென்று
உன்னைகூடத்தில்போட்டேனென்று
அடாநான்பெற்றகண்ணுளா கிரகதோஷம்தாங்குமென்று
நான்காட்டிலே கோட்டைகட்டி அங்குநாலு மல்லர்
கால்வைத்தேன்
அந்ததுளசிமணிக்கட்டிலிலே அடாநான்பெற்ற என்மகனேநீ
தூங்குகிருய் என்றிருந்தேன் உன்தூக்கம்தெளியாமல் [ரோ
அடாநான்பெற்றரத்தினமே உன்னையெமதூதர் கொண்டு போனு
அந்தபவளமணிக்கட்டிலிலே அடாநான்பெற்றசெல்வமே நீ
படுத்திருக்காய் என்றிருந்தேன் நீ படுத்துவிழிக்குமுன்னம்
அடாநானபெற்றகண்ணுளா அந்தபரமர் அழைத்தாரோ
அந்தஎட்டடுக்கு கோட்டையிலே அடாநான்பெற்றமகனே
அங்குஇருந்து விளையாடாமல் இந்த இருளடைந்தகாட்டிலே
அடாநானபெற்றரததினமே அங்குஒரு
இனிவிளக்காய் நின்ருயோ
அந்தபத்தடுக்கு கோட்டையிலே அடாநான்பெற்ற
செல்வமே அங்குநீபடித்து விளையாடாமல்
இந்தபாழடைந்த காட்டிலே அடாநான்பெற்ற கண்ணுளா
அங்கு ஒரு பதிவிளக்காய் நின்ருயோ

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை-1. (1954.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org